# மெய்க்காப்பாளன்

## 1

விசுவஜித் தன் புல்லட் மோட்டார் சைக்கிளை ஸைட் ஸ்டாண்டில் சாய்த்து நிறுத்தினான். சாவியை உருவி பாண்ட் பாக்கெட்டில் போட்டான். க்ரய்க், க்ரய்க் என்று ஷூக்கள் ஒலிக்க, கார்களுக்கிடையில் புகுந்து அந்த காம்பவுண்டில் நுழைந்தான். கேட்டருகே சாம்பல் நிற உடையணிந்திருந்த காவல் ஊழியன் விசுவஜித்தைப் பார்த்ததும் விறைத்து ஒரு சல்யூட் பரிமாறினான். ஒரு சின்ன தலையசைப்பில் அதை ஏற்று, விசுவஜித் பளிங்குப் படிகளில் ஏறினான். தடிமனான கண்ணாடிக் கதவைத் திறந்தான். வலதுபுறம் இருந்த பார்மஸி, அதைத் தாண்டியதும் ரிசப்ஷன், அப்புறம் லிப்ட் எதிர்ப்பட்டவர்கள் சல்யூட்டினார்கள்.



விசுவஜித் தன் தொப்பியைக் கழற்றினான். புன்னகையுடன் அனைவரையும் கடந்தான். லிப்டில் நுழைந்தான். ஸ்ட்ரெச்சர்களும் அனுமதிக்கப்படுகிற அளவிற்கு பெரிய லிப்ட். ஆறாவது மாடியில் வெளிப்பட்டான்.

சுத்தமான காரிடார். ஷூக்களின் சப்தம் குறைக்க, நடையை நிதானமாக்கினான். எதிரே வந்த நர்ஸ் சிரித்தாள். "குட் ஈவினிங் இன்ஸ்பெக்டர்" என்றாள். "கொஞ்சம் வெயிட் பண்ணுங்கள். சந்தியாவைக் கூப்பிடுகிறேன்."

ஸ்டெயின்லஸ் ஸ்டீல் கூரையிலிருந்து மத்திய குளிர்விக்கப்பட்ட காற்று ஙணஙணவென்று இறங்கிச் சூழ்ந்தது. வீல்சேரில் ஒரு வயோதிகர் தள்ளிப் போகப் பட்டார். நர்ஸிடம் ஏதோ உத்தரவுகள் கொடுத்துக் கொண்டே, ஒரு அவசர டாக்டர் காரிடாரில் நடந்து லிப்டில் நுழைந்தார்.

"ஹாய்!"

சிந்தியா!

விசுவஜித் ஒவ்வொரு முறை அவளைப் பார்க்கும் போதும் தன்னுள் ஒரு வெளிச்சம் வெடிப்பதை உணர்ந்தான். கன்னங்களிலும் காதுகளின் பின்புறமும் ரத்தம் சீறிப் பாய்வதை கவனித்தான். சிந்தியாவைக் கேட்டால், மருத்துவச் சொற்களைக் கலந்து, உடம்புக்குள் ஏற்படுகிற ரசாயன மாற்றம் என்று குறிப்புகள் தருவாள்.

"பிஸியா?" என்றான்.

"நாட் ரியல்லி" என்றாள், சிந்தியா. "அந்த சோபாவில் உட்கார்ந்து புத்தகத்தைப் புரட்டிக் கொண்டிருங்கள். பேஷண்ட்டிற்கு இரண்டு மாத்திரை போட வேண்டும். போட்டு விட்டு வந்து விடுகிறேன்..." என்று ஒரு அறைக்குள் மறைந்தாள்.

விலை உயர்ந்த சோபா.

விசுவஜித் சென்று அமர்ந்தான். ஆங்கில வார இதழை எடுத்தான்.

**போலீஸ் என்ன விலை?**

என்று அட்டையிலேயே கேட்டிருந்தது. இன்ஸ்பெக்டர் ஒருத்தர் தொப்பியை மல்லாத்திப் பிடித்து ஒரு ரவுடியிடமிருந்து அதில் பணம் வாங்குவது போல் போட்டோ வெளியாகியிருந்தது.

விசுவஜித்தின் நரம்புகள் விறைத்தன. ரத்தம் சூடானது. பற்கள் கெட்டித்தன. அந்த அட்டையை அப்படியே உள்ளங்கையால் பற்றி கசக்கினான். போலீஸைப் பற்றி என்ன தெரியும். இந்த சில்லரை நிருபர்களுக்கு? ஏதோ ஒன்றிரண்டு பேர் மேலிடத்தில் கை நீட்டியிருக்கலாம். ஒன்றிரண்டு பேர் கீழ் மட்டத்தில் கை ஏந்தியிருக்கலாம். அதற்காக ஒட்டு மொத்தமாக போலீஸைப் பிச்சைக்காரர்கள் போலக் கேவலப்படுத்துவது என்ன நியாயம்?

வெயிலையும், மழையையும் பார்க்காமல் துணிச்சலாக எதிர் நின்று இத்தனை பேருக்கும் பாதுகாப்பு கொடுப்பதால்தானே, இத்தனை தூரம் அராஜக உரிமை எடுத்துக் கொள்கிறார்கள்? போலீஸ் வேலை என்ன நிருபர் வேலை போல குளுகுளு அறையில் சொகுசு நாற்காலியில் உட்கார்ந்து தேய்க்கும் ஜாலி வேலையா? ராஸ்க்கல்ஸ்...

"என்ன விசு... தனியே புலம்பிக் கொண்டிருக்கிறீர்கள்?" - சிந்தியா வெள்ளை உடையில் தேவதை மின்னலாய் நின்றாள். "ஐயையோ, மேகஸினைக் கசக்கி விட்டீர்கள்!"

"இதை எழுதினவன் கையில் கிடைத்தால் அவனையே கசக்கியிருப்பேன்" என்றான் விசுவஜித்.



"போலீஸைத் திட்டியதும் போலீஸ்காரருக்கு கோபம் வந்துவிட்டதாக்கும்!"

"உனக்கு வரவில்லையா?"

"வராமல்? போலீஸ் உத்தியோகத்தை யார் திட்டினாலும் மூக்குக்கு மேலே கோபம் வந்து விடும் எனக்கு. போலீஸ் வேலை இல்லாமல் இருந்திருந்தால் நான் என் ராஜகுமாரனை சந்தித்திருக்க முடியுமா?"

விசுவஜித்தின் முகத்தில் இருந்த இறுக்கம் மெல்ல தளர்ந்தது. சிந்தியாவின் மேஜிக் நிறைந்த விழிகள் அவனைச் சாய்த்து விட்டன.

"ஒரு காபி கிடைக்குமா?" என்றான்.

"கேன்ட்டீனிற்குப் போவோம்" என்றாள், சிந்தியா. இருவரும் லிப்டில் நுழைந்தார்கள். இறங்கினார்கள். தனியார் பொறுப்பில் மிக சுத்தமாக பராமரிக்கப்படும் கேன்ட்டீனில் நுழைந்ததும், டோக்கன் கிழிப்பவனிலிருந்து காபி ஊற்றுபவன் வரை அத்தனை பேரும் விசுவஜித்தை பரிச்சயப் புன்னகையால் வரவேற்றனர் -

விசுவஜித் பேண்ட் பாக்கெட்டிலிருந்து இரண்டு டிக்கெட்களை எடுத்து நீட்டினான்.

"ஹை! ஜேசுதாஸ் கச்சேரி!" என்றாள், சிந்தியா.

"நாளைக்கு சாயந்திரம் ஃப்ரீயாக வைத்துக் கொள்..." என்றான், விசுவஜித்.

"நான் மார்னிங் டூட்டி முடித்து ஃப்ரீயாக இருப்பேன். நீங்கள்?"

"ஊரிலிருந்து அத்தை வருகிறார்கள். அது இது என்று ஸ்டேஷனில் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். என்ன

வேலையாக இருந்தாலும் நாளைக்கு மாலை என்னை தொந்தரவு செய்யக்கூடாது என்று சொல்லி விட்டேன்."

"பைக் உண்டா?" - சிந்தியா கண்களில் ஆர்வம் மின்னக் கேட்டாள்.

"புல்லட் டிபார்ட்மெண்ட் வண்டி. அதை எடுத்து வர மாட்டேன், சிந்தியா. என்னுடைய டி.வி.எஸ். மொபெட் பரவாயில்லையா, சொல்..."

சிந்தியாவின் முகம் சுருங்கியது.

"மொபெட்டில் எனக்கு இஷ்டப்படி நான் உட்கார முடியாது..."

விசுவஜித் சிரித்தான். "அப்படியானால் ஆட்டோவில் போவோம்."

"இவ்வளவு ரூல் பேசுகிறவர் இப்போது மட்டும் புல்லட்டில் வரலாமா?"

"கூடாதுதான். தப்புதான்... உன்னைப் பார்க்க வேண்டும் என்று மூடு வந்துவிட்டால் ரூல்ஸைக் கூடக் கழற்றி வைக்கிற அளவு கெட்ட பையனாக மாறி விடுகிறேன், நான்..."

சிந்தியா காபிக் கோப்பையை வைத்தாள். "சரி, ஒரு விஷயத்திற்காவது நோ சொல்லாமல் இருப்பீர்களா?"

"என்ன?"

"என்னை ஹாஸ்டலில் வந்து பிக் - அப் செய்ய வேண்டும்..."

"நோ ப்ராப்ளம்..." என்றான், விசுவஜித். "என்ன டிரஸ் போட்டு வரட்டும்?"



"நிச்சயம் இந்த மொறமொறப்பு டிரஸ் வேண்டாம்..." என்று அவன் காக்கிச் சட்டையை நுனி விரலால் தொட்டாள், சிந்தியா. "நான் என்ன ஸாரி கட்டிக் கொள்ளப் போகிறேன், தெரியுமா?"

"சந்தனக் கலர்?"

"ஆமாம். நீங்கள் வாங்கிக் கொடுத்தது... ஐ லவ் இட்..."

"ஸாரியைத் தானா?"

"இல்லைடா. உன்னையும்..." என்று சொல்லி குதூகலமாக சிரித்தாள், சிந்தியா - மறுநாள் பற்றி எதுவும் தெரியாதவளாக.

## 2

தேவகி தன் செருப்புகளைத் தட்டி, மண் உதிர்த்து விட்டு, அந்த டிபார்ட்மெண்ட் ஸ்டோரில் நுழைந்தாள். சுய சேவைப் பிரிவு என்று அறிவிக்கப்பட்டிருந்த அந்த அங்காடியில், பொருள்களை எடுத்துக்கொள்ள கூடைகளும், சிறு வண்டிகளும் ஒரு புறம் நிறுத்தப்பட்டிருந்தன.

வெள்ளைக் கோட் அணிந்த ஒரு சிப்பந்திப்பெண் தேவகியைத் தடுத்தாள். "பையெல்லாம் உள்ளே எடுத்துப் போகக் கூடாதும்மா..."

"பர்ஸ் மட்டுமாவது?" என்று அப்பாவி போல் முகத்தை வைத்துக் கொண்டு தேவகி கேட்டாள்.

பர்ஸ் அனுமதிக்கப்பட்டது. கொண்டு வந்திருந்த பையை கவுண்ட்டரில் கொடுத்து, அதற்கான டோக்கன் வாங்கிக் கொண்டாள். ஒரு கூடையை எடுத்துக் கொண் டாள். வாடிக்கையாளர்கள் அங்கங்கே பரவியிருந்தனர். தினத்தின் அந்த நேரத்தில் வாடிக்கையாளர் கூட்டம் இருக்காது என்ற தைரியத்தில்தான், தேவகி அப்போது நுழையத் தேர்ந்தெடுத்தாள்.

அலமாரிகளில் அழகாக, அமைப்பாக அடுக்கப் பட்டிருந்த பொருட்களை கவனித்துக் கொண்டே வந்தாள் தேவகி. ஒரு பிஸ்கெட் பாக்கெட், ஒரு கடலை உருண்டை பொட்டலம். ஒரு சோப் வில்லை இவை மட்டுமே கூடையில் எடுத்துப் போட்டாள்.

காஸ்மெடிக்ஸ் பிரிவில் ஒவ்வொன்றாய் உன்னிப்பாக கவனித்து எடுப்பதும், விலை பார்ப்பதும், திருப்பி வைப்பதுமாய் சில கணங்கள் செலவு செய்தாள்.

இதோ கைக்கு அடக்கமாய் டபிள் ஷேட் லிப்ஸ்டிக். வெளிநாட்டு சமாச்சாரம். எண்பத்தைந்து ரூபாய் என்று ஸ்டிக்கர் ஒட்டியிருந்தது. எடுத்தாள். உள்ளங்கையில் மறைத்தாள். கழுத்தை சொறிந்து கொள்வது போல கை உயர்த்தி, அதை ரவிக்கைக்குள் நழுவ விட்டாள். இத்த ணூண்டு பர்ஃப்யூம் பாட்டில் தொண்ணூற்றியிரண்டு ரூபாய். இந்த நக பாலீஷ் இருபத்தியொன்பது ரூபாய்.

சற்று நேரத்திற்குள் ரவிக்கைக்குள் ஆறேழு சமாச் சாரங்கள் நழுவி விட்டன. தேவகி அதற்கு மேல் ஒரே நாளில் ரிஸ்க் எடுக்க விரும்பவில்லை.

கூடையுடன் பில் போடும் இடம் வந்தாள்.



அவள் முகத்தில் சற்றும் சலனம் இல்லை. மிக அழகாக பில் போடும் இளைஞனுக்கு ஒரு புன்னகை ஈந்தாள். பில் தொகையை பர்ஸிலிருந்து எடுத்துக் கொடுத்தாள்.

தன் பையை விட்டு வைத்திருந்த கவுண்ட்டருக்கு நடந்தபோது, சனியன் பிடித்த செருப்பு அறுந்தது. ஹவாய் செருப்பு. அதன் ஓட்டையில் பட்டையை நுழைத்து சரி பண்ணலாம். ஆனால், குனிய வேண்டுமே. குனிந்தால் ரவிக்கைக்குள்ளிருந்து ஒப்பனைப் பொருள்கள் வெளியே குதித்து அவள் மானத்தை வாங்கிவிடும். செருப்பை அப்படியே தேய்த்து தேய்த்து கவுண்ட்டர் வரை நடந்தாள். செருப்பு புரண்டது. அவளைக் கவிழ்த்துவிட முயற்சித்தது. டோக்கனும், புன்னகையும் கொடுத்து பையை வாங்கி னாள். வாங்கிய பொருட்களை அதில் போட்டாள். பேசாமல் இந்த செருப்பை இங்கேயே உதறிவிட்டுப் போய் விடலாமா என்று கூட ஆத்திரம் வந்தது.

படிகளில் தடுமாறி இறங்கினாள். கீழ்ப் பகுதியில் இருந்த டாய்லெட் பிரிவிற்குள் நுழைந்தாள். பெண்கள் பகுதியில் நுழைந்து கதவு சாத்தியதும் தான் அவள் முகம் சீரானது. ஒளித்து எடுத்து வந்த பொருள்களை பைக்கு மாற்றிக் கொண்டாள். உட்கார்ந்து செருப்பை சரி செய் தாள்.

இழந்த உற்சாகம் மீண்டது. துள்ளலுடன் வெளிப் பட்டாள். இரண்டு தெருக்களை வேகமாகக் கடந்ததும், அவளுடைய வாடிக்கையான கடை வந்தது.

ஃபேன்ஸி மாளிகை என்று போர்டு வைத்து, கல்லா வில் உட்கார்ந்திருந்த ஃப்ரென்ச் தாடிக்காரனிடம் போய் நின்றாள். பையிலிருந்து ஒவ்வொரு பொருளாக வெளியே எடுத்து வைத்தாள்.

"விலை ஸ்டிக்கரைக் கூட கிழிக்காமல் அப்படியே கொண்டு வருகிறாயே, யாராவது பார்த்தால்?" - கல் லாக்காரன் கடுப்படித்தான்.

"ஆமாம். அங்கேயே உட்கார்ந்து கடைப்பெயர் தெரியக் கூடாது என்று ஸ்டிக்கரை கிழிக்கிறேன். போலீஸ் வந்து பிடித்துப் போகட்டும்..." என்று பதிலுக்குக் கடுப் படித்தாள், தேவகி.

கல்லாக்காரன் அவளை நிமிர்ந்து முறைத்து விட்டு அவள் கொண்டு வந்திருந்த பொருள்களின் மதிப்பை ஒரு சிறு தாளில் எழுதிக் காட்டினான்.

"மொத்தம் முன்னூற்றி நான்கு ரூபாய் வருகிறது... இந்தா..." கல்லாவிலிருந்து நூற்றி எழுபத்தைந்து ரூபாயை எடுத்து அவளிடம் நீட்டினான்.

"ஆனாலும், இது ரொம்பக் குறைவு..."

"திருட்டுப் பொருள் வாங்குவதே ரிஸ்க். அந்த ரிஸ்க் எடுப்பவன் நான். அத்தனை பணத்தையும் உனக்கே தூக்கிக் கொடுத்துவிட்டு கட்டை விரலைச் சப்பிக் கொண்டு இங்கே உட்காரச் சொல்கிறாயா?" அவன் குரலை உயர்த்தியதும், தேவகி அடங்கினாள்.

பணத்தை வாரி பர்ஸில் போட்டுக் கொண்டு வெளி யேறினாள்.

நூற்றி எழுபத்தைந்து ரூபாய்! அவள் குடியிருக்கும் புறாக் கூண்டு ரூமிற்குத் தூக்கிக் கொடுத்து விட்டால் சரியாகப் போய்விடும்.

எத்தனை நாளைக்கு இப்படி சில்லரைத் திருட்டு களாகவே ஐந்திற்கும், பத்திற்கும் அலைந்து கொண் டிருப்பது?



நகைக் கடையைத் தாண்டும்போது சற்றுத் தயங்கி நின்றாள்.

நாளைக்கு இந்த நகைக் கடையில் புகுந்து பார்த்தால் என்ன?

யெஸ், யெஸ், யெஸ்!

அவள் வாயில் எச்சில் ஊறியது. அவளிடம் ஒரு பழைய வெள்ளிக் கொலுசு இருந்தது. அதை சாக்காக வைத்து அந்தக் கடையில் நுழைந்து - மறுநாளைப் பற்றி அவள் திட்டமிடத் துவங்கி விட்டாள் - அந்தக் கடையில் நுழைவதால் அவள் வாழ்க்கையே திசை மாறப் போகிறது என்பதை அறியாதவளாக.

## 3

அந்த பர்மிட் ரூமில் சிகரெட் புகை சுருண்டு சூழ்ந் திருந்தது.

அடைக்கப்பட்ட வெளிச்சத்தில் கடைசி மேஜையைச் சுற்றி அந்த நான்கு பேர் உட்கார்ந்திருந்தனர். இளைஞர் கள். நால்வரில் மூவர் ஓசியில் சாப்பிட வந்தவர்கள் என்று பார்த்த மாத்திரத்திலேயே புரிந்து போனது.

சட்டையின் மேல் பொத்தான்களை விடுவித்து, ரோமம் அடர்ந்த மார்பை பனியனியல்லாமல் திறந்து காட்டியபடி, சிகரெட்டை சுவாசித்துக் கொண்டிருந்த அனந்தராம், தடிமனான தங்கச் சங்கிலியை உருவி

விட்டான். உடலில் நிறைய இடங்களில் வியர்வை மினுமினுப்பு.

''பிட்ச்'' என்றான், திடீரென்று, ''தங்கமும், வெள்ளியுமாக எவ்வளவு வாரியிறைத்திருப்பேன், அவளுக்கு. அவள் இருக்கும் வீடு யார் கொடுத்தது?''

''நீ கொடுத்ததுதான்'' என்றான் ஒரு நண்பன்.

''ஸ்கூட்டர்?''

''அதுவும் நீ வாங்கித் தந்தது தான்'' என்றான் அடுத்தவன்.

''வார்ட்ரோப் நிறைய துணிகள் அடுக்கி வைத்திருக்கிறாளே, அது?''

''உன்னைத் தவிர வேறு யார் அவளுக்கு வாங்கித் தரப் போகிறார்கள்?''

''அப்புறம் ஏன்டா எனக்கு துரோகம் செய்கிறாள்?'' - அனந்தராமின் மூக்கு சிவந்தது. கன்ன மேடுகள் துடித்தன. நெற்றி சூடானது. கண்கள் காழ்ப்பில் சுருங்கின.

''விடு அனந்த்... அவள் யோக்யதை அவ்வளவுதான்!''

''என்னிடம் இல்லாத என்ன ......... இருக்கிறது என்று அந்தச் சிறுக்கி இன்னொருத்தனைத் தேடிப் போனாள்?''

''காசை விட்டெறிந்தால் ஆயிரம் பேர் அதைப்போல வருவார்கள், அனந்த்.''

''ஆயிரம் பேர் வரட்டும், வராமல் போகட்டும். ஆனால், அனந்தராமிற்கு துரோகம் செய்துவிட்டு அந்த சிந்தாமணி தப்பித்ததாக சரித்திரம் சொல்லக்கூடாது...'' - அனந்தராமின் குரலில் உஷ்ணம் வழிந்தது.



''என்ன செய்ய வேண்டும், சொல். முகத்தில் ஆஸிட் ஊற்றட்டுமா?''

''கழுத்தில் கத்தியால் ஒரு கோடு போடட்டுமா?''

''முழங்காலுக்குக் கீழே முறித்து உடைக்கட்டுமா?''

''இல்லை. நீங்கள் செய்ய வேண்டாம். நானே என் கையால் அவளைக் கதறடிக்க வேண்டும்.''

''உனக்கென்ன மூளை மழுங்கி விட்டதா அனந்த்? நீ ஒரு யாரோ இல்லை. சிவநேசனின் தம்பி...''

''அதனால் என்ன?''

''உன் அண்ணனுக்கு சமூகத்தில் இருக்கும் அந்தஸ்து உனக்குத் தெரியும்...''

''கள்ளக்கடத்தல் மன்னன், பீரோ பீரோவாக பணம் நிரம்பி வழிகிறது. அதனாலேயே அத்தனை போலீஸும் அவரிடம் அடிமை...''

''இல்லை, அனந்த். அத்தனை போலீஸும் இல்லை. உன் அண்ணன் ஏதாவது ஒரு தப்பு செய்வாரா, மடக்கிப் பிடித்து விட வேண்டும் என்ற வெறியுடன் சில போலீஸ் அதிகாரிகள் காத்திருப்பதாகவும் நீயே சொல்லியிருக்கிறாய்...''

''சிந்தாவுக்கும் எனக்கும் நடுவில் நடக்கிற சமாச்சாரம். இதில் என் அண்ணன் எங்கே வந்தார்?''

''வேண்டாம். அனந்த். நீ சொடக்குப் போட்டால் ஓடிப்போய் செய்வதற்கு நூறு பேர் இருக்கும்போது, நீயே இன்வால்வ் ஆக வேண்டிய அவசியம் இல்லை...''

"நோ. இது என் ஈகோ ப்ராப்ளம். நாளைக்கு மாலை நாங்கள் சந்திப்பதாக இருக்கிறது. அது கடைசி சந்திப்பாக இருக்கப் போகிறது" என்றான், அனந்தராம் தீர்மானமாக.

அவனுடைய பிடிவாதம் புரிந்திருந்த மற்றவர்கள் இனி அவன் மனதை அசைக்க முடியாது என்று புரிந்தவர்களாக மௌனம் சாதித்தார்கள்.

"எங்கள் சந்திப்பு நிகழும் அதே நேரத்தில் நான் வேறு இடத்தில் இருந்ததாக அண்ணனுக்குத் தெரிந்த இன்ஸ் பெக்டர் யாரிடமாவது சொல்லி ஒரு அலிபை ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும். அவ்வளவுதான்..."

அனந்தராம் சிகரெட்டை நகர்த்திவிட்டு, அவர்களுடன் தீவிரமாகத் திட்டமிடலானான் - மறுநாள் மாலையைப் பற்றி.

## 4

மறுநாள்.

சிந்தாமணி தெருமுனையிலேயே ஆட்டோவிலிருந்து இறங்கிக் கொண்டாள். அனந்தராமின் உத்தரவு. அவளும் அவனும் சந்திப்பதற்கென்றே, அந்தத் தெருவில் அவன் வாடகைக்குப் பிடித்திருந்த பிரத்யேக வீட்டிற்கு அவள் வரும்போதெல்லாம், தெருமுனையிலேயே இறங்கி விட வேண்டும் என்று சொல்லியிருந்தான்.



சிந்தாமணி தன் ஹேண்ட்பேகை தோளில் மாட்டி, ஹீல்ஸ் ஒலிக்க அந்த வீட்டை நோக்கி நடந்தாள்.

சிந்தாமணி சராசரி உயரத்திற்கு சற்றுக்குள்ளம் என்பதால் அவளுக்கு அந்த ஹீல்ஸ்கள் எப்போதும் தேவைப்பட்டன. சிந்தாமணியின் உயரம் குறைவே தவிர, அவளுடைய முக அழகு அசத்தலானது. உடல் வளைவுகள் அமர்க்களமானவை. அவள் நடக்கும்போது இடுப்பு ஒடித்துத் திரும்பும். உருண்டு அடங்கும்.

வெயில் மறைந்து நிழலாய் இருந்தது தெரு. ஒன்றிரண்டு வீடுகளில் வாசல் விளக்குகளை எரிய விட்டார்கள்.

சிந்தாமணி வீடு அடைந்து, தன்னிடமிருந்த சாவியால் கதவு திறந்து நுழைந்தாள்.

சிறிய வீடு. ஹால். ஒரு ஹாலிற்குத் தேவையான சோபா செட். பூ ஜாடிகள். அலங்கார ஸ்டாண்டில் டெலிவிஷன். வீடியோ டெக். டெக்கைக் கொண்டு வந்தது அனந்தராம்தான். அவளுடன் தனிமையில் சில இறக்குமதிப் படங்கள் பார்ப்பதற்கென்றே கொண்டு வந்த டெக்.

சிந்தாமணிக்கு சற்று அலுப்பாயிருந்தது. அனந்தராம் அவள் பால் கொண்ட கவர்ச்சி அவளுக்கு ஆரம்பத்தில் தித்திப்பாய் இருந்தது. ஒரு ஹோட்டலில் அறுநூறு ரூபாய்க்கு டெலிபோன் ஆப்பரேட்டராய் இருந்த போது நிகழ்ந்த சந்திப்பு, அவன் நிழல் அவளுக்கு சௌகர்யமாயிருந்தது. வீடு, ஸ்கூட்டர், உடைகள், சோபா செட், கட்டில் படுக்கை, டெலிவிஷன், கழுத்திலும், காதிலும் அலங்கரிக்க தங்கம், பேங்க்கில் கணிசமான தொகை.

அவளுக்கு வாழ்க்கை அத்தனை சௌகர்யமானதாய் அதற்கு முன் இருந்ததே இல்லை. எனவேதான் ஏழு ஜென்ம அதிர்ஷ்டம் என்றே அனந்தராமனை உருவகப் படுத்திப் பார்க்கத் தோன்றியது. ஆனால், அவனுடைய கட்டுப்பாடுகள். சில நிபந்தனைகள் அவளுடைய சுதந்திரத்தைப் பங்கப்படுத்தின. தங்கச் சங்கிலியில் கட்டப்பட்ட நாய்க்குட்டி வாழ்க்கை அவளுக்குப் பிடிக்க வில்லை. தங்கக் கூண்டுக்குள் சிறகுகளைக் கூட அசைக்க முடியாத வாழ்க்கை விரைவில் அலுத்துப் போனது. அனந்தராம் விருப்பப்பட்டபோது அவள் தயாரா யிருக்க வேண்டும். அவன் திடீர் திடீர் என்று சில வாரங்களுக்குத் திரும்பிப் பார்க்காமலே இருந்தால் கூட ஏன் என்று கேட்கக்கூடாது.

அனந்தராமைப் பற்றி அவள் கொஞ்சம் கொஞ்சமாகத் தெரிந்து கொண்டபோது, அதிர்ச்சியாயிருந்தது. அவ னுடைய அண்ணன் சமூகத்தில் பலசாலி. ஆனால், சமூக நியதிகளின்படி நல்லவனா என்று கேட்டால் இல்லை என்றுதான் தீர்மானிக்கத் தோன்றும். கள்ளக் கடத்தலாம். கஞ்சா விற்பனையாம். அரசியல் கட்சிகளுக்கு அடிதடி களுக்கான ஆட்கள் சப்ளையாம். அனந்தராமும் அவன் அண்ணனின் நிழலில் தொழிலின் பாடங்களைக் கற்றுக் கொண்டிருப்பதாகவும், விரைவிலேயே அவனுக்கு ஒரு ஏரியா பிரித்துத் தரப்பட இருக்கிறது என்றும் கூட அவளுக்குத் தெரிந்திருந்தது.

அப்படியொரு நாள் வந்து விட்டால் அவனுடைய பலம் பெருகி விடும். செல்வாக்கு உயர்ந்து விடும். வசதி கள் கூடி வரும். அவளுக்கும் அத்தனையும் பொழியப்படும் என்று தெரிந்திருந்தும். அவள் ஒரு தப்பு செய்து விட்டாள்.



அவள் குடியிருந்த பகுதியில் வாடகை நூலகத்திற்கு அடிக்கடி போய் வரும்போது, அவள் ரசனை அறிந்து புத்தகங்கள் எடுத்துத் தர ஆரம்பித்த கேசவ் பால் அவள் ஈர்க்கப்பட்டு விட்டாள்.

கேசவ் ஒரு சாதாரண நூலகன். வாடகை நூலகம் மூலம் கிடைக்கும் சொற்ப வருமானம்தான் அவனுடைய வாழ்க்கைக்கான பிடி சோறு. ஆனாலும், அவனுடைய கம்பீரம், அணுகுமுறை எல்லாம் அவளை அசைத்து விட்டன. மிகவும், கவர்ந்து விட்டன.

அவனோடு பேசிக் கொண்டிருந்தாலே பொழுது சுகமாய் இருந்தது. அவனுடன் பீச் போனபோது மகிழ்ச்சியா யிருந்தது. அவனோடு சினிமா போன போது ஜாலியாய் இருந்தது. அந்த குதூகல சந்தோஷ குஷியில் அனந்த ராமின் ஆபத்தான கோபம் பற்றி மறந்து போனது.

அவனுக்குக் கோபம் வந்தால் எச்சரிப்பான். எச்சரிக்கை வந்தால், அதற்கப்புறம் ஒரு தடவை கூட தவறு செய்யாமல் முழுக்க முழுக்க அவனுடைய அடிமையாய்க் காட்டிக் கொள்ளலாம் என்று முடிவெடுத்திருந்தாள்.

இன்றைக்கு அவனிடமிருந்து போன் வந்திருந்தது - வரச் சொல்லி. கேசவ் பார்க்கலாம் என்று சொல்லியிருந்த போதிலும், அந்த சந்திப்பைத் தவிர்த்துவிட்டு அவள் அனந்தராமைத் தேடி வந்திருந்தது - அவன் பேரில் இருந்த அதீத பயம் காரணமாகத்தான்.

அவன் வந்தவுடன் என்ன கேட்பான் என்று அவ ளுக்குத் தெரியும். ஃப்ரிட்ஜிலிருந்து ஐஸ் கட்டிகள் எடுத்து வைத்தாள். குளிர்ந்த சோடா பாட்டில்களை எடுத்து

டீப்பாயில் வைத்தாள். கேபினட் திறந்து அனந்தராமிற்குப் பிடித்தமான விஸ்கி பாட்டிலை எடுத்து வைத்தாள்.

கூந்தலைத் தளர வாரிக்கொண்டாள். பர்ஃப்யூமை உடம்பில் அங்கங்கே விசிறிக் கொண்டாள். ரிக்கார்டரில் அவனுக்குப் பிடித்தமான பாப் இசையை அடக்கி ஓட விட்டாள்.

கட்டிலில் ஒயிலாக உட்கார்ந்து, அனந்தராமிற்காகக் காத்திருந்தாள்.

* * *

வெளியிலிருந்து பார்த்ததை விட நகைக்கடை உள்ளே மிகப் பெரியதாக இருந்தது.

தேவகி தன் நைந்து போன கொலுசை எடுத்துக் கொண்டு இரண்டு மூன்று கவுண்ட்டரில் விசாரித்து விட்டு மெல்லக் கூட்டத்தில் கலந்தாள்.

ரேஷன் கடையில்தான் அவள் கூட்டங்களைப் பார்த்திருக்கிறாள். ஒரு கிராம் எட்டு நூறும், தொள்ளாயிரமும் விற்கிற நகைக் கடையில் கூட இவ்வளவு கூட்டம் இருக்க முடியுமா? அவளுக்கு ஆச்சரியமாயிருந்தது.

இத்தனை பேரிடம் பணம் குவிந்து கிடக்கிறது!

கவுண்ட்டரில் சிகப்பு திருமண் இட்ட இளைஞர்கள் தெலுங்கில் உரையாடிக் கொண்டு நகைகளை எடுத்துக் காட்டுவதை கவனித்தாள். வெல்வெட் துணி வைத்த பெட்டிகளில் வரிசை வரிசையாய் மோதிரங்கள், தோடுகள், சங்கிலிகள், டாலர்கள். இளைஞர்கள் எடுத்துக் காட்டும் வேகம் அவளுக்கு வியப்பாகயிருந்தது. எவ்



வளவு அலட்சியமாக இத்தனைத் தங்கத்தையும் கையாள் கிறார்கள்!

இவ்வளவு நகைகள் ஒரு சமயத்தில் கவுண்ட்டரில் புரள்கின்றனவே, இதில் ஒன்றிரண்டு குறைந்து போனால் எப்படிக் கண்டு பிடிப்பார்கள்?

சில சமயம் நகைகள் வெவ்வேறு கவுண்ட்டர்களுக்குப் பயணம் செய்தன. இதற்கெல்லாம் கணக்கு இருக்குமா என்று அவளுக்கு சந்தேகமாக இருந்தது.

கவுண்ட்டர்களின் அமைப்பையும், விற்பனை முறையை யும் அவள் சற்று நேரம் கவனித்தாள். திட்டமிட்டாள்.

வளையல்கள் விற்கும் கவுண்ட்டரில் போய் கூட்டத் திற்குக் குறுக்கே முண்டியடித்து நின்றாள்.

''மெஷின் கட் வளையல் இருக்கிறதா? எங்கே டிஸைன் காட்டுங்கள்...''

பன்னிரண்டு ஜோடி வளையல்கள் அவளிடம் நீட் டப்பட்டன. அதை வாங்கி வளையல்களைப் புரட்டினாள். இரண்டை அணிந்து பார்த்துக் கழற்றினாள். வேறு இரண்டை எடை போடச் சொல்லி விலை விபரம் விசாரித் தாள். முடிவெடுக்க முடியாதவள் போல இரண்டு ஜோடி வளையல்களை வைத்து இதுவா அதுவா என்ற குழப்பம் முகத்தில் காட்டினாள். ஒரு ஜோடியைக் கையில் அணிந்து அழகு பார்த்து மற்றதை மறுபடி பில்போடச் சொல்லி, அவள் குழப்பியதில், கவுண்ட்டர் இளைஞன் தடுமாறினான்.

விலை விபரம் சொன்னபோது, ''இரண்டாயிரம் குறை வாக இருக்கிறது. போய் எடுத்து வருகிறேன்'' என்று கிளம்பினாள்.

''சரியான சாவு கிராக்கி'' என்று அவன் முணுமுணுத்து, வளையல்களை வெல்வெட் டப்பாவில் பழையபடி அமைத்தபோது தான் ஒரு ஜோடி வளையல்கள் குறைவதைக் கவனித்தான். அவள் கடைசியாகக் கையில் அணிந்து பார்த்த இரண்டு வளையல்களை அவள் கழற்றவில்லை என்பது உறைத்து, ''ஏய், அவளைப் பிடி'' என்று கத்தி, அது கூட்டத்தில் யார் என்று புரியாமல் குழப்பப்பட்டு, சேதி ஒலிபரப்பாகி முடிகையில், தேவகி கதவைத் தாண்டி விட்டாள்.

''அந்த சிவப்புப் புடவைக்காரியைப் பிடி...'' என்ற குரல் அவள் காதுகளிலும் விழுந்தது.

பரபரப்பாக நடைபாதையில் இருந்த கூட்டத்தில் கலந்து சப்வேயில் பாய்ந்து இறங்கி விட்டாள்.

பின்னால் கூச்சலாகக் குரல் கேட்டுத் திரும்பினாள். நகைக்கடையின் வாட்ச்மேன் சீருடை அணிந்த கதவு திறக்கும் சிப்பந்தி.

தேவகி சரேலென்று இடதுபுறம் சப்வே முடிவில் ஏறி நடைபாதைக் கடைகளைத் தாண்டி, குறுக்கில் இருந்த சந்தில் புகுந்தாள்.

இருட்டு துவங்கியிருந்தது.

கால்கள் துரத்தும் சத்தம் கேட்டது. அந்த சந்திலிருந்து வெட்டிப்பிரியும் இன்னொரு தெருவிற்குள் புகுந்தாள். பிளாட்பாரத்தில் ஓங்கி வளர்ந்திருந்த ஒரு மரத்தின் உடம்பின் பின்னே அவசரமாக மறைந்து நின்றாள்.

கடைச் சிப்பந்தியின் உருவம் தெருமுனையில் தெரிந்தது. அங்கிருந்த சைக்கிள் ரிக்ஷாக்காரனிடம்



அவன் விசாரிப்பது தெரிந்தது. விசாரணையில் உருப்படியான தகவல் கிடைக்காதவன் போல தெருவின் இடதும் வலதும் கண்களால் அழுத்தமாக மேய்ந்து கொண்டு அவன் முன்னேறலானான்.

இப்போது மரத்தின் பின்னாலிருந்து தேவகி வெளிப்பட்டால் நிச்சயம் அவன் கண்களில் மாட்டி விடுவாள். நகராமல் அங்கேயே இருந்தால், அவன் நெருங்கி வந்ததும் கண்டு பிடித்து விடுவான்.

தேவகியின் உடல் குப்பென்று வியர்த்து விட்டது. நடுங்கியது. மூலையில் மாட்டிய எலிபோல கண்கள் தப்பிக்க வழி தேடி இங்கும் அங்கும் அலைந்தன. அப்போதுதான் அந்த வீட்டைக் கவனித்தாள்.

அவள் ஒளிந்திருந்த மரத்திற்கு நேர் பின்னே இருந்த வீடு. காம்பவுண்டு சுவர் ஓரிடத்தில் இடிந்து ஒரு ஆள் நுழைகிற அளவு பிளவு இருந்தது. அந்தப் பிளவு வழியே யாரும் வரக்கூடாது என்று எப்போதோ மறித்துப் போட்ட முள் செடிகள் காய்ந்து சுருங்கி அடங்கியிருந்தன.

வேறு வழியில்லை. தேவகி அந்தச் செடிகளை நகர்த்தி சட்டென்று அந்த காம்பவுண்டில் நுழைந்து விட்டாள்.

கட்டுப்பாடில்லாமல் வளர்ந்திருந்த புல்லை மிதித்து நிழலோடு விடுவிடுவென்று நடந்து வீட்டின் பின்புறம் சுவர் அருகே ஒண்டிக் கொண்டாள்.

நகைக்கடையிலிருந்து ஒன்றிரண்டு சிப்பந்திகளும் அதே தெருவிற்குத் தேடிக்கொண்டு வந்து விட்டார்கள்.

85298

இங்கே எங்கேயோதான் அந்தத் திருடி ஒளிந்திருக்க வேண்டும் என்று அவர்களுக்குள் உரக்க முணுமுணுத்தது அவள் காதுகளில் விழுந்தது.

இப்போதைக்கு அந்தத் தெருவிற்குள் நுழைய முடியாது. அவள் இருதயம் பலக் பலக் என்று அடித்து இதுவரை இப்படி மாட்டியதே இல்லை. என்ன செய்வார்கள்? அடித்துப் பின்னுவார்களா? தோல் உரித்துக் கிழிப்பார்களா? ரத்தம் வர ரத்தம் வர மண்ணில் புரட்டி எடுப்பார்களா? நினைக்க நினைக்க அவளுள் அச்சம் ஊறியது.

சுவரை இன்னும் அழுத்தியபோது வலது தோள் கதவில் பட்டு, கதவு பளிச்சென்று திறந்தது. திடுக்கிட்டாள்.

வீட்டின் பின்புறக் கதவு. தாளிடப்படாமல் இருக்கிறது. திறந்து வைத்திருக்கிறது. ஏன்? அவளுக்காகத்தானா?

மெல்ல அந்தக் கதவு வழியே உள்ளே நுழைந்தாள். சிறு வராண்டா. பாத்ரூம் லெட்ரீன். வராண்டா முடிவில் கதவு. கதவு தாண்டியதும், ஹால். ஹாலிலிருந்து பிரியும் இன்னொரு கதவு. ஒரு பெட்ரூம் கட்டில். அதில் ஒயிலாக ஒரு பெண்!

தேவகி ஆச்சரியமானாள். என்ன தைரியம்! கதவைத் திறந்து போட்டு விட்டு இப்படி ஹாயாக இந்தப் பெண் உட்கார்ந்திருக்கிறதே! யாராவது திருடன் வந்தால்? அந்த நினைப்பே தேவகியின் உதடுகளில் புன்னகை கொண்டு வந்தது. திருடன்! அவள் மட்டும் என்ன? திருடி!

பழையபடி ஒதுங்கித் திரும்பலாம் என்று அவள் நினைத்த நேரத்தில் வாசலில் ஒரு கார் வந்து நிற்கும் சப்தம் கேட்டது.



அந்தப் பெண் பரபரப்பாக எழுந்து வாசலுக்கு ஓடினாள். கதவு திறக்க.

பெட்ரூமில் டீப்பாயின் மீது இருந்த வாட்ச் மின்னியது. அதன் அருகே இருந்த லேடீஸ் பர்ஸ் கூப்பிட்டது.

ஒரு கணம் உள்ளே தாவி அந்த பர்ஸையும், வாட்ச்சையும் அள்ளிக் கொண்டு பின் கதவு வழியே பறந்து விடலாம் என்று தேவகி முடிவு செய்தாள். சரேலென்று பெட்ரூமில் நுழைந்தாள்.

வாட்சை எடுக்கப் போனபோது, காலடிச் சத்தம் சமீபித்து விட்டது.

''நேரே பெட்ரூம் தானா?'' என்று அந்தப் பெண் கொஞ்சலாய்க் கேட்டது தேவகியின் காதில் ஆஸிடாக இறங்கியது.

மாட்டப் போகிறேன். இன்றைக்கு ஏன் இப்படி முட்டாள்தனமான காரியங்களாக செய்து கொண்டிருக்கிறேன்?

அரைக்கணம் தாமதித்தால் கூட மாட்டி விடுவோம் என்ற அச்சம் அவளை சரேலென செலுத்தியது. கட்டிலுக் கடியில் பாய்ந்து ஒளிந்தாள். அவள் கால் விரல்களை உள்ளே இழுத்துக் கொண்டு இரண்டு விநாடிகள் கூட ஆகியிருக்காது - அவர்கள் அந்த ரூமிற்குள் நுழைந்தார்கள்.

அந்தப் பெண்ணின் வசீகரம் தேவகியை அசத்தியது. உயரம் குறைவாக இருந்த போதிலும் எவ்வளவு அழகாய் இருக்கிறது இந்தப் பெண்! அந்த இளைஞன் முகத்தில் காதல் இல்லை. காமம் கூட இல்லை. ஏதோ ஒருவித இறுக்கம்தான் இருந்தது. உதடுகள் வார்த்தைகளை

உதிர்த்துக் கொண்டிருந்தனவே தவிர கண்களில் நட்பு இல்லை.

தேவகி மூச்சை அடக்கிப் பிடித்தபடி அவர்களையே கவனித்தாள்.

# 5

அனந்தராம் தன் விரல்களால் சிந்தாமணியின் கன்னங்களை வருடினான். முகவாயைப் பிடித்து நிமிர்த்தினான். அவள் கண்களில் ஒரு ஏக்க எதிர்பார்ப்பு.

பன்றி நாயே, இந்தக் கண்கள் தானே இன்னொரு கயவனையும் பார்த்தது? இந்த உதடுகள் அவனிடமும் எச்சில் பட்டவைதானே? இந்தக் கழுத்தை அவனும் முகர்ந்திருப்பான் தானே? இந்த உடம்பு அவனிடமும் விலை பேசப்பட்டது தானே?

சிந்தாமணி உதடுகளைக் குவித்து கனவுடன் நிமிர்ந்தாள். அவள் கழுத்தை காதலுடன் பற்றியிருந்த அவனுடைய கை மெல்ல நகர்ந்து, கட்டை விரல் அவளுடைய தொண்டைக் குழியில் பதிந்தது. அழுத்தியது. அவள் திடுக்கிடலோடு அவனைப் பார்த்தாள். அவள் விழிகளில் கனவு அகன்று கிலி.

"யூ பிட்ச். இரட்டை நாடகமா ஆடுகிறாய்?" அவன் பற்களினூடே பேசினான். அப்படியே அவளைத்



தள்ளினான். அவள் பின்னங்கால்கள் கட்டில் விளிம்பில் மோதி திடீர் நிறுத்தத்திற்கு வர, அப்படியே மல்லாந்தாள்.

க்ளிக் அவனுடைய கையில் கூர்மையான கத்தி.

கத்தியின் நுனி அவள் கன்னத்தில் கோடு இழுத்தது.

சிந்தாமணி அலற வாயைத் திறந்தாள். இடது கை அவள் வாயைப் பொத்தி அழுத்த, அவள் கழுத்தில் கத்தி பதித்தான், அனந்தராம்.

மரண பயம் சிந்தாமணிக்கு புது சக்தி கொடுத்தது. முழங்கால் உயர்த்தி அவன் தொடைகளுக்கு நடுவில் செலுத்தினாள்.

அனந்தராம் ஹம்மா என்றான். வலியில் அவன் உடல் தன்னிச்சையாக சுருண்டது. சிந்தாமணி அவனை உந்தித் தள்ளி எழுந்தாள். ஓடினாள். அவன் கால் நீட்டி அவளைத் தடுத்தான். புரண்டு ரத்தக் களறியாய் விழுந்தாள்.

கட்டிலுக்கு கீழே அவள் பார்வை புரண்டது.

அங்கே தேவகியைப் பார்த்ததும் அவள் கண்கள் விரிந்தன.

யார் இங்கே? ஆனால், யோசிக்க அவளுக்கு அவகாசமில்லை.

தேவகி எப்போதும் தன்னிடம் மிகச் சிறிய கத்தி வைத்திருப்பாள். திருட்டுத் தொழிலுக்கு அது தேவை என்பது அவள் எண்ணம். இதுவரை உபயோகிக்க வேண்டிய அவசியம் வந்ததே இல்லை. ஆனால், என்றைக்காவது அவளை எல்லோரும் சூழ்ந்து மடக்கினால் அந்த கத்தி காண்பித்து வழி பண்ணித் தப்பித்து விடலாம் என்பது அவள் திட்டம்.

கீழே விழுந்த சிந்தாமணியின் முகத்திலிருந்து ரத்தம் கொட்டுவதைப் பார்த்ததும், தேவகி பெண்ணுக்குப் பெண், விதிக்கப்படாத விதியின் பொருட்டு சட்டென்று தன்னிடமிருந்த கத்தியை அவள்பால் தள்ளினாள்.

சிந்தாமணி ஏன் என்ன என்று கேட்கும் நிலையில் இல்லை.

அந்தக் கத்தியை அள்ளினாள்.

அதற்குள் அனந்தராம் சுதாரித்து எழுந்திருந்தான். அவன் முகத்தில் அதீத வலியும், கோபமும், ஆத்திரமும், அத்தனையும் தாண்டி அளவிட முடியாத காழ்ப்பும் பெருகி வழிந்தன.

தன் கத்தியுடன் அவள் மீது பாய்ந்தான்.

சிந்தாமணி தன் கத்தியை அவனை நோக்கி இழுத்தாள்.

அவனுடைய கன்னத்தில் கத்தி அழுத்தமாகக் கோடிழுத்தது. சிந்தாமணி பதட்டத்துடன் அவன் நெஞ்சில் கத்தியைப் பாய்ச்ச முற்பட்டபோது, மிருக பலத்துடன் அனந்தராம் அவள் மணிக்கட்டைப் பற்றினான். புரட்டினான். மளுக் என்ற சத்தம் எலும்பு முறிந்தது.

சிந்தாமணி அலற ஆரம்பிக்கு முன் அவனுடைய கத்தி அவள் நெஞ்சுக் குழியில் செருகி மீண்டது.

சிந்தாமணி அறுபட்ட ஆடு போல தலை தொய்ந்து சரிந்தாள்.

ரத்தம், ரத்தம், ரத்தம்.

தேவகி தன் கையால் வாயை அப்படியே இறுகப் பொத்தியிருந்தாள். அவள் கண்கள், வெளியே தெறித்து விடும் போலிருந்தன. இதயம் மார்புக் கூண்டுக்கு வெளியே



குதிக்கத் தயாராயிருந்தது. நெஞ்சை பீதி அடைத்தது. வயிற்றைப் புரட்டி, கபாலத்தின் உள்ளே போய் மோதியது. எப்படி அலறாமல் இருந்தாள் என்று அவளுக்கே அந்தக் கணம் புரியவில்லை.

சிந்தாமணியின் மீது மண்டியிட்டிருந்த அனந்தராமை வெளிச்சத்தில் இப்போது அவளால் தெளிவாகப் பார்க்க முடிந்தது. அவனுடைய இடது கன்னத்தில் ஆழமான வெட்டிலிருந்து ரத்தம் பொங்கி வழிந்தது. அது தரையில் சொட்டு முன் அவன் கைக்குட்டை வைத்து அங்கே அழுத்திக் கொண்டான். அவன் பத்து டிகிரி திரும்பினாலும் அவனுடைய பார்வையில் தேவகி பட்டு விடுவாள். அப்படியே நெஞ்சைப் பிடித்து அவள் ஒடுங்கினாள்.

அனந்தராம், சிந்தாமணியின் கையிலிருந்து தன்னைத் தாக்கிய கத்தியைப் பிடுங்கினான். பாக்கெட்டில் செருகினான். சிந்தாமணியை அருவருப்புடன் பார்த்தான். எச்சிலை அவள் முகத்தில் உமிழப் போய் கடைசி தருணத்தில் அதைத் தடுத்துக் கொண்டான். அவனைப் பற்றிய எந்த தடயமும் அங்கே விட்டுப் போக அவன் தயாராகயில்லை. மெல்ல எழுந்தான். வலது காலை உயர்த்தி மிக ஓங்கி செத்துப்போன சிந்தாமணியின் நெஞ்சில் உதைத்தான்.

"தாசிக்குப் பிறந்தவளே, செத்துப் போ!"

சிந்தாமணியின் உடம்பு நசுங்கியது.

அனந்தராம் அந்த அறையிலிருந்து தடுமாறி வெளிப்பட்டு, வெளியேறி கதவைச் சாத்தும் ஒலி கேட்டதும் தேவகி, கிலியுடன் புரண்டு கட்டிலுக்கு வெளியே வந்தாள்.

சிந்தாமணியை இன்னொரு முறை பார்க்கும் தைரியம் அவளுக்கு இல்லை. விழுந்து விடக் கூடாதே என்று சுவரைப் பற்றியபடி மெல்ல நடந்து வெளியே வந்தாள். பின் கதவு திறந்து தோட்டத்தில் பிரவேசித்தாள். கால்களில் வேகம் கூடியது. நகைக் கடையிலிருந்து வந்த ஆட்கள் இருக்கிறார்களா, போய் விட்டார்களா என்றெல்லாம் பார்க்க அவளுக்குத் தோன்றவில்லை.

காம்பவுண்டு சுவரின் பிளவினூடே வெளிப்பட்டு அந்தத் தெருவில் வேகமாக ஓடி, திரும்பி சந்தில் நுழைந்து பெரிய கடை வீதி அடைந்து நின்றபோது அவள் மூச்சு ப்ஹா ப்ஹா என்று பெருகிக் கொண்டிருந்தது.

நகைக் கடையின் வாசலில் சிறு கூட்டம் கலையும் தருவாயில் இருந்தது. அவளைத் துரத்தி வந்தவர்களின் தலைகள் தென்பட்டன. அவளைக் கண்டுபிடிக்க முடியவில்லை என்று அவர்கள் விளக்கம் சொல்லிக் கொண்டிருப்பதாக அவளுக்குத் தோன்றியது.

இங்கே நிற்பதே ஆபத்து.

ஆட்டோ ஒன்றை நிறுத்தி அவசரமாக ஏறினாள். டிரைவர் அவள் முகத்துப் பதட்டத்தைப் பார்த்துவிடக் கூடாதே என்ற அவசரம். தன் முகவரி சொன்னாள். சீட்டில் சாய்ந்து உட்கார்ந்து மார்பு கனக்க கனக்க மூச்சு வாங்கலானாள்.

அவள் ஏரியாவை அடைந்து தெரு முனையிலேயே ஆட்டோவிலிருந்து இறங்கியபோதுதான் கவனித்தாள் - அவளுடைய பர்ஸ்! ஐயோ, பர்ஸ் எங்கே? கொலுசும், கொஞ்சம் பணமும் வைத்திருந்த ஹேண்ட் பேக் அதை எங்கே தவற விட்டாள்?



கட்டிலுக்கடியில் ஒளிந்திருந்தபோது - அதைத் தரையில் வைத்துவிட்டு அவள் வாய் பொத்தினாளே - ஐயையோ, அதை எடுத்துக் கொள்ள மறந்தே விட்டாள்!

குப்பென்று உச்சி மண்டையை கிலி தாக்கியது.

போய் எடுத்து வரலாமா?

முட்டாள், உனக்கென்ன மூளை நசுங்கிப் போய் விட்டதா? அந்த வீட்டிற்கு மறுபடியும் போய் யாராவது நுழைவார்களா? போலீஸ் வருவதற்குள் அதை எடுத்து விட வேண்டும் என்று போக, போலீஸ் தயாராய் காத்திருந்து அவளை மடக்கி விட்டால்?

நினைப்பே உடலை உதறியது.

"இன்னாம்மா துட்டு தர்ரதுக்கா இத்தினி யோசனை?" ஆட்டோக்காரன் அதட்டினான்.

மறுபடியும் ஆட்டோவில் ஏறினாள். வழக்கமாய் அவள் திருட்டுப் பொருட்களை விற்கும் கடைக்கு வந்து இறங்கிக் கொண்டாள். கடைக்காரனிடம் கடன் வாங்கி ஆட்டோவை அனுப்பிவிட்டு, தொய்ந்த கால்களுடன் தன் வீடு நடந்தாள்.

பர்ஸில் என்னென்ன இருக்கும்? யோசித்தாள்.

கொஞ்சம் பணம். அந்த வெள்ளி கொலுசு, சில பஸ் டிக்கெட்கள். ஒரு லிப்ஸ்டிக். சில சேஃப்டி பின்கள். அன்பு காப்பகத்திலிருந்து ஆண்டு விழாவிற்கு வரச் சொல்லி அழைப்பிதழ், கொஞ்சம் சில்லரை. ஒரு சீப்பு. ஒரு கைக்குட்டை இரு. இரு... ஆண்டு விழா அழைப்பிதழ்! அதில் உன் அட்ரஸ் இருக்கிறதே! கொட்டை எழுத்துக்களில் உன் முழு முகவரி இருக்கிறதே!

தேவகி குறுக்கில் கிழிபட்டவள் போல் உணர்ந்தாள். கையில் குலுங்கிய வளையல்களின் மீது ஆத்திரமாக வந்தது. இதற்கு ஆசைப்பட்டுத்தானே.

ஐயையோ, இப்போது என்ன செய்வது?

எந்த விநாடியும் போலீஸ் அவளைத் தேடி வரலாம். அவள் உடனே இப்போது இருக்கும் வீட்டை காலி பண்ணியாக வேண்டும்.

பாய்ச்சலாக வீட்டிற்குள் நுழைந்தாள்.

# 6

''அனந்த்! என்ன ஆயிற்று உனக்கு?'' - நண்பர்கள் பதறினார்கள்.

''நத்திங்!'' என்றான், அனந்தராம். இடது கன்னத்தில் போடப்பட்டிருந்த பாண்டேஜைத் தொட்டு.

''ஏதாவது தகராறா?''

''ஆமாம். அந்த தாசிமகள் கையில் கத்தி வைத்திருந் தாள். கீறி விட்டாள். ராட்சஸி. ஆனால், ஒரு சொட்டு ரத்தம் கூட அங்கே சிந்தாமல் வெளியே வந்து விட்டேன்.''

''அனந்த்! அப்போதே சொன்னேன். நீ போக வேண்டா மென்று.''

''ஒன்றும் ஆகிவிடவில்லை! வேறு யார் போயிருந் தாலும் எனக்கு திருப்தி வந்திருக்காது. என் கையா



லேயே அவளைத் துண்டம் போட்ட போது கிடைத்த மகிழ்ச்சி வேறு எப்படியும் கிடைத்திருக்காது. என்ன, கன்னத்தில் ஒரு வெட்டு. நம் டாக்டரிடம் போனேன். எட்டு தையல் போட்டார். பாண்டேஜ் கட்டினார்.''

''உன் அண்ணனுக்குத் தெரிந்தால்...''

''தெரிந்தால் ஆபத்துதான். என் முகத்தை ஏன் அவரிடம் காட்டுகிறேன்?'' அனந்தராம் புன்னகைக்க முயன்றான். தையல் கன்னத்தை இழுத்தது. உதடுகள் முழுமையாகத் திறக்காமல், கோணலான புன்னகை அவனிடமிருந்து வெளிப்பட்டது.

''உன்னை யாரும் பார்க்கவில்லையே?''

''காரைத் தெரு முனையிலேயே நிறுத்தியிருந்தேன். இருட்டோடு நடந்து காம்பவுண்டு சுவரில் இருந்த பிளவு வழியே நுழைந்தேன். மறுபடி வெளியே வந்த போதும், இருட்டில் கலந்து நடந்தேன். யாரும் என்னைப் பார்க்க வில்லை. பயப்படாதீர்களடா... என்னை சம்பந்தப் படுத்தும் எதுவும் அந்த வீட்டில் இல்லை!''

''எனக்கென்னவோ நடந்ததையெல்லாம் நீ உன் அண்ணனிடம் முன்கூட்டியே சொல்லி விடுவது நல்லது என்று தோன்றுகிறது...''

''சும்மாயிருடா. எப்போது எதைச் செய்ய வேண்டும் என்று எனக்குத் தெரியும். இப்போதைக்கு நம்ம சோம பானத்தை எடு...''

நண்பர்கள் முழு திருப்தி இல்லாமல், ஆனால், அதே சமயம் அனந்தராமை அதற்கு மேல் எதிர்க்கவும் துணிச்சல் இல்லாமல், அவன் கேட்ட விஸ்கி பாட் டிலைத் திறந்தார்கள்.

* * *

அந்த இளைஞன் ஒரு கையில் பெட்டியும், இன்னொரு கையில் முகவரிச் சீட்டுமாக அந்த வீட்டின் வாசலில் தயங்கி நின்றான். முப்பது நிமிடமாக அந்த ஏரியாவைச் சுற்றிச் சுற்றி வந்தாயிற்று. அவன் மாமா வீடு எங்கே இருக்கிறது என்று கண்டுபிடிக்க முடியவில்லை.

இந்த வீட்டில் இருப்பவர்களுக்காவது சரியான வழி தெரிந்திருக்கிறதா பார்ப்போம். அவன் அத்தனை வீடுகளை விட்டு விட்டு குறிப்பிட்டு அந்த வீட்டைத் தேர்ந்தெடுத்தது அவன் விதி என்றுதான் சொல்ல வேண்டும்.

கேட் திறந்து நுழைந்தான்.

காலிங் பெல் அழுத்தினான். ஏன் ஒலியே கேட்கவில்லை?

கதவைத் தட்டினான். கதவு தானாகத் திறந்து கொண்டது.

''சார்... சார்.''

உள்ளேயிருந்து பதிலே இல்லை.

கதவைத் திறந்து போட்டு என்னதான் பண்ணுகிறார்கள் உள்ளே?

ஹால் திரை காற்றில் பறந்தபோது, அவன் பார்த்த காட்சி அவனுக்குப் புரியவில்லை. பெட்ரூம் வாசலிலிருந்து ஹால் தரையில் திட்டாக ஏதோ சிகப்பாக என்ன அது?

நுழைந்தான். ஹாலிற்குள்ளும் ஆட்கள் இல்லை. பெட்ரூம் வாசலை நெருங்கி எட்டிப் பார்த்தான் உறைந்தான்.



கால்கள் முதுகில் உதைக்க தபதபவென்று வெளியே ஓடி வந்தான்.

* * *

போலீஸ் ஜீப் பிரேக் அடித்தது. சீருடை அணிந்தவர்கள் இறங்கி, கேட்டிற்குள் நுழைந்தார்கள். சப்-இன்ஸ்பெக்டர் வேகமாக வெளியே வந்தார்.

''இன்ஸ்பெக்டருக்கு உடனே சொல்லவில்லை என்றால் லோ லோ என்று கத்துவார்... எங்கே அந்த ஆள்?''

கான்ஸ்டபிள் நெருங்கி வந்து, ''ஜேசுதாஸ் கச்சேரிக்கு நான்தான் சார் டிக்கெட் புக் பண்ணிக் கொடுத்தேன்...'' என்றார்.

''எந்த சபா?''

கான்ஸ்டபிள் சொன்னார். ''எந்த வரிசை'' என்று கூட பார்த்த ஞாபகம் இருக்கிறது சார்.''

''போய்யா, அந்த ஆளை உடனே அழைத்து வா... யோவ், இங்கே என்னய்யா வேடிக்கை?''

போலீஸ் தலை பார்த்ததும், அக்கம் பக்கத்துத் தெருக்களிலிருந்தெல்லாம் ஆட்கள் கூட ஆரம்பித்து விட்டார்கள்.

* * *

விசுவஜித் சிந்தியாவின் விரல்களோடு தன் விரல்களைக் கோர்த்து மடியில் அழுத்தியிருந்தான்.

இரண்டு பாடல்களுக்கு இடையிலான மெல்லிய இடைவெளியில் வாத்தியங்கள் சுருதி சேர்த்துக் கொண்டிருந்தன.

ஜேசுதாஸின் தேன் குரலில் மயங்கிக் கிடந்த சிந்தியா, விசுவஜித்தின் விரல் நெரிசலில் தனி சுகம் கண்டு கொண்டிருந்தாள். அவன் தோளருகே குனிந்து ''ஆனாலும் முரடு நீங்கள்... கை எல்லாம் எப்படி கிண் கிண்ணென்று இருக்கிறது. எனக்குப் பயமாய் இருக்கிறது...'' என்று கிசுகிசுத்தாள்.

''முட்டாள் டார்லிங். இது திருடர்களை அடிக்கும் கை. கொள்ளைக்காரர்களுடன் சண்டை போடும். கை கொலைகாரர்களை உதைத்து விஷயம் வாங்கும் கை. முரடாய்த்தான் இருக்கும் மற்றவர்களுக்கு. ஆனால், உன்னிடம் அப்படி இருக்காது. லத்தி பிடிக்கிற இந்த கைக்கு பூ பிடிக்கவும் தெரியும். துப்பாக்கி சுமக்கும் இந்த விரல்களுக்கு பெண்ணிடம் எப்படிப் பழக வேண்டும் என்று தெரியும்... பார்க்கிறாயா?''

''இங்கே ஒன்றும் பார்க்க வேண்டாம். நேரம் வரும் போது, பார்த்துக் கொள்ளலாம்...'' அவள் கொஞ்சலாகச் சொன்னாள்.

நேஷனல் அவார்டு வாங்கிய மலையாளப் படத்திலிருந்து, அவார்டு வாங்கித் தந்த பாடல் என்று அறிவிப்பு செய்து விட்டு மைக் கனைத்தது. ஜேசுதாஸ் ஹம்மிங் ஆரம்பித்தபோது, அந்த வரிசையின் கடைசியில் கான்ஸ்டபிளைப் பார்த்தான் விசுவஜித்.

இவர் எதற்காக இங்கே?

அவனைப் பார்த்ததும் அவர் எழுந்து வாருங்கள் என்று சைகை செய்து கூப்பிட்டார்.

''சிந்தியா... ஸ்டேஷனிலிருந்து ஆள் வந்திருக்கிறது. ஒன் மினிட்...''



''நோ!'' சிந்தியா கான்ஸ்டபிளைக் காழ்ப்புடன் பார்த்தாள். ''விசு... நீங்கள் பாதியில் போகக் கூடாது...''

ஜேசுதாஸின் பாடல் ஸ்டீரியோ ஸ்பீக்கர்களில் கனமாக சூடு பிடிக்கத் துவங்கியிருந்தது. அவர்கள் உரையாடலை பக்கத்து இருக்கை ஆசாமிகள் த்சு த்சு த்சு என்று ஆட்சேபித்தார்கள்.

விசுவஜித் சிந்தியாவைக் கையமர்த்திவிட்டு, கண்களால் - கெஞ்சி விட்டு எழுந்தான்.

டெனிம் பேண்ட் ஸ்போர்ட்ஸ் பனியன். ப்யூமா ஷூக்கள்.

விசுவஜித் மாபெரும் கம்பீரனாய், விரிந்த தோள்களும், ஒட்டிய வயிறுமாக நடந்தபோது, அத்தனைக் கண்களும் ஒரு கணம் அவனை மொய்த்துத் திரும்பின.

விசுவஜித் கடைசி இருக்கை தாண்டி, கான்ஸ்டபிளின் தோளில் வைத்து, அவரை கதவு நோக்கி நகர்த்திக் கொண்டே, ''என்ன விஷயம்?'' என்றான், சற்றே கடுப்பாக. அவன் நெற்றிச் சுருக்கத்திலும், கண்களின் உஷ்ணத்திலும் அதை உணர்ந்த கான்ஸ்டபிள் எச்சில் கூட்டி விழுங்கினார். காதலியுடன் இருந்திருந்து ஒரு மாலை செலவு செய்யத் திட்டமிட்டிருப்பவனைக் கொஞ்சம் கூட கண்ணியமில்லாமல் தொந்தரவு செய்வது அவருக்கும் சம்மதமாயில்லை. ஆனால்...

''நம்ம ஏரியாவில் ஒரு மர்டர் சார்... ஒரே ரத்தக் களறியாக இருக்கிறது ரூம். எஸ்.ஐ. உங்களிடம் உடனே சொல்ல வேண்டும் என்றார். அதனால்தான்...''

''என்னது, மர்டரா? யார்?''

விசுவஜித் ஒன்றிரண்டு பேட்டை ரவுடிகளின் பெயர்கள் சொன்னான். கோஷ்டி சண்டையில் இருக்கும் என்று நினைத்தது தவறு என்று கான்ஸ்டபிள் பதிலிலிருந்து புரிந்தது.

''முன்னே பின்னே பார்க்காத பெண் சார். அக்கம் பக்கத்தில் கூட யாருக்கும் சரியாக விவரம் தெரியவில்லை. நீங்கள் கச்சேரி முடிந்து வருவதாய் இருந்தால், எதையும் கலைக்காமல் காத்திருக்கிறோம்...'' கான்ஸ்டபிள் தயக்கத்துடன் இழுத்தார்.

''கச்சேரியா? அது கிடக்கட்டும். போகலாம்...''

''சார்... அந்தப் பெண்...''

''எந்தப் பெண்?''

''உங்களோடு கச்சேரிக்கு வந்திருக்கிற பெண்...''

''யெஸ், யெஸ்... போகிற வழியில் அவளை ஹாஸ்டலில் டிராப் செய்ய வேண்டும். ஜீப்பில் தானே வந்தீர்கள்?''

''ஆமாம், சார்...''

சிந்தியாவை சைகை செய்து வெளியே கூப்பிட்டான்.

விஷயம் சொன்னான். தரையில் கால் உதைத்துக் கோபம் காட்டினாள்.

''கல்யாணத்தன்றைக்குக் கூட மர்டர், ரேப் என்று உங்களை இழுத்துப் போகப் போகிறார்கள் பாருங்கள்'' என்று வெடித்தாள்.

''இதோ பார், உனக்கு ஆசையாயிருந்தால் முழுக் கச்சேரியும் இருந்து விட்டுப் போ... நான் போக வேண்டிய எமர்ஜன்ஸி...''



விசுவஜித்தின் குரலில் திடீரென்று காதல் அற்றுப் போய், காவல்துறையின் கடமை தொனித்தது.

சிந்தியா முகத்தில் கோபம் காண்பித்து, ''தனியாகத் திரும்பிப் போவதற்கா சேர்ந்து வந்தோம்? நீங்கள் இல்லாமல் எனக்கு மட்டும் ஜேசுதாஸ் எதற்கு? கிளம்புங்கள்'' என்றாள்.

ஜீப்பை நோக்கி அவர்கள் விரைந்தார்கள்.

## 7

விசுவஜித் ஜீப்பிலிருந்து இறங்கினான். கூட்டத்தை முறைத்தான்.

வீட்டிற்குப் போய் தன் சீருடை அணிந்து வர அவனுக்கு நேரமிருந்திருக்கவில்லை. ஸ்போர்ட்ஸ் பனியனில் அவனை இன்ஸ்பெக்டர் என்று யாரும் ஊகிக்கவில்லை.

சப்-இன்ஸ்பெக்டர் சல்யூட் அடித்தார்.

விசுவஜித் அவரிடமிருந்து லத்தி வாங்கி, அதன் முனையால் கதவைத் தள்ளி நுழைந்தான்.

ஹாலிற்குள் நுழைந்ததுமே சாவின் வாசனை தெரிந்தது. பெட்ரூமிலிருந்து திரண்டு ஹாலுக்குள் பிரவேசிக்க முனைந்த ரத்தம் அவன் வயிற்றைக் குமட்டியது.

எட்டிப் பார்த்தான்.

குரூரமான மரணம்!

''இன்னும் எதையும் தொடவில்லை, சார்'' என்றார், சப் இன்ஸ்பெக்டர், ஒழுங்கான பள்ளி மாணவன் போல.

விசுவஜித் பெட்ரூமிற்குள் நுனிக் கால்களால் நுழைந் தான்.

போராட்டம் நிகழ்ந்ததற்கான அறிகுறிகள் தெரிந்தன. படுக்கை கலைந்திருந்தது. நாற்காலி கவிழ்ந்திருந்தது. சுவரில் ரத்தக்கறை இருந்தது. வலுவானவனுடன் போரா டித் தோற்றிருக்கிறாள்.

விசுவஜித் ஒவ்வொரு அங்குலமாகக் கண் ஓட்டிய போது கட்டிலுக்கடியில் அந்த ஹேண்ட் பேக் தென்பட்டது.

இறந்தவளுடையதாய் இருக்க வேண்டும்!

கட்டிலைச் சுற்றிக் கொண்டு போய் எடுத்தான் - கைக்குட்டையால். ஜிப் திறந்தான். பேப்பர் விரித்து அதிலிருந்ததையெல்லாம் கவிழ்த்தான்.

சப்-இன்ஸ்பெக்டர் புதிதாய் வேலையில் சேர்ந்தவர் என்பதால் எதையும் தொடாமல், எதிலும் குறுக்கிடாமல், எல்லாவற்றையும் கவனத்துடன் ஆழமாகப் பார்த்து தனக்குள் சேதிகள் சேகரித்துக் கொண்டிருந்தார்.

விசுவஜித் தனக்கு முன்னே விழுந்த அந்தப் பொருள் களைக் கவனித்தான்.

நாற்பத்தியேழு ரூபாய். ஐந்து ரூபாய் ஐம்பது காசுகள் நாணயங்களாகி நசுங்கிய வெள்ளி கொலுசு. மடித்த பஸ் டிக்கெட்கள். கரைந்து போன ஒரு லிப்ஸ்டிக். நான்கு



பற்கள் உதிர்ந்த சீப்பு. அழுக்காய் ஒரு கைக்குட்டை அப்புறம் ஓரம் நைந்து போன ஒரு நீலநிற அழைப்பிதழ்.

விசுவஜித் சப்-இன்ஸ்பெக்டரை நிமிர்ந்து பார்த்தான்.

''கேஸ் சுலபமாகிறது. இவள் பெயர் தேவகி, அட்ரஸ் கூட இருக்கிறது. பர்ஸை வைத்துப் பார்த்தால் கொஞ்சம் ஏழை என்று தோன்றுகிறது. ஆனால் அவள் கட்டி யிருக்கும் புடவையைப் பார்த்தால் ரிச்சாக இருக்கிறது. காதில் இருக்கும் தோடுகள் மதிப்புள்ளவையாய்த் தெரி கின்றன. இவ்வளவு அழுக்காக ஒரு கர்சீப் வைத்திருக் கிறாளே என்று கொஞ்சம் ஷாக்காகக்கூட இருக்கிறது.''

விசுவஜித்தின் கண்களில் குழப்பம் தெரிந்தது.

''கொலை பற்றி தகவல் தந்தது யார்?''

''ஸ்டேஷனுக்கு ஒரு போன் வந்தது, சார்'' என்று ஆரம்பித்தார். சப்-இன்ஸ்பெக்டர் ''போன் பண்ணியவர் தன் பெயர் சொல்லவில்லை. ஏதோ அட்ரஸ் பற்றி விசா ரிப்பதற்காக இந்த வீட்டிற்குள் நுழைந்தானாம். பிணத்தைப் பார்த்தவுடன் அலறியடித்துக் கொண்டு வெளியே வந்து விட்டானாம். போலீஸ் வரும் வரை காத்திருந்தால், சாட்சி அது இது என்று நேரத்தை வீணடிப்பீர்கள் என்று தகவல் மட்டும் தருகிறேன் என்று சொல்லி போனை வைத்து விட்டான்.''

''அக்கம்பக்கத்தில் விசாரித்தீர்களா?'' என்று கேட்டு விட்டு விசுவஜித், சப்-இன்ஸ்பெக்டரைப் பார்த்தான்.

அவர் சற்றே குழைந்தார். ''ஆட்களைக் கூப்பிட்டு வைத்திருக்கிறேன், சார் - நீங்க நேரில் பேச விரும்புவீர்கள் என்று தோன்றியது. அதனால் நான் அதிகம் கேட்டு அவர்களைக் குழப்பவில்லை.''

விசுவஜித் சில விஷயங்களை முதலில் தெளிவாக்கிக் கொள்ள விரும்பினான். எனவே விசாரணையில் இறங்கினான்.

''உங்கள் பெயர்?''

பெயர் சொன்னவருக்கும் நாற்பத்தி ஐந்து வயதிருக்கலாம். அகலமான முகம், நீண்ட முகவாய், உள்ளடங்கிய கண்கள், சற்று பெண்மை கலந்த குரல்.

''இந்தப் பெண்ணைப் பார்த்திருக்கிறீர்களா?''

''பார்த்திருக்கிறேன், இன்ஸ்பெக்டர்.''

''இந்த வீட்டில் எத்தனை நாட்களாகக் குடியிருக்கிறாள்?''

''வீட்டைப் பார்த்தவுடன் நீங்களே புரிந்து கொண்டிருப்பீர்கள் இன்ஸ்பெக்டர். இந்த வீட்டில் யாரும் குடித்தனம் இல்லை. பாதி நாட்கள் இந்த வீடு பூட்டியே இருக்கும். எப்போதாவது இந்தப் பெண் வருவாள். தெரு முனையிலேயே ஆட்டோவிலிருந்து இறங்கி நடந்து வருவாள். தன்னிடம் இருக்கும் சாவியால் திறந்து உள்ளே நுழைவாள். மறுநாள் காலையில் பார்த்தால் மறுபடி வீடு பூட்டியிருக்கும். இதுதான் வாடிக்கை.''

''இது யாருடைய வீடு.''

''மும்பையில் இருக்கிறார் ஓனர். ஆனால் இந்த வீட்டை வாடகைக்கு விட்டது நான்தான். என்னிடம் தான் பொறுப்பு தந்திருந்தார்.''

''வாடகைக்கு யாரிடம் விட்டீர்கள்?''

''புரோக்கர் மூலம் ஒரு ஆள் வந்தார். ஏதோ சினிமா கம்பெனிக்கு ஸ்டோரி டிஸ்கஷனுக்கு வீடு வேண்டும்



என்றார். நல்ல வாடகை தருவதாகச் சொன்னதும் கொடுத்தேன்.''

''மாதா மாதம் வாடகை?''

''பன்னிரண்டு மாதங்களுக்கு வாடகையை முன் பணமாகக் கொடுத்து விட்டான் அந்த ஆள்.''

''அந்த ஆளின் அட்ரஸ்?''

''சினிமா கம்பெனியின் அட்ரஸ் சாலிகிராமத்தில் எட்டாவது தெருவிலோ என்னவோ இருந்தது.''

''அந்த அட்ரஸ் கொடுங்கள். இந்தப் பெண் பற்றி வேறு எதுவும் உங்களுக்குத் தெரியாது?''

''தெரியாது. இப்படி வீட்டில் செத்துப் போவாள் என்று தெரிந்திருந்தால், வாடகைக்கு விட்டிருக்கவே மாட்டேன்.''

''இந்த வீட்டிற்கு வேலைக்காரர்கள்?''

''யாரும் கிடையாது. சினிமா டிஸ்கஷன் எதுவும் நடந்ததாகவும் தெரியவில்லை. இந்தப் பெண் வரும் போகும். யாரோ ஒரு ஆசாமி அவளைத் தேடி அவ்வப்போது அவள் இருக்கும் நேரத்தில் வருவான் என்று என் பெண்டாட்டி சொல்வாள். பெண்களுக்கு வம்பு தானே வேலை?''

விசுவஜித் உடனே அந்த மனைவியைக் கூப்பிட்டு விட்டார். அந்த அம்மாள், நொடிக்கொரு தரம் நாவை வெளியே நீட்டி உதடுகளை ஈரப்படுத்திக் கொண்டு பேசினாள்.

''அந்தப் பையனை நான் சரியாகப் பார்த்ததில்லை. இருட்டின பிறகுதான் வருவான். ஆறடி உயரம் இருப்பான். எக்ஸர்சைஸ் செய்பவன் போல உடம்பு கிருகிருவென்று

இருட்டில் நடந்து வந்து நுழைவான். எப்பொழுது எழுந்து போகிறான் என்று தெரியாது.''

அந்த அம்மாளிடமிருந்து கூடுதலாக எந்த உருப்படியான தகவலும் கிடைக்கவில்லை.

சப்-இன்ஸ்பெக்டரைக் கூப்பிட்டான்.

''ஆம்புலன்ஸ் வரும். லேபிலிருந்து ஆட்கள் வருவார்கள். அவர்களை கவனித்து இங்கு செய்ய வேண்டிய ஃபார்மாலிட்டிகளைச் செய்யுங்கள்... நான் இந்த பெண்ணின் அட்ரஸிற்குப் போய் ஏதாவது தகவல் கிடைக்கிறதா என்று பார்க்கிறேன்.''

ஜீப்பில் ஏறினான்.

ஜீப் சீறிப் புறப்பட்டது.

* * *

தேவகிக்கு அழுகையாய் வந்தது.

இந்த வீட்டை விட்டு கிளம்ப வேண்டும் என்ற நினைப்பே துக்கமாய் இருந்தது. எப்போதோ சொற்பமான வாடகைக்குப் பிடித்த சிறிய வீடு. இனி ஒரு தடவை இந்த மாதிரி அமையாது. வீட்டில் இருக்கும் சின்னச் சின்ன தட்டு முட்டான சாமான்களையெல்லாம் அள்ளி எடுத்துப் போக இப்போது நேரம் கிடையாது. போட்டது போட்டபடி அவள் ஓடியாக வேண்டும்.

எதற்கு ஓட வேண்டும்? போலீஸ் வந்தால், உள்ளதை உள்ளபடி சொல்லிவிட்டுப் போவது. நீ என்ன கொலையா செய்தாய்?

உள்ளது உள்ளபடி என்றால் இரண்டு வளையல்கள் திருடியதையும் சேர்த்தா? ஐயையோ... போலீஸ் ஸ்டே



ஷனிற்குக் கொண்டு போனால் என்னென்னவோ செய்திகள் படித்திருந்தது உடம்பை உதறடித்தது.

முன் நசுங்கிய பழைய பெட்டியில் அவளுடைய நல்ல துணிகளை எல்லாம் எடுத்து அடைத்தாள். இதைப் போன்றதொரு அவசரம் நேரும் என்பதற்காகவே சேமித்து வைத்த பணத்தை எடுத்துக் கொண்டாள். கையில் இருக்கும் புதிய வளையல்கள் எப்படியும் ஏழாயிரம், எட்டாயிரமாவது கிடைக்க வழி செய்யும். போதும் எப்படியாவது சமாளித்து விடலாம் என்று முடிவு செய்தாள்.

வீட்டைப் பூட்டிக் கொண்டு வெளியே வந்தாள்.

''எங்கேக்கா, ஊருக்குக் கிளம்பறீங்களா?''

குரல் கேட்டு திடுக்கிட்டுத் திரும்பினாள். அவர்கள் வீட்டு வாசலில் நடமாடும் இஸ்திரி வண்டி வைத்திருப்பவனின் உதவிப் பையன்.

''ம்'' என்று ஒற்றை எழுத்தில் பதில் சொல்லிவிட்டு, தெருவில் இறங்கினாள்.

எங்கே போவது என்று தீர்மானித்து விட்டாள். அவளுடன் இல்லத்தில் வளர்ந்த பெண் - நாராயணி என்று பெயர் - அவள் திருவனந்தபுரம் அருகே ஒரு கிராமத்தில் இப்போது இருக்கிறாள். அவளிடம் போய் கொஞ்ச நாட்கள் ஒளிந்திருந்து, அப்புறம் என்ன செய்யலாம் என்பதைப் பற்றி முடிவெடுக்க வேண்டும்.

ஆட்டோ ஸ்டாண்டிற்கு விரைந்தாள்.

''சென்ட்ரல் வருமா?''

''மீட்டருக்கு மேல் அஞ்சு ரூபா தரணும்'' என்றான் ஸ்டாண்டில் முதலில் நின்றிருந்தவன்.

ஐந்து என்ன, பத்து ரூபாய் கேட்டிருந்தால்கூட தேவகி சரி என்று சொல்லியிருப்பாள்.

ஆட்டோவில் பெட்டியை செருகி, ஏறி அமர்ந்தாள்.

''வரேன் மாமு...'' என்று ஆட்டோ டிரைவர் தன் தோழனிடம் தெரிவித்து விட்டு ஆட்டோவைக் கிளப்பினான்.

* * *

அந்தத் தெருவில் போலீஸ் ஜீப் நுழைந்தது. தேவகி வீட்டின் முன் வந்து நின்றது.

விசுவஜித் இறங்கினான்.

வீடு பூட்டியிருந்ததைப் பார்த்தான். பாவம் இந்த வீட்டிற்குள் அந்தப் பெண் மறுபடியும் உயிருடன் நுழையப் போவதில்லை. அவள் வீட்டில் யாராவது இருந்தால் கொலையைப் பற்றித் தெரிவிக்கலாம் என்று நினைத்திருந்தது இப்போது இயலாது.

தேவகிக்கு உறவினர்கள் யாராவது உண்டா என்று பக்கத்து வீடுகளில் விசாரிக்க முடிவு செய்தான்.

போலீஸ் ஜீப்பைப் பார்த்ததும் இஸ்திரிப் பையன் ஓடி வந்தான்.

''இன்னா சார், தேவகிக்காவையா தேடி வந்தீங்க?''

''உன் பேர் என்னடா?''

''ராசதுரை. அக்கா இப்பத்தான் பொறப்பட்டுப் போச்சு.''

புறப்பட்டுப் போனாளா? பாவம், பையனுக்கு இன்னும் அவள் செத்துப் போனது தெரியாது.

''தேவகியக்காளின் வீடு இது தானே? அக்காவுடன் வேறு யார் இருக்கிறார்கள்?''



''அக்காவுக்கு யாரும் கிடையாது சார்... தனியாத்தான் இருக்கும்... இப்ப பெட்டியைத் தூக்கிட்டுப் போச்சே...''

பெட்டியா? என்ன சொல்கிறான் அவன்?

''தம்பி, கரெக்டா சொல்லு,'' என்று விசுவஜித் அவனிடம் சொல்லி முடிப்பதற்குள், பக்கத்து போர்ஷனிலிருந்து ஆள் எட்டிப் பார்த்தது.

''யார் சார் வேணும்?''

''தேவகியைப் பற்றி விசாரிக்க வந்தேன்...''

''பத்து நிமிடம் முன்பு தானே அந்தப் பெண் பெட்டியுடன் கிளம்பிப் போயிற்று. ரொம்ப அவசரமாகப் போனது.''

''தேவகியா?''

''ஆமாம், தேவகிதான்...''

விசுவஜித்திற்குப் பொட்டில் அறைந்தது போலிருந்தது.

தேவகி உயிருடன் இருக்கிறாள். கொலையுண்டு பார்த்தது தேவகி இல்லை. வேறு யாரோ! கேஸ் குழப்பமாகிறது. இந்தப் பெண்ணின் ஹேண்ட்பேக் அங்கே! இவளுக்கும் அந்தக் கொலைக்கும் தொடர்பு இருக்க முடியுமா? பெட்டியோடு கிளம்பிப் போக வேண்டிய அவசியம் என்ன?

விசுவஜித் சுறுசுறுப்பானான்.

''எங்கே போயிருக்கிறாள் என்று தெரியுமா?''

''தெரியாது சார்...''

விசுவஜித் வெளியே ஓடினான். பெட்டி என்றால் ரயில்வே ஸ்டேஷன் அல்லது பஸ் ஸ்டாண்ட் அல்லது உள்ளூரிலேயே யாராவது தெரிந்தவர்கள் வீட்டில் தஞ்சம்

என்று நிலைத்திருக்கும். பெட்டியுடன் பஸ் பிடித்துப் போவதை விட வசதியிருந்தால் அவசரம் என்பதால் ஆட்டோவில் போயிருக்க வாய்ப்பு அதிகம்.

ஜீப் ஆட்டோ ஸ்டாண்டில் பிரேக் அடித்தது.

விசாரித்தான்.

"ஆமா, சார்... இப்பத்தான் பெட்டியோட ஏறிச்சு, சென்ட்ரல் ஸ்டேஷன் போனது..."

சென்ட்ரல் ஸ்டேஷன் என்றால் எவ்வளவு பெரிய பரந்த இடம். அந்த கூட்டத்தில் அவள் கலந்து விட்டால் எப்படி கண்டு பிடிக்கப் போகிறேன்?

"அவள் கிளம்பிப் போன ஆட்டோ நம்பர் தெரியுமா?"

"நம்ம தோஸ்த்து வண்டி தான் சார்..."

"நம்பர்?"

"TN-07-7611."

விசுவஜித் ஒயர்லஸில் தகவல் கொடுத்தான். சென்ட்ரலில் அந்த ஆட்டோவை மடக்கிப் பிடிக்கச் சொன்னான்.

ஜீப் விரைந்தது.

* * *

தேவகி பிளாட்பாரத்தில் வேகமாக நடந்தாள். பெட்டியால் இரண்டு மூன்று பேரை ஏற்கெனவே இடித்து ஸாரி சொல்லி விட்டாள்.

அவளுக்கு அதிர்ஷ்டம் என்று தான் சொல்ல வேண்டும். அவள் வந்து சேர்ந்த பதினைந்து நிமிடத்தில் கேரளாவிற்கு ஒரு எக்ஸ்பிரஸ் புறப்படவிருந்தது.



கவுண்ட்டருக்கு ஓடினாள். அங்கே கியூ நீண்டிருந்தது. காத்திருந்தால், ரயில் போய்விடும் என்று அவளுக்கு பயம் வந்து விட்டது.

வரிசையில் முன்னால் நின்றிருந்த இளைஞனிடம் ஓடினாள். வசீகரமாய் ஒரு புன்னகை சிந்தினாள். தன் அவசரம் சொன்னாள். கூட்டத்தில் சிலர் ஆட்சேபித்தவுடன், அந்த இளைஞன் "தெரிஞ்சவங்கப்பா" என்று சமாளித்து அவளிடம் காசு வாங்கிக் கொண்டான்.

அன்ரிசர்வ்டு டிக்கெட். வாங்கி கையில் மடக்கிக் கொண்டு ஒரு ஓட்டம்.

பிளாட்பாரத்தில் தபால் பைகளும், எங்கெங்கோ போக வேண்டிய பார்சல் மூட்டைகளும் குறுக்கில் இடறலாய்க் கிடந்தன. எரிச்சலாக வந்தது. அன்ரிசர்வ்டு கம்பார்ட்மெண்டில் கூட்டம் நிரம்பியிருந்தது. அவளுக்கு உட்கார இடம் இல்லை.

பெட்டியைத் திணித்து ஏறினாள். பெட்டியை நகர்த்தி வைத்து, அதிலேயே உட்கார்ந்தாள்.

மூச்சு இறைத்தது.

ரயிலே, சீக்கிரம் கிளம்பேன்!

பொறுமையைத் தொலைத்து விட்டு அவள் திகிலுடன் ஜன்னலையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

* * *

ஜீப்பிலிருந்து விசுவஜித் குதித்து இறங்கினான். ஸ்போர்ட்ஸ் பனியனில் அவன் இருந்த போதிலும், அவனிடமிருந்து அதிகாரம் காற்றில் பொங்கி வழிந்தது. ஒரு கான்ஸ்டபிள் எங்கிருந்தோ உருவாகி ஓடி வந்து சல்யூட் அடித்தான்.

"ஆட்டோவை மடக்கி விட்டோம். சார்."

"வெரிகுட்."

"ஆனால் அதில் யாரும் இல்லை சார்..."

"என்னது!"

"டிரைவர் மட்டும்தான் இருக்கிறார், சார்..."

"என்னய்யா காரியம் செய்கிறீர்கள்? பாஸன்ஜரை மடக்கச் சொன்னால் டிரைவரை மடக்கி வைத்துக் கொண்டு எங்கே அவன்?"

கான்ஸ்டபிளுடன் விசுவஜித் கிட்டத்தட்ட ஓடினான்.

காக்கி உடை அணிந்து, போலீஸ் எதற்காக தன்னை மடக்கியது என்று புரியாமல் குழம்பி நின்றிருந்த ஆட்டோ டிரைவரை விசுவஜித் நெருங்கினான்.

"நீதான் TN - 07 - 7611ஆ?

"ஆமா சார் எந்தத் தப்புத் தண்டாவும் பண்ணலை சார். பெட்ரோல் வெலை எகிறிடிச்சு. அஞ்சு ரூபா பாஸன்ஜர் கிட்ட கூடக் கேட்டு வாங்கிறது மாமூல் தான் அதுக்குப் போய்."

"புலம்பாதே. உன்னை அதற்காக நிறுத்தி வைக்க வில்லை. உன் ஆட்டோவில் ஒரு லேடி வந்தாளா?"

"ஆமாம் சார்."

"எங்கே அவள்?"

"டேஷன் வாசல்லயே இறங்கிடுச்சு. கேரளா எக்ஸ் பிரஸைப் பிடிக்கணும்னு போர்ட்டர் கிட்ட பிளாட்பாரம் நம்பர் கேட்டு என்ட்ரிலயே ஓடிப்போச்சு. அப்புறம் தான் இந்த கான்ஸ்டபிள் வந்து என்ன சுப்புன்னு அழுத்திட்டாரு."



"கேரளா எக்ஸ்பிரஸ் என்றா சொன்னாள்?"

"ஆமாம், சார்."

அந்த தேவகி எப்படி இருப்பாள் என்பதுகூட தெரியாத நிலையில் பிளாட்பாரத்தில் போய் என்ன செய்ய முடியும்?

"இந்தாப்பா டிரைவர், உனக்கு அந்தப் பெண்ணை ஞாபகம் இருக்கிறதா?"

"இருக்கு சார்."

"ஓடி வா, அவள இப்போ அடையாளம் காட்ட வேண் டும். டிரைவரின் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு விசுவஜித் ஓடினான்.

எட்டாவது பிளாட்பாரத்தில் ரயில் புறப்படத் தயாராக இருக்கிறது என்று போர்ட்டர் சொன்னதும், அங்கே பறந்தடித்துக் கொண்டு நுழைந்தார்கள்.

மஞ்சள் சிக்னல் விழுந்து ரயில் நகரத் துவங்கியிருந்தது.

"கமான் ஃபாஸ்ட், ஒவ்வொரு ஜன்னலாகப் பார்..." என்றான் விசுவஜித்.

விசுவஜித்தின் வேகத்திற்கு ஈடு கொடுக்க முடியாமல் டிரைவர் திணறினான். ரயில் பெட்டிகள் ரயில் வேகத்தை விட கூடுதல் வேகத்தில் ஓடித் தாண்டித் தாண்டி அதே சமயம் ஜன்னல்களை கண்காணித்துக் கொண்டு எதிர்ப் படுபவர்களை முட்டாமல் ஓடுவது டிரைவருக்கு பெரும் அவஸ்தையாய் இருந்தது.

ஜன்னல் சதுரம் வழியே தேவகியின் முதுகு தென் பட்டது. அவன் பட்ட பாட்டிற்கெல்லாம் பலன் கிட்டி விட்ட குதூகலத்துடன் "சார்" என்று பாய்ந்து விசுவ

ஜித்தின் சட்டையை இழுத்தான். கம்பார்ட்மென்ட்டைக் காட்டினான். பேசத் திராணியில்லை.

விசுவஜித் கம்பார்ட்மென்ட் வாசலில் தொற்றி நின்றவர்களையெல்லாம் அப்படியே ஒதுக்கினான். ரயில் வேகத்திலேயே ஓடி அனாயாசமாக பெட்டிக்குள் ஏறினான்.

தேவகி அவனை நிமிர்ந்து பார்த்தாள். போலீஸ் உடையில் இல்லாததால் அவனைப் பார்த்து அவளுக்கு எந்த சந்தேகமும் வரவில்லை. ரயில் கிளம்பியவுடன் கடைசி நிமிடத்தில் ஓடி வந்து ஏறுவதில் இந்த இளைஞர்களுக்கு என்ன தான் கிக்கோ என்று நினைத்து நிமிர்ந்தாள்.

இந்தப் பெட்டி என்று ஆட்டோ டிரைவர் சொன்னான். ஆனால் எந்தப் பெண்? விசுவஜித்திற்குப் புரியவில்லை. எப்படியும் ரயிலை நிறுத்தித்தான் ஆக வேண்டும். அபாயச் சங்கிலியைப் பிடித்து இழுத்தான்.

ரயில் க்ரீய்ச்சி விட்டு கூவென்று கூவி தன் ஆட்சேபத்தைத் தெரிவித்து விட்டு நிறுத்தத்திற்கு வந்தது.

தேவகி புரியாமல் கவனித்தாள்.

ஜன்னல் வழியே பார்த்தபோது, ஆட்டோ டிரைவர் ஓடி ஓடி வந்து மார்பெல்லாம் மூச்சிறைக்க, காக்கிச் சட்டை மார்புடன் வியர்வையில் ஒட்டியிருக்க அவளை நோக்கி விரல் நீட்டியவுடன் தான் திடுக்கிட்டாள்.

விசுவஜித் அவள் தோளில் கை வைத்து எழுப்பினான்.

''போலீஸ்!'' என்றான். ''உன்னிடம் விசாரிக்க வேண்டும் இறங்குகிறாயா?''

தேவகி மிரண்டாள். பெட்டியைத் தள்ளிக் கொண்டு எழுந்து இன்னொரு கதவு வழியே தப்பிக்க வெளியே



குதிக்கும் எண்ணத்தில் பைத்தியக்காரத்தனமாக செயல்பட்டு விசுவஜித்தின் நீட்டிய கையில் மறுபடி மாட்டினாள்.

இந்த முறை பிடி இறுக்கமாயிருந்தது.

அவள் பெட்டியைத் தூக்கி வெளியே வைத்து, அவளையும் தள்ளி இறங்கினான்.

ரயில் நிறுத்தியதற்கு ரயில்வே அதிகாரிகளிடம் விளக்கம் சொல்லி விட்டு, ஆட்டோ டிரைவருக்கு நன்றிகள் உதிர்த்து விட்டு தேவகியை ஜீப்பை நோக்கி நடத்திப் போனான்.

## 8

விசுவஜித் திரும்பிப் போனபோது, சப்-இன்ஸ்பெக்டர் அவனுக்கு செய்தி வைத்திருந்தார்.

''சார், இந்தப் பெண்ணின் கைப்பை ஒன்று கிடைத்தது. அதில் ஆராய்ந்து பார்த்தால் வேறொரு பெயர் இருக்கிறது, சார்.''

''என்ன பெயர்?''

''சிந்தாமணி என்று போட்டிருக்கிறது. இங்கே பாருங்கள், சார்.''

அவர் நீட்டிய சிறு அட்டையைக் கையில் வாங்கினான், விசுவஜித்.

அது ஒரு நூலக உறுப்பினருக்கான அடையாள அட்டை சிந்தாமணி, 25. ஆஸ்பத்திரித் தெரு என்று எழுதி உறுப்பினர் எண் 117 என்று கொடுக்கப்பட்டிருந்தது.

''கட்டிலுக்குக் கீழே கிடைத்த ஹேண்ட்பேக் இந்தப் பெண்ணினுடையது இல்லை. அந்தப் பெண் உயிருடன் என் ஜீப்பில் உட்கார்ந்து அழுது கொண்டிருந்தாள்...'' என்றான், விசுவஜித், ஆறுதலாக. ''போலீஸாயிருப்பதாலேயே எடுக்கும் முடிவுகள் எல்லாம் கரெக்டாக இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. யூகிப்பது எல்லாம் சரியாக இருக்க வேண்டிய கட்டாயம் இல்லை என்பதைப் புரிந்து கொண்டேன்'' என்றான், அந்த அட்டையைப் புரட்டிக் கொண்டே. ''வேட்டை மறுபடியும் தொடங்குகிறது...''

வந்திருந்த அதிகாரிகளிடம் பேசினான். கைரேகை நிபுணர்களிடம் தன் தேவையைக் குறிப்பிட்டான். டாக்டரிடம் பி.எம்.ரிப்போர்ட் விரைவில் கொடுக்குமாறு வேண்டிக் கொண்டான்.

சப்-இன்ஸ்பெக்டருக்கு மேலும் சில விவரங்கள் கூறி, அந்த வீட்டை சீல் வைக்குமாறு உத்தரவிட்டு விட்டு, புறப்பட்டான்.

* * *

தேவகி புடவைத் தலைப்பால் கண்களையும், மூக்கையும் அழுந்தத் துடைத்துக் கொண்டாள்.

கையிலிருந்த வளையல்களைப் பார்த்தபோது கோபம் கோபமாக வந்தது. இதற்கு ஆசைப்படப் போய்த் தானே இத்தனை பிரச்சனைகளும்! ச்சே. இந்த இன்ஸ்பெக்டர் எப்படி கொஞ்சம்கூட இரக்கமில்லாமல் அவளைப் பார்த்து சொல்லக் கூடாததை சொல்லி விட்டான்!



ஒரு கொலையைப் பண்ணி விட்டு தப்பித்து ஓடவாப் பார்க்கிறாய்?

தேவகியை அந்தக் கேள்வி புரட்டி எடுத்து விட்டது!

அவளைப் பார்த்தால் கொலைகாரி மாதிரியா இருக்கிறது? ஏதோ சின்னச் சின்னத் திருட்டுகள் செய்தவள் தான். முழுக்க முழுக்க யோக்கியமானவள் இல்லைதான். ஆனால் ஒரு ஈ எறும்பைக் கூட அவள் கொன்றதில்லை. கொல்ல நினைத்தது கூட இல்லை. இப்படிப்பட்டவளைப் பார்த்து கொலை பண்ணி விட்டு தப்பித்து ஓடுகிறாய் என்று இன்ஸ்பெக்டர் சொன்னதும் தாங்க முடியவில்லை. பொங்கிப் பொங்கி அழுதாள்.

இன்ஸ்பெக்டராம் இவன்! மூஞ்சியைப் பாரு. ஒரு யூனிஃபார்ம் கூடப் போடாமல், காலேஜ் பையன் போல ஸ்போர்ட்ஸ் பனியன் போட்டுக் கொண்டு! விடுவிடுவென்று நடக்கத் தெரிந்தால் போதுமா? நெடுநெடுவென்று ஆறடிக்கு வளர்ந்திருந்தால் போதுமா? குஸ்திக்காரன் போல உடம்பை வளர்த்து வைத்திருந்தால் போதுமா? இன்ஸ்பெக்டர் என்பவனுக்கு மூளை இருக்க வேண்டாம்? ஒரு ஆளைப் பார்த்தவுடன் இவன் கொலை செய்வான், இவன் செய்யமாட்டான் என்று புரிந்து கொள்ள வேண்டாம்?

இந்த ஆளைப் பார்த்தாலே பற்றிக் கொண்டு வருகிறது.

அவள் பற்களை நறநறவென்று கடிக்கும்போதே, விசுவஜித் ஜீப்பிற்குள் ஏறினான்.

தேவகியைப் பார்த்து புன்னகை புரிந்தான்.

சிரிக்காதே, போடா நாயே! தேவகி முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

விசுவஜித் அவள் எதிரில் அமர்ந்தான்.

''தேவகி... உன்னைப் பார்த்தால் நல்ல பெண் மாதிரி யும் தெரிகிறது. அப்புறம் ஏன் போலீஸிலிருந்து தப் பிக்கப் பார்த்தாய்?''

''நல்ல பெண் மாதிரி தெரிகிறதா! ஆஹா, நான் புண்ணியம் செய்தவள்...'' தேவகி மூக்கை உறிஞ்சினாள்.

ஜீப் புறப்பட்டது.

''ஒரு பெண் கொலையாகிக் கிடக்கிறாள். பக்கத்தி லேயே உன் ஹேண்ட் பேக் இருக்கிறது. அங்கே உன் பர்ஸ் வர வேண்டிய அவசியம் என்ன என்று போலீஸ் யோசிக்கக் கூடாதா?''

''என்னவோ நேரில் பார்த்தது போல் என்னைக் கொலைகாரி என்று சொன்னீர்களே! அரெஸ்ட் பண் ணுங்கள். இப்போதே தூக்கில் போடுங்கள்.''

''நடந்ததை நடந்தபடி நீ முதலில் சொல், தூக்கில் போடுவதா, ஆயுள் தண்டனை கொடுப்பதா, இல்லை இப்போதே விடுதலை பண்ணி விடலாமா என்று நான் முடிவு செய்கிறேன்...''

தேவகி அந்தக் காட்சியை மறுபடி தன் கண் முன்னே கொண்டு வந்தாள் அந்தப் பெண். பயத்தில் விரிந்த கண்கள். அலறத் தவிர்த்து பிளந்த வாய். அவள் கழுத்தில் செருகிய அந்தக் கத்தி.



தேவகியின் உடம்பு நடுங்கியது. தூக்கி வாரிப் போட்டு, குளிர் எடுத்தது. ஒரு பெண் காதலுடன் அணைக் கும்போது, சற்றும் சலனம் இல்லாமல் அவள் கழுத்தை அழுத்திக் கீழே தள்ளி, ஆத்திரத்துடன் கத்தி பாய்ச்சிய அந்த முரட்டு முகம் நினைவில் வந்ததுமே அவள் அடிவயிற்றில் இறுக்கம் ஏற்பட்டது.

அவனுக்கு எதிராக ஒரு விரல் அசைத்தால்கூட அவன் தன் கழுத்தையும் அதே போல் சீவி விட்டால்?

''இதோ பார், உண்மைகளை மட்டும் சொல். மறைத் தால் உனக்கு நிச்சயம், தூக்கு தண்டனை கிடைக்கும் ஆபத்து இருக்கிறது'' என்று விசுவஜித் மிரட்டினான்.

தேவகிக்குள் குழப்பம் வெடித்தது. கொலை நடந்த இடத்தில் அவள் ஹேண்ட்பேக் அட்ரஸுடன். அவள் ரயிலேறித் தப்பிக்கிற கடைசி நொடியில் இன்ஸ்பெக்ட ரிடம் மாட்டிய திடுக். நிச்சயம் நீதிபதி இந்த முட்டாள் போலீஸ்காரன் சொல்வதைத்தான் நம்புவார். பேசாமல் இவனிடமே எல்லா உண்மைகளையும் பிட்டுப் பிட்டு வைத்து விடலாம்.

''உண்மையைச் சொன்னால் என்னை விட்டு விடு வீர்கள் தானே?'' என்றாள், விசும்பலினூடே சந்தேகம் காட்டி.

''சொல்...''

தேவகி சற்றுத் தயங்கிவிட்டு, நகைக் கடையில் நுழைந்ததிலிருந்து, ரயிலில் அவன் மடக்கிப் பிடித்தது வரை எதையும் மறைக்காமல் சொல்லி முடித்தாள்.

விசுவஜித் முழு கவனத்துடன், சற்றும் கவனம் சிதறாது அவள் சொன்னதையெல்லாம் கேட்டான்.

அவன் நினைத்ததைவிட இந்தக் கேஸ் சிக்கலாகிக் கொண்டிருக்கிறது.

* * *

கேசவ் லெண்டிங் லைப்ரரி என்ற போர்டில் ஆயுத பூஜைக்கு வைத்த சந்தனமும் குங்குமமும் காய்ந்திருந்தன. பூமாலை வாடி துகள்கள் ஒட்டிக் கொண்டிருந்தன. துரு அரித்த ஒரு ஓரத்தில் ஞாயிறு விடுமுறை ஸ்டிக்கர் ஒட்டி மறைக்கப்பட்டிருந்தது.

நூலகத்தின் எல்லா விளக்குகளையும் அணைத்து ஷட்டரை கரகரவென்று இழுத்துக் கொண்டிருந்த கேசவ் நிமிர்ந்து பார்த்தான்.

போலீஸ் ஜீப்! பக்கத்திலிருக்கும் பீடா கடைக்கு வந்திருப்பார்கள் என்று அசிரத்தையாக இருந்தான்.

"நீங்கள் தான் லைப்ரரி ஓனரா?"

விசுவஜித்தின் குரல் கிண்ணென்றிருந்தது.

"யெஸ்... நீங்கள்?"

"போலீஸ்!"

"நான் உங்களுக்கு எப்படி உதவ முடியும்?"

"இந்த உறுப்பினரைப் பற்றி தகவல் தர முடியுமா?" விசுவஜித் அந்த அட்டையை அவனிடம் நீட்டினான்.

சிந்தாமணி என்ற பெயரைப் பார்த்ததும் கேசவின் முகம் மாறியது. "சிந்தாமணிக்கு என்ன?" என்றான், பதட்டத்துடன்.

"ஸோ, உங்களுக்கு சிந்தாமணியைப் பற்றித் தெரியும்..."

"நன்றாக..."



"கடையைப் பூட்டி விட்டு ஜீப்புக்கு வாருங்கள்."

கேசவ் குழப்பத்துடன் பூட்டினான். ஜீப்பை நெருங்கினான்.

"இவனா?" என்றான், விசுவஜித் - தேவகியைப் பார்த்து.

அவள் கேசவைப் பார்த்தாள். இல்லை என்று தலையசைத்தாள்.

"இவ்வளவு தூரம் கதை கேட்டீர்கள். அப்புறம் தப்பான ஆளைக் காட்டி இந்த ஆளா என்று கேட்கிறீர்கள்!" என்றாள், சிடுசிடுப்பாக.

"தப்பான ஆளா, ரைட்டான ஆளா என்று நீ தானே சொல்ல முடியும்?"

"போலீஸில் உங்களை எப்படித்தான் வேலைக்குச் சேர்த்தார்களோ? கொலைகாரனின் இடது கன்னத்தில் அவள் கத்தியால் ஆழமாகக் கீறினாள் என்று சொன்னேனே, இவன் கன்னத்தில் காயம் இருக்கிறதா?"

சரேலென்று சவுக்கால் அடித்தது போலிருந்தது விசுவஜித்திற்கு.

அவன் எடை போட்ட அளவிற்கு புத்திசாலித்தனமே இல்லாதப் பெண் இல்லை இவள்!

"உங்கள் பெயர் என்ன லைப்ரரியன், சார்?"

"கேசவ், சிந்தாமணிக்கு என்ன?" கேசவின் கண்களில் கவலை இருந்தது.

"ஷீ இஸ் டெட்..."

"என்னது!"

''செத்து விட்டாள். இன்ஃஸ்பாக்ட், கொலை செய்யப் பட்டு விட்டாள்...''

''மை காட்! மை காட்! மை காட்!'' - கேசவ் தன் நெற்றி யின் இருபுறமும் அப்படியே அழுத்திக் கொண்டான்.

''சிந்தாமணி தான் என்று தெரியுமா? ஒன் மினிட், இந்த போட்டோவைப் பாருங்கள்...'' - அவசரமாக தன் பர்ஸ் எடுத்து, பர்ஸிலிருந்து அந்த போட்டோ எடுத்து நீட்டினான்.

போட்டோவில் சிந்தாமணியைப் பார்த்ததும், விசுவ் ஜித்திற்கு மனசைப் புரட்டியது. எவ்வளவு அழகான பெண். ஆனால்,

''யெஸ், இவள்தான்...'' என்றான், விசுவஜித். ''இவள் ஏன் அந்த வீட்டிற்குப் போனாள் என்று தெரியுமா, கேசவ்?''

''தெரியும். அந்த அயோக்கிய ராஸ்கலைப் பார்க்கப் போனாள். போகாதே என்று எத்தனையோ தடுத்தும், என் பேச்சை மீறி விட்டுப் போனாள்.

''எந்த அயோக்கிய ராஸ்கல்?''

''அனந்தராம்...'' கேசவின் முகம் இறுகியிருந்தது.

''கேள்விப்பட்ட பெயர். யார் அவன்?''

''சிவநேசனின் பிரதர்...''

''சிவநேசன்! தி கிரேட் சிவநேசன்! அவனுடைய பிரதர் இந்தப் பையன் - அனந்தராம்? வெரிகுட்... வெரிகுட்...''

''கொலையே செய்து விட்டானா, சார்? எனக்கு உடனே அவனைப் பார்க்க வேண்டும் சார். உடனே என் சிந்தா மணியைப் பார்க்க வேண்டும்...''



''பார்க்காதீர்கள், கேசவ். தாங்க மாட்டீர்கள்... ஜீப்பில் ஏறுங்கள்... உங்களுடன் இன்னும் பேச வேண்டும்...''

* * *

போலீஸ் கமிஷனர் கரிகாலன் தன் அடர்ந்த மீசைக் குள்ளிருந்த உதடுகளில் சிகரெட் ஒன்றை செருகினார். லைட்டர் எடுத்து ஜோதி உருவாக்கினார்.

புகையை ஆழமாக இழுத்து அறையை நிரப்பினார். ''அவசரப்படவில்லையே, விசுவஜித்?'' என்றார். குரல் கனமாய் இருந்தது.

''இல்லை சார், நேரில் பார்த்த ஒரே சாட்சி இப்பொழுது என்னிடம் இருக்கிறாள். அவளிடம் அனந்தராமின் புகைப்படத்தைக் காட்டிக் கேட்டேன். அவனே தான் என்கிறாள். அனந்தராமிற்கும், செத்துப் போன சிந்தா மணிக்கும் தொடர்பு இருந்தது என்பதை சுலபமாக நிரூபிக்க முடியும், சார்... சிவநேசன் இருக்கும் தைரியத் தில் இப்படி ஒரு பச்சைக் கொலை செய்திருக்கிறான், அனந்தராம். யாரும் பார்க்கவில்லை என்று நம்பிக் கொண்டிருக்கிறான். அவன் இடது கன்னத்தில் வெட்டுக் காயம் இருந்தால் தேவகியின் சாட்சி உறுதி பெற்று விடும்...''

விசுவஜித் நிமிர்ந்து நின்று பேசினான்.

''உன்னுடைய பரபரப்பு எனக்கும் இருக்கிறது. விசுவஜித். ஆனால் சிவநேசன் செல்வாக்கு மிகுந்தவன். ஆளும் கட்சிப் பிரமுகர்களிலிருந்து, எதிர்க்கட்சிப் பிரமுகர்கள் வரை அத்தனை இடத்திலும் அவனுக்கு ஆட்கள் இருக்கிறார்கள். நாம் ஒரு அடி தப்பாக வைத்து

விட்டால் கூட அத்தனை பேரும் சேர்ந்து ஒரே அழுத்தாக அழுத்தி விடுவார்கள்..."

"அதையும் உணர்ந்திருக்கிறேன், சார். ஆனால் இதைப் போன்று இன்னொரு சந்தர்ப்பம் நமக்குக் கிடைக்காது. அனந்தராம் அவன் அண்ணன் தயவில் நாளைக்கே இன்னொரு கள்ளக் கடத்தல் மன்னனாகவோ, போதை மருந்து அரசனாகவோ மாறுவதற்கு முன்னால் அவனை ஒடுக்கி விட வேண்டும். அவனைக் காப்பாற்ற எண்ணி சிவநேசனும் பரபரப்பாகச் செயல்படும் போது, அவனுடைய சிறு தவறுக்காகக் காத்திருந்து அவனையும் மடக்கி விட வேண்டும் என்பது என் ஆசை..."

"உன் நியாயமான ஆசைகளுக்கு என்னுடைய ஒத்துழைப்பு என்றைக்குமே உண்டு, விசுவஜித். கொலை நடந்த வீட்டில் இருக்கும் அத்தனை கைரேகைகளையும் கவனமாக எடுக்கச் சொல். அனந்தராமின் கைரேகை ஒத்துப் போனால், நம் பக்கம் இன்னும் ஸ்ட்ராங்காகி விடும். அப்புறம் அனந்தராமை சந்தேகத்தின் பேரில் கைது செய். இந்தக் கேஸின் முழுப் பொறுப்பையும் உன்னிடம் நம்பி விடப் போகிறேன். போலீஸ் துறையிலும் சிவநேசனுக்கு விசுவாசமானவர்கள் பலர் இருக்கிறார்கள் என்பதை மறந்து விடாமல் கவனமாக ஒவ்வொரு அடியும் எடுத்து வை..."

அவருடன் பேசிவிட்டு வெளிப்பட்டதும், விசுவஜித்திற்கு உற்சாகம் திரண்டது. நம்பிக்கை பெருகியது.

ஜீப்பில் சந்தோஷமாக ஏறினான்.

"கமிஷனர் உத்தரவு தந்து விட்டார், தேவகி - அனந்தராமைக் கைது செய்வதற்கு உன்னை நம்பித்தான் இந்தக் கேஸே நிற்கிறது..."



"அந்த முரடனிற்கெதிராக சாட்சி சொல்ல நான் தயார்" என்றாள் தேவகி. திடீரென்று அவளுக்குள் அனந்தராம் பற்றிய பயம் விலகி ஒரு கோபம் உருவாகி விட்டதை அவளாலேயே உணர முடிந்தது.

ஜீப் புறப்பட்டது.

"சார், அனந்தராமைத் தூக்கில் போட வேண்டும். என் வீட்டை விற்றாவது அதற்கான பணம் புரட்டித் தருகிறேன்" என்றான், கேசவ், ஆவேசமாக.

## 9

சிவநேசன் வேட்டி புரள படிகளில் இறங்கி வந்தார்.

அவருடைய ஓய்வு கலைக்கப்பட்டதன் கோபம் கண்களைச் சுருக்கியிருந்தது. மிக அவசியம், அவசரம் என்றில்லாவிட்டால் அவருடைய பர்ஸனல் செக்ரட்டரி - வீட்டிற்கு வந்து கூப்பிட மாட்டார் என்பது சிவநேசனுக்குத் தெரியும்.

இறங்கி வந்ததும், ஹால் சோபாவில் சென்று கம்பீரமாக அமர்ந்தார்.

"என்ன?"

"அய்யா, போலீஸிலிருந்து போன் வந்திருந்தது..."

"என்னவாம்?"

''எஸ்.ஐ.சாம்பமூர்த்தி பேசினாருங்க. நம்ம தம்பி மேலே ஒரு கொலை கேஸ் ஃபைல் பண்ணப் போறாங் களாம்.''

''அனந்தராம் பேரிலா?''

''ஆமாங்க. சிந்தாமணின்னு ஒரு பொண்ணை தம்பி வச்சிருந்தாருங்க. அதுங்கூட என்ன மனஸ்தாபமோ வெட்டிட்டாருங்க... ஆனா பாருங்க நேர்ல பாத்த சாட்சி இருந்ததை கவனிக்கலையாம். கமிஷனர் கூட அரெஸ்ட் டுக்கு ஒகே சொல்லிட்டாராம்...''

சிவநேசன் இரண்டு நொடிகள் எடுத்துக் கொண்டார். செய்தியை அவர் ரசிக்கவில்லை என்று தெரிந்தது.

''அனந்தராம் எங்கே?''

''கெஸ்ட் ஹவுஸ்ல இருக்காருங்க...''

* * *

ஜன்னல் வழியே காரைப் பார்த்ததுமே அனந்தராமிற்கு ஜன்னி கண்டது. டாட்டா சியாரா ஸ்பெஷல். இது அண்ணனின் பிரத்யேகக் கார்.

கதவு திறந்து சிவநேசனின் வேட்டிக் கால்கள் தெரிந் ததும், அனந்தராம் அவசரமாக விஸ்கி பாட்டிலை எடுத்து சோபாவுக்கடியில் வைத்தான். நண்பர்கள் மிரண்டு எழுந்தார்கள்.

சிவநேசனின் கண்கள் சிவந்திருந்தன.

''என்னடா கன்னத்தில் காயம்?''

''அது வந்து... நான்... வந்து...''

''சிந்தாமணி கிழித்தாளா?''



அனந்தராம் திகைத்தான். இந்த உலகத்தின் எந்த முடுக்கில் என்ன சேதி நடந்தாலும், எப்படி இந்த அண்ண னுக்கு உடனே தெரிந்து விடுகிறது?

தலையைக் குனிந்து கொண்டான்.

''கொலை செய்ய நீயே போனாயா?''

ஆம் என்று தலையசைத்தான்.

''ஏன் இத்தனை பேர் ஓசியில் தண்ணீர் சாப்பிட்டுக் கொண்டு புடுங்குவதற்கா இருக்கிறார்கள்...''

''அதில்லை அண்ணா... அவள் எனக்கு துரோகம் செய்தாள்... அதனால்...''

''நேரிலேயே போய் சாட்சி வைத்துக் கொண்டு கொலை பண்ணி விட்டு வந்தாயாக்கும்...''

''சாட்சியா? சாட்சி ஒரு ஈ எறும்பு கூட கிடையாது...''

''ஈ எறும்பா - முழுசாய் இருபத்திரண்டு வயதுப் பெண் இருக்கிறது. அவளுடைய கத்தியால்தான் சிந்தாமணி உன் கன்னத்தையே கிழித்தாளாம்.''

''அந்தக் கத்தியை நான் எடுத்து வந்து விட்டேன். போலீஸிடம் கிடைத்தால் நாளைக்கு ரத்த குரூப்பெல் லாம் வைத்து கம்பேர் பண்ணுவார்கள் என்று கீழே ஒரு சொட்டு ரத்தம் கூட சிந்தாமல் அந்தக் கத்தியையும் எடுத்துக் கொண்டு வந்து விட்டேன்...''

''உன் புத்திசாலித்தனத்திற்கு ஆஸ்கார் பரிசு தான் தர வேண்டும். ஆளையே முழுசாக விட்டு விட்டு கத்தியை எடுத்து வந்து விட்டானாம்! இந்தக் கன்னத்தில் இருக்கும் வெட்டுக் காயம் ஒன்று போதும். உன்னை நேரடியாக அரெஸ்ட் பண்ண...''

அனந்தராம் ஏதோ பேச வாய் திறந்து, தயங்கி மூடிக் கொண்டான்.

"இப்பொழுது என்னண்ணா செய்வது?"

தோழன் ஒருத்தன் கேட்டான்.

சிவநேசன் அவனை ஆத்திரத்துடன் திரும்பிப் பார்த்தார்.

"போய் மொட்டை போட்டுக் கொள்ளுங்கள் எல்லோரும்" என்றார் கோபத்துடன். "நான் அங்குலம் அங்குலமாக அமைத்துக் கட்டிய கோட்டையை அரை நிமிடத்தில் அழிப்பதற்காகத் தானே எனக்கொரு தம்பி பிறந்தான்?"

சிவநேசன் இவ்வளவு கோபப்பட்டு நண்பர்கள் பார்த்ததில்லை. அதுவும் மற்றவர்களுக்கு எதிரில் தம்பியை விட்டுக் கொடுக்கும் சிவநேசன் அவர்களுக்குப் புதிது. இந்த அளவிற்குப் போக வேண்டுமென்றால், நிச்சயம் இது சீரியஸான மேட்டராகத்தான் இருக்க வேண்டும்.

"இதோ பார், போலீஸ் வரும்போது இந்தக் காயத்துடன் இருக்கக் கூடாது..."

"காயத்தை மறைத்து தாடி ஒட்டிக் கொள்ளவா?"

"முட்டாள். போலீஸால் தாடியைப் பிரித்துப் பார்க்க முடியாதா?"

"வேறென்ன செய்வது?"

"பைக்கை எடுத்துப் போ. எங்காவது சுவரில் மோது. கன்னத்தைக் கொண்டு போய் சுவரில் மோதி இன்னும் இரண்டு இடங்களில் பெரிய காயமாக்கிக் கொள்.



ஆஸ்பத்திரியில் சேர்ந்து விடு. போலீஸ் கேட்டால், அந்த விபத்தில்தான் கன்னம் காயமானது என்று சாதிக்கலாம்."

"எப்படிண்ணா உங்களுக்கு மட்டும் இப்படி பளிச் பளிச் என்று ஐடியா தோன்றுகிறது?"

"ச்ச்ச்... இந்த அலம்பல்கள் எல்லாம் என்னிடம் வேண்டாம். என் சாம்ராஜ்யத்தை சரிக்க வேண்டும் என்று போலீஸ் கமிஷனர் துடித்துக் கொண்டிருக்கிறான். அதற்கு நீ காரணமாய் இருந்தால், உனக்கு என் கையால் தான் மரண மணி..."

சிவநேசன் விருட்டென்று வெளியேறிப் போனார்.

அனந்தராம் அதிர்ச்சியிலிருந்து மீள சில நிமிடங்கள் ஆயின.

* * *

சிவநேசன் தன் சுழல் நாற்காலியில் உட்கார்ந்தார். மேஜை டிராயரைத் திறந்து பணக்கட்டுகளை எடுத்து மேஜை மீது வைத்தார். எல்லாம் நூறு ரூபாய்க் கட்டுகள்.

தன் செக்ரட்டரியைப் பார்த்து, "அவனை உள்ளே வரச் சொல்" என்றார்.

செக்ரட்டரி போய் கதவைத் திறந்து, "வா" என்றார்.

உள்ளே நுழைந்தவன் ஆறடி உயரம் இருந்தான். அமைப்பான உடல். முகத்தில் ஹீரோத்தனம். அவனைப் பார்த்தால் உடனே பிடித்துப் போகிற மாதிரியான ஒரு குழந்தைத்தனம் - அவன் முகத்தில். நேரான நாசி. அடர்த்தியான மீசை. அளவான உதடுகள். மழமழவென்ற கழுத்து. நீளமான கைகள், கால்கள்.

சிவநேசனின் எதிரில் கைகளைக் கூப்பினான். ''வணக்கம் ஐயா, கூப்பிட்டு விட்டீர்களாமே.''

''ஆமாம், தாண்டவா...'' - சிவநேசன் சற்றே சுவாசித்து விட்டுத் தொடர்ந்தார். ''தாண்டவனிடம் ஒரு பொறுப்பை ஒப்படைத்தால் அப்புறம் அதை நான் மறந்து விடலாம் என்று எனக்குத் தெரியும்...''

''உங்களுக்கு இடைஞ்சலாக இருப்பது யார் என்று சொல்லுங்கள் ஐயா. ரப்பரால் அழிக்கிற மாதிரி அழித்து விட்டு வருகிறேன்...''

''ஒரு பெண். பெயர் தேவகி. இப்போது போலீஸ் கஸ்டடியில் இருக்கிறாள். அவளுடைய போட்டோ என்னிடம் இல்லை. ஒன்றிரண்டு நாட்களுக்குள் தரச் சொல்கிறேன். அவள் என் தம்பிக்கு எதிராக சாட்சி சொல்லப் போகிறாள். சாட்சி சொல்லி விட்டால் அப்புறம் என் தம்பியின் கதி அதோ கதி...''

''அவளை சாட்சி சொல்ல விடமாட்டேன். ஐயா...''

''கொலை என்று தெரியாமல் இருந்தால் நல்லது. ஒரு விபத்து போல செட்டப் செய்ய முடியுமா என்று யோசி... உனக்கு போலீஸ் தரப்பில் ஏதாவது உதவி வேண்டுமென்றால் - சப் இன்ஸ்பெக்டர் சாம்பமூர்த்தியைத் தொடர்பு கொள்... அவர் அட்ரஸும், போன் நம்பரும் செக்ரட்டரி தருவார். போலீஸிடம் மாட்டாதே. அப்படி தப்பித் தவறி மாட்டினால்...''

''சத்தியமாக உங்கள் பெயர் வெளியே வராது ஐயா...''

''ஐம்பதாயிரம் இருக்கிறது. அட்வான்ஸ். காரியம் முடிந்ததும் நீயே எவ்வளவு என்று கேள். தருகிறேன்...''

''சரிங்க ஐயா...''



தாண்டவன் அவ்வளவு நீண்ட உடலை அழகாக வளைத்து வணங்கி விட்டு, மேஜை மீதிருந்த பணக் கட்டுகளை மரியாதையாக எடுத்துக் கொண்டு புறப் பட்டான்.

* * *

சூரியன் இன்னும் கடலுக்குள்ளிருந்து தலை தூக்காத இளம் விடியல் நேரம். முன் விளக்குகளைப் போட்டுக் கொண்டு சர் சர் என்று மூன்று ஜீப்கள். அந்த பெரிய பங்களாவின் முன் வந்து நின்றன.

கேட் திறக்கத் தயங்கிய வாட்ச்மேனைக் கொத்தாகப் பற்றி கான்ஸ்டபிள்கள் நகர்த்த, கேட் திறந்து ஜீப்கள் நுழைந்தன. போர்ட்டிகோ அருகில் நின்றன.

போலீஸ்காரர்கள் குதித்து இறங்க, விசுவஜித், கம்பீரமாக நடந்து கதவில் இருந்த மணியை அடித்தான்.

கதவு திறந்தது. வேலைக்காரன் வேட்டியை உடனே தழைத்து, ''வாங்க'' - என்று வரவேற்று சோபாவைக் காட்டினான்.

''நாங்கள் உட்கார வரவில்லை. எங்கே அனந்தராம்?''

''ஒரு நிமிஷம் ஐயா...'' வேலைக்காரன் உள்ளே பதுங்கினான்.

மாடிக்குத் தகவல் அனுப்பப்பட்டு, வேட்டி புரள, சிவநேசன் கைகளைக் கூப்பியபடி இறங்கினார்.

''உட்காருங்கள், உட்காருங்கள்... வராதவர்கள் எல்லாம் வந்திருக்கிறீர்கள்... என்ன விஷயம்? போலீஸ் நல்வாழ்வு நிதிக்காக ஏதாவது டிராமா டிக்கெட் விற்க வந்தீர்களா? சொல்லியனுப்பினால் செக்ரட்டரி மூலம் நானே பணம் அனுப்பியிருப்பேனே...''

கள்ளச்சிரிப்பு உதடுகளில் அகங்காரமாக உட்கார்ந்திருந்தது.

அப்படியே அவர் மீது பாய்ந்து கிழித்து விடலாமா என்று ஆத்திரம் வந்தது, விசுவஜித்திற்கு.

"அனந்தராமை அழைத்துப் போக வந்தேன்..."

"அனந்தராமா? அவன் இங்கே இல்லையே... என்ன விஷயம் இன்ஸ்பெக்டர்? உட்காருங்கள்... உட்கார்ந்து பேசுங்கள்..."

போலீஸ் உட்கார்வதற்காகப் பொறுமையுடன் காத்திருப்பது அர்த்தமில்லை என்பது போல, சிவநேசன் சோபாவில் அமர்ந்து கால் மேல் கால் போட்டுக் கொண்டார்.

"அனந்தராமை அரெஸ்ட் பண்ண வந்திருக்கிறேன்..."

"அரெஸ்ட்டா! நோ என்ட்ரி ரோடில் புகுந்து விட்டானா?"

"மிஸ்டர் சிவநேசன், உங்கள் பேச்சுத் திறமையை ரசிக்க நான் வரவில்லை... அனந்தராமை ஒரு கொலை தொடர்பாக கைது செய்ய வந்திருக்கிறேன்..."

"கொலையா? யாரை?"

"சிந்தாமணி என்கிற பெண்ணை..."

"சாட்சி?"

"இருக்கிறது... அனந்தராம் எங்கே?"

"உங்கள் டிபார்ட்மெண்ட் ஆசாமிகள் உங்களுக்கு சரியான தகவல்களைப் பொறுப்பாகத் தருவதில்லையா? அனந்தராம் நேற்று பைக் ஓட்டும் போது ஒரு ஆக்ஸிடென்ட்டில் மாட்டி ஆஸ்பத்திரியில் இருக்கிறானே...



போலீஸ் கேஸ் எழுதியிருப்பது உங்களுக்குத் தெரியாதா?"

விசுவஜித்தின் முகம் இறுகியது. "எந்த ஆஸ்பத்திரி?"

"ரோஜா ஹாஸ்பிடல்ஸ்... அந்தச் சின்னப் பையனை அரெஸ்ட் பண்ணவா தபதபவென்று இத்தனை ஜீப்பில் போலீஸ்காரர்கள் எல்லோரும் வந்தீர்கள்! போங்கள், ஹாஸ்பிடலில் பார்த்து அப்படியே வேண்டுமானால் அரெஸ்ட் பண்ணிக் கொள்ளுங்கள்..."

சிவநேசன் எழுந்தார்.

விசுவஜித் சற்றே கோபமானான். விறைப்பாகத் திரும்பினான்.

"இருங்கள் - இருந்து காபி சாப்பிட்டு விட்டுப் போங்கள். காலை நேரத்தில் வந்து விட்டு காபி கூட சாப்பிடாமல் போனால் நன்றாயிருக்காது..."

விசுவஜித் அவரை முறைத்து விட்டு விறைப்பாக வெளியேறினான்.

## 10

ரோஜா ஹாஸ்பிடல்ஸ்.

அடையாறு பகுதியில் நவீனக் கட்டிடம். முற்றிலும் ஏர் கண்டிஷன் செய்யப்பட்டு ரூமுக்கு ரூம் ஸ்டார் டெலி

விஷனுடன் போன் வசதியுடன் அலங்காரமாய் அமைக்கப்பட்ட ஆஸ்பத்திரி. மேல்தட்டு மனிதர்களின் நோய்களுக்கான செல்வச் செழிப்புள்ள சிகிச்சை முறைகள்.

இதே ஆஸ்பத்திரிக்கு எத்தனையோ தடவைகள் கனவுகளுடன் வந்திருக்கிறான். இப்போது சற்று கவலையுடன், நிறைய கடமையுணர்ச்சியுடன் விசுவஜித் அந்தக் கட்டிடத்திற்குள் நுழைந்தான். பரிச்சயமான புன்னகைகளை எதிர்கொண்டான். ரிசப்ஷனில் விசாரித்தான்.

''ஆமாம். சார். ராத்திரி இரண்டு மணி இருக்கும். அனந்தராம் இங்கே அட்மிட் ஆனார்...''

''ரூம் நம்பர்?''

''மூன்றாவது மாடி. பதினைந்து...''

லிப்ட். மூன்றாவது மாடி. பதினைந்தாம் நம்பர் ரூம்.

கதவைத் தட்டி விட்டு நுழைந்தான்.

அனந்தராம் கட்டிலிலிருந்து ஒற்றைக் கண்ணைத் திறந்து பார்த்தான். இன்னொரு கண்ணை மூடி கட்டு போடப்பட்டிருந்தது. கன்னத்தில் மொத்தையாக பாண்டேஜ் துணி. அனந்தராம் அந்த ஒற்றைக் கண்ணை அசைத்து உள்ளே வாருங்கள் என்பது போல் சைகை செய்தான். அவனை கவனித்துக் கொண்டிருந்த டாக்டர் நிமிர்ந்தார்.

''யெஸ், இன்ஸ்பெக்டர்?''

அறையின் இன்னொரு புறம் பாலிமர் நாற்காலியில் வெள்ளை சட்டை, வெள்ளை பேண்ட் போட்டிருந்த ஒரு



நடுத்தர வயது மனிதரும் எழுந்து வந்து, ''குட்மார்னிங் இன்ஸ்பெக்டர், நீங்கள் தான் இந்த ஆக்ஸிடென்ட் கேஸை டீல் பண்ணுகிறீர்களா?'' என்றார்.

''ஆக்ஸிடென்ட்டா? என்ன ஆக்ஸிடென்ட்?''

''ஓ, உங்களுக்குத் தெரியாதா? அனந்தராம் நேற்றிரவு பைக் ஒட்டும்போது, குடித்து விட்டு ஒரு கிழவன் குறுக்கில் வந்து விட, அவனைக் காப்பாற்ற இவன் ஒதுங்கி, பிளாட்பாரத்தில் பைக் ஏறி, கவிழ்ந்து, அங்கிருந்த காம்பவுண்டு சுவர் மீது அனந்தராம் தூக்கியெறியப்பட்டு, இடது கன்னம் கிழிந்து போய்.. என்ன டேமேஜ் என்று சொன்னீர்கள் டாக்டர்?''

''ஜா - போன். தாடை எலும்பு பிராக்சர் ஆகிவிட்டது. கன்னத்தில் வெட்டுக் காயம் வேறு. இரண்டு பற்கள் நொறுங்கி விட்டன. எடுத்து விட்டோம்...'' என்றார், டாக்டர்.

''நான் அனந்தராமுடன் பேச வேண்டும்...'' என்றான், விசுவஜித்.

''தாராளமாகப் பேசலாம். நீங்கள் பேசுவதை அவனால் கேட்க முடியும் அவனால்தான் பதில் பேச முடியாது. இன்னும் எட்டு, பத்து நாள் ஆகும் வாயை அசைக்க என்று டாக்டர் சொல்லியிருக்கிறார்'' என்றார் வெள்ளை உடுப்பு மனிதர்.

''நீங்கள்?''

''நான் டாக்டரில்லை. அனந்தராமின் வக்கீல். பெயர் அப்பாதுரை. இந்த ஆக்ஸிடென்ட் தொடர்பாக போலீஸ் ஏதாவது விசாரிக்க விரும்பினால் இருக்கட்டும் என்று நானும் கூடவே இருக்கிறேன்...''

என்ன சாமர்த்தியம்! இந்த விபத்தே வேண்டுமென்றே ஏற்படுத்தப்பட்ட ஒன்றாய்த்தான் இருக்கும். அனந்த ராமன் கன்னத்தில் இருக்கும் வெட்டுக் காயத்தை அடையாளம் வைத்து அவனை அரெஸ்ட் பண்ணக் கூடாது என்ற முன்னெச்சரிக்கையாய் இருக்கும். எந்த நிமிடமும் சிந்தாமணி கொலை தொடர்பாக போலீஸ் சந்திக்க வரலாம் என்று வக்கீலை முன்னேற்பாடுடன் அங்கேயிருக்கச் சொல்லியிருக்கிறார் சிவநேசன் - நினைக்க நினைக்க உஷ்ணமானது, விசுவஜித்தின் உடம்பு.

''நான் அனந்தராமுடன் தனிமையில் பேச வேண்டும்.''

''அவனுடைய வக்கீல் நானும் கூட இருப்பதற்கு நீங்கள் ஆட்சேபிக்க முடியாது, இன்ஸ்பெக்டர். அவன் உடல்நிலை கருதி டாக்டரும் அவனை விட்டு அந் தண்டை இந்தண்டை நகர முடியாது. தனிமையில்தான் பேச வேண்டும் என்றால் இன்னும் மூன்று வாரம் கழித்து, அவன் டிஸ்சார்ஜ் ஆனபிறகு வீட்டில் போய் சந்தியுங்கள்...''

விசுவஜித் தன் மூக்கு நுனி சிவப்பதை உணர்ந்தான். ரத்தம் கொதித்து உடம்பு சூடானது.

''நான் அனந்தராமை ஒரு கொலை தொடர்பாக அரெஸ்ட் பண்ண வந்தேன்...''

''கொலையா? யூ மீன் மர்டர்? நேற்று பைக்கில் யாரும் அடிபடவில்லை என்று தானே என்னிடம் சொன்னான்...''

''பைக்கில் அடிபட்ட கேஸ் என்று நான் சொல்லவில்லை. அதற்கு முன்னால் ஈவினிங் நடந்த மர்டர் இது...''



''விவரங்கள் தரமுடியுமா?''

''நேற்று மாலை ஐந்து மணியிலிருந்து இந்த நிமிடம் வரை அனந்தராம் எங்கெங்கே இருந்தான் என்று எனக்குத் தெரிய வேண்டும்...''

''சிம்ப்பிள்...'' என்றார், வக்கீல் அப்பாதுரை. ''நேற்று ஐந்து மணி வரை ஜிம்கானா கிளப்பில் இருந்தான். அப்புறம் அங்கிருந்து சப்-இன்ஸ்பெக்டர். சாம்பமூர்த்தி வீட்டில் ஒரு பார்ட்டி. அதற்குப் போயிருந்தான். அங்கே இரவு வரை இருந்து விட்டு வீடு திரும்பும் போது தான் பைக் ஒரு விபத்தில் மாட்டியது.... அப்புறம் ஆம்புலன்ஸ் வரவழைத்து நேரே ஹாஸ்பிடல்...''

''அனந்தராமின் கூடவே இருந்தது போல் இவ்வளவு பக்காவாக சொல்கிறீர்கள்? போலீஸ் வரும் என்று தெரியுமா?''

''ஆக்ஸிடென்ட் தொடர்பாக விசாரிக்க வருவார்கள் என்று நினைத்தேன். மேலும் விபத்து சமயம் தவிர, மற்ற நேரமெல்லாம் நீங்கள் சொன்னது போல நானும் அனந்தராமுடன் தான் இருந்தேன்...''

எல்லோரும் பணத்தால் அறையப்பட்டு வாங்கப் பட்டிருக்கிறார்கள்!

''அனந்தராமை சந்தேகத்தின் பேரில் அரெஸ்ட் பண்ணு கிறேன்.''

''அரெஸ்ட் பண்ணி? இந்த ஆஸ்பத்திரியிலிருந்து அவனை வேற எங்கும் நகர்த்த முடியாது இன்ஸ்பெக்டர்... பெய்லில் எடுக்க இப்போதே ஏற்பாடு செய்கிறேன்...''

''அனந்தராம் பேச முடிகிற வரை அவனுக்கு காவலாக இங்கே இரண்டு கான்ஸ்டபிள்கள் இருப்பார்கள்...''

''இருபது கான்ஸ்டபிள்கள் வேண்டுமானாலும் இருக்கட்டும்... நோ பிராப்ளம்.. நிரபராதியைக் கைது செய்ய சட்டத்தில் இடம் இல்லை'' என்று சிரித்தார், அப்பாதுரை.

''ஹலோ!'' என்று குரல் கேட்டது. அறைக் கதவு திறந்து சிந்தியா நர்ஸ் உடையில் நின்றாள். விசுவஜித்தைப் பார்த்து புன்னகை வீசினாள். ''நீங்கள் வந்திருக்கிறீர்கள் என்று சொன்னார்கள். அது தான் ஓடி வந்தேன்...''

அனந்தராம், டாக்டர், வக்கீல் மூவரின் பார்வைகளும் அவளை மொய்ப்பதைப் பார்த்தான் விசுவஜித், அனந்தராம் போன்ற அயோக்கியனின் பார்வை அவள் மீது படிவதில் விசுவஜித்திற்கு சற்றும் சம்மதமில்லை. சிந்தியாவின் மீதிருந்த தன்னுரிமை அவள் பேரிலேயே கோபமாக வெடித்தது.

''டோண்ட் டிஸ்டர்ப் மீ...'' என்று முகத்தைக் கடுமையாக வைத்துக் கொண்டு சொன்னான். வந்து அவளை வெளியே அனுப்பினான். சிந்தியா திடுக்கிட்டுப் போய் அவனைப் பார்த்தாள். அந்த ஆஸ்பத்திரியில் எந்த ரூமிலும் நுழைவதற்கு இவளுக்கு நர்ஸ் என்ற முறையில் உரிமை உண்டு. இவன் யார் அதை மறுப்பதற்கு என்று அர்த்தமில்லாமல் கோபம் கூட வந்தது.

அறைக் கதவருகே வந்ததும், ''விசு... என்னாயிற்று உங்களுக்கு?'' என்று எரிந்து விழுந்தாள்.

''நான் வந்திருப்பது போலீஸ்காரனாக. டூட்டியில் இருக்கும் போது உன்னுடன் கொஞ்சிக் குலாவிக் கொண்



டிருக்க நேரமில்லை. ஐ'ம் பிஸி...'' என்று அவளைத் தாண்டி, கான்ஸ்டபிள்களை நோக்கி நடந்தான்.

* * *

தேவகி இரண்டு கைகளிலும் கன்னங்களைத் தாங்கி, ஜன்னல் வழியே வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள். இன்ஸ்பெக்டர் விசுவஜித் அவளை இங்கே தனியாக விட்டுப் போனதிலிருந்து அவளுக்கு பெரும் யோசனையாய் இருந்தது.

ஒரு கொலைக்கு சாட்சியாய் இருக்க வேண்டிவரும் என்று சற்றேனும் முன்னெச்சரிக்கை இருந்திருந்தால் அன்றைக்கு வீட்டை விட்டே அவள் நகர்ந்திருக்க மாட்டாள்.

இதோ இன்னும் அரை மணி நேரத்தில் கோர்ட்டிற்குக் கிளம்ப வேண்டும் என்று விசுவஜித் சொல்லியிருந்தான்.

அவளைப் போலவே சிந்தாமணி பற்றி சாட்சி சொல்ல, லைப்ரரியைச் சேர்ந்த கேசவ் என்பவரையும் பக்கத்து அறையில் வைத்திருந்தார்கள். போலீஸ் துறையின் அந்தக் கட்டிடத்தில் அங்கங்கே காவல் போடப்பட்டிருந்தது.

விசுவஜித்திற்காக அவள் காத்திருந்தாள். நகைக் கடையில் அவள் திருடிய இரண்டு வளையல்களையும் அந்த இன்ஸ்பெக்டர் கழற்றி எடுத்துப் போய்விட்டான் - கடையில் திருப்பித் தரப்போகிறானாம் - கேஸ் எதுவும் இல்லாமல் பார்த்துக் கொள்வதாக சொல்லிவிட்டதே அவளுக்குப் பெரும் ஆறுதலாய் இருந்தது.

கதவு தட்டப்பட்டது. திறந்தது.

போலீஸ் உடையில் விசுவஜித் மிடுக்காக நின்றான்.

"போவோமா?" என்றான், "இதோ, பார். உன் சாட்சியத்தில் தான் இந்தக் கேஸே நிற்கப் போகிறது. சிவநேசன் பண முதலை. உலகத்திலேயே பெஸ்ட் வக்கீல் யார் என்று பார்த்து உனக்கெதிராக நிறுத்துவார். உன்னைக் கேள்விகளால் குடைந்து எடுப்பார்கள். குழப்பப் பார்ப்பார்கள். ஒரு வார்த்தை கூட பொய் சொல்லாதே. நடந்ததை நடந்தபடி நூறு சதவீதம் உண்மையை மட்டுமே சொல். தைரியமாக இரு. கலங்காதே. உன் பாதுகாப்பிற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. தைரியமாக இரு. உண்மையை யாராலும் அசைக்க முடியாது... புரிகிறதா?"

தேவகி எச்சிலைக் கூட்டி விழுங்கினாள். "எனக்கு பயமாக இருக்கிறது."

"உண்மையைப் பேச என்ன பயம்?"

"நகைக்கடையில் நான் திருடியதைச் சொல்ல வேண்டுமா?"

"சொல். உனக்கு தண்டனையில்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது என் பொறுப்பு."

தேவகி முழுவதும் நம்பிக்கை வராதவளாக, தயக்கத்துடனேயே அவனுடன் வெளியே நடந்தாள்.

* * *

தாண்டவன் அம்பாஸிடர் காரில் உட்கார்ந்திருந்தான். பொய் நம்பர் பிளேட் பொருத்திய அந்தக் கார் அவனுடைய உபயோகத்திற்காக சிவநேசனால் கொடுக்கப்பட்டிருந்தது. அவன் முகத்தில் ஃப்ரென்ச் தாடி ஒட்டப்பட்டிருந்தது. அவன் மடியில் ஒரு நீளமான பெட்டி, அதைத் திறந்தான். அந்தப் பெட்டியினுள்ளே வெல்வெட் துணியின் மெத்தில் படுத்திருந்த சிறு துப்பாக்கியை எடுத்தான்.



இந்தத் துப்பாக்கி சற்று வித்தியாசமானதாக இருந்தது. இதில் தோட்டாக்கள் கிடையாது. குண்டூசி அளவிற்கு ஒரு மிகக் கூர்மையான ஊசி. அதன் முனையில் மிகக் கடுமையான சயனைட் விஷயம். ஊசியைப் பொருத்தி, விசையை இழுத்தால் ஊசி இருபதடி தூரம் வரை எந்தக் குழப்பமும் இன்றி பாய்ந்து எதிரியைத் தாக்க வல்லது. உடம்பில் ஏதோ ஒரு பகுதியில் தைத்தால் போதும். இருபது நிமிடங்களுக்குள் மரணம் நிச்சயம். இந்த ஆயுதத்தின் பெரிய சௌகரியம் - அது தாக்கியதே தெரியாது. போஸ்ட் மார்ட்டத்தில் கண்டுபிடிக்க முடியுமே அன்றி, உடனே புரியாது.

இந்த விஷ ஊசியை எதிர்கொள்ளப் போகிறாள், தேவகி. தாண்டவன் மூன்று ஊசிகளை ஒன்றன் பின் ஒன்றாக துப்பாக்கியில் செருகினான்.

ஒன்று தேவகிக்கு.

ஒன்று கேசவிற்கு.

குறி தவறினால் மூன்றாவது.

மூன்றாவது ஊசி தேவைப்படாது. அவன் குறி இதுவரை தவறியதே இல்லை. இன்னும் அதிக அவகாசம் கொடுக்கப்பட்டால், இன்னும் அழகாகத் திட்டமிட்டு

கொலையை விபத்து போலவே செய்திருக்க முடியும். ஆனால் அவகாசம் போதவில்லை. இதோ தேவகி கோர்ட்டுக்கு வந்து விடுவாள். நீதிபதியின் முன் அவள் சாட்சியம் பதிவாகுமுன் தடுத்தாக வேண்டும்.

தாண்டவன் காரின் இருக்கையின் முதுகில் சார்த்தியிருந்த கறுப்பு கவுனை எடுத்தான். உட்கார்ந்தபடியே அணிந்தான். கேஸ் கட்டுகள் போல தயாராயிருந்த குறுக்கில் மடிந்த பேப்பர்க் கற்றையை எடுத்துக் கொண்டான். தொள தொளவென்றிருந்த கறுப்பு கவுனின் மடிப்பில் அவன் கை சுலபமாக மறைந்தது. துப்பாக்கியும்.

காரிலிருந்து கேஷுவலாக இறங்கினான்.

போலீஸ் ஜீப் புறப்பட்டதும் அவனுக்கு தகவல் வந்து விட்டது. இன்னும் ஒன்றிரண்டு நிமிடத்தில் வந்து விடும்.

அவன் ஜீப் நிறுத்தத்திற்கு வரக் கூடிய இடம் நோக்கி இயல்பாக நடந்தான். அவனுடைய கணக்கு மிகச் சரியாக இருந்தது.

முதலில் ஒரு ஜீப் வந்து நின்றது. நான்கைந்து கான்ஸ்டபிள்கள் ஆயுதங்களுடன் கீழே குதித்தார்கள். பின்னாலேயே மூடப்பட்ட இன்னொரு ஜீப் வந்து நின்றது. ஆயுதக் காவலர்கள் அந்த ஜீப்பின் இருபுறமும் சூழ்ந்து நிற்க, ஜீப் கதவு திறந்து முதலில் விசுவஜித் இறங்கினான். அடுத்து தேவகி. அடுத்து கேசவ். அடுத்து இரண்டு கான்ஸ்டபிள்கள்.

அவர்கள் ஒரு சிறு ஊர்வலமாக கோர்ட்டின் காரிடார் நோக்கி நடக்க, தாண்டவன் கை உயர்த்தி விசை இழுத்து மீண்டும் நடை தொடர்ந்தான்.



கேசவ் தன் பின் கழுத்தைத் தடவிக் கொண்டான். சுருக்கென்று ஏதோ குத்தியதே என்ன அது என்று திரும்பிப் பார்த்து ஏமாந்தது இங்கிருந்தே தெரிந்தது.

தாண்டவன் முகத்தில் தானாக மலர்ந்த புன்னகையை அவன் கட்டுப்படுத்திக் கொண்டான். கர்வம் முகத்தில் தெரிந்து விடக்கூடாது.

அடுத்த முறை அவன் கை உயர்த்தி விசை இழுத்தான்.

தேவகியை கீழேயிருந்த ஒரு கல் தடுக்கியது. அவளுடைய வழக்கமான ஹவாய் செருப்பு புரண்டு தடுமாற்றி விட்டது.

தேவகி தடுமாறியதும், தாண்டவனுக்குப் புரிந்து விட்டது. அவனுடைய குறியிலிருந்து அவள் நகர்ந்து விட்டாள். ச்சே, ஒரு ஊசி வீணாகி விட்டது என்று நினைத்த போது, தேவகியின் மறுபுறம் பாதுகாப்பாக வந்து கொண்டிருந்த கான்ஸ்டபிள் கழுத்தைத் தடவிக் கொண்டு பின்புறம் பார்த்தார்.

தாண்டவன் திடுக்கிட்டான். ஊசி போலீஸ்காரரைத் தாக்கி விட்டதா என்ன? போலீஸைக் கூடியவரையில் தவிர்க்க வேண்டும் என்பது அவன் எண்ணம்.

அடுத்த குறி தவறக் கூடாது.

அவர்களை முன்னே நடக்க விட்டு, தாண்டவன் இயல்பாக கை தூக்கினான்.

தேவகி படிகளில் ஏறிக் கொண்டிருந்தாள்.

தாண்டவன் விசை இழுத்தான்.

தேவகி திடுக்கிட்டாள். பின் கழுத்தைத் தொட்டுப் பார்த்தாள். திரும்பிப் பார்த்தாள். நடை தொடர்ந்தாள்.

காரியம் முடிந்து விட்டது.

தாண்டவனின் முகத்தில் பிரகாசம் வந்தது. கேஸ் கட்டுடன் அப்படியே நகர்ந்து அடுத்த கட்டிடம் வழியே காருக்கு நடந்தான். கார்க்கதவு திறந்து உள்ளே அமர்ந் தான். துப்பாக்கியை தன் பெட்டியில் வைத்து சீட்டுக் கடியில் தள்ளினான். காரைப் பூட்டிக் கொண்டு இறங் கினான்.

மீண்டும் கோர்ட்டிற்குள் நடந்தான்.

வேடிக்கை பார்க்கப் போகிற ஆர்வம் அவன் முகத்தில் தொனித்தது.

* * *

கோர்ட் அறை.

பழமையான பெருமேஜைக்குப் பின்னே நீதிபதிக்கான உயர்ந்த நாற்காலி இருந்தது. பேனாவின் பின் பக்கத்தால் காது குடைந்து கொண்டிருந்த குமாஸ்தா தங்களுக்குள் குசலம் விசாரிக்கும் கறுப்புடை வக்கீல்கள். காத்திருக்கும் போலீஸ்காரர்கள்.

முன்வரிசை பெஞ்ச்சில் தேவகி, கேசவ், இரண்டு கான்ஸ்டபிள்களுடன், விசுவஜித் அமர்ந்திருந்தான். அவனுடைய பார்வை இடதும், வலதுமாக சந்தேகத்துடன் நகர்ந்து கொண்டேயிருந்தது.

திடீரென்று அவன் தொடையில் ஒரு கை விழுந்து அழுத்தியது. யார் அது மரியாதையில்லாமல் என்பது



போல அவன் சரேலென்று திரும்பிப்பார்த்தான். அவனை அடுத்து உட்கார்ந்திருந்த கேசவ்!

கேசவ் ஒரு ஆதரவிற்காகத்தான் விசுவஜித்தின் தொடையை அழுத்தியிருக்கிறான் என்பது புரிந்தது. கேசவின் முகத்தில் அதீத வேதனை. வலியின் புரட்டல். முகம் கசங்கி, குமுக்கென்று வாந்தியெடுத்தான். அப் படியே கீழே புரண்டு விழுந்தான்.

அடுத்த கணம் அந்த வரிசையிலிருந்தவர்கள் பரபரப்புடன் எழுந்தனர். வக்கீல்கள் ஓடிவந்தனர்.

தாண்டவன் தான் முதலில் வந்தவன். சற்றும் அருயை பார்க்காதவன் போல கேசவின் தலையைத் தூக்கி தன் மடியில் வைத்து, கன்னத்தில் தட்டினான். அதே நேரம் அவனது இடது கை கேசவின் பின் கழுத்தைத் தாங்கிய படி தடவி, ஊசி முனையைக் கண்டுபிடித்து வெளியே இழுத்தது. கேசவை அவர்கள் கவனித்த போதே மதக் என்று புரண்டு விழுந்தார், கான்ஸ்டபிள்.

தாண்டவன் உடனே கேசவைக் கீழே விட்டு அவரைத் தாங்கினான். அவனுடைய நுணுக்கமான விரல்கள் அவருடைய கழுத்தைத் தடவி ஊசியைப் பிடித்து இழுத்தது.

''யாராவது தண்ணீர் கொண்டு வாருங்கள்...'' என்று அவன் கத்தினான்.

இரண்டொரு பேர் பானை நோக்கி ஓட, தாண்டவன் நிமிர்ந்து தேவகியைப் பார்த்தான். அடுத்தது நீ தான் பெண்ணே.

தேவகி மிகவும் திடுக்கிட்டிருந்தாள். அடுத்தடுத்து இரண்டு பேர் கீழே புரண்டு விழுந்ததில் ஏற்பட்ட

அதிர்ச்சி அவள் வயிற்றைப் புரட்டியது. வீல் என்று அலறினாள். கீழே சரிந்தாள்.

விசுவஜித் பாய்ந்து அவளைத் தாங்கினான்.

தாண்டவன் இன்ஸ்பெக்டரைத் தாண்டி அந்தப் பெண்ணைத் தொடுவது நியாயமில்லை என்று உணர்ந்தான்.

அவன் குறி தப்பவில்லை. இனியும் இங்கே நேரத்தை வீணடிக்கக் கூடாது. கான்ஸ்டபிளைக் கீழே தழைத்தான். "நான் உடனே போய் ஆம்புலன்ஸிற்கு போன் பண்ணி விட்டு வருகிறேன்..." என்று இயல்பாக எழுந்து கேஸ் கட்டுடன் வெகு விரைவாக வெளியே நடந்தான்.

* * *

''ஐ'ம் ஸாரி என்றார், அரசாங்க டாக்டர், ''இவர்கள் இரண்டு பேரும் இறந்து விட்டார்கள்...''

''இறந்து விட்டார்களா? என்ன டாக்டர் சொல்கிறீர்கள்? எப்படி? எப்படி இரண்டு பேரும் ஒரே சமயத்தில் இறக்க முடியும்?''

விசுவஜித் பதறினான்.

''போஸ்ட்மார்ட்டம் செய்தபிறகு தான் அதற்கு என்னால் பதில் சொல்ல முடியும். கடுமையான விஷம் காரணமாயிருக்கும் என்று அவர்களுடைய கண் இரப்பைகள் நீலம் பூத்திருப்பதைப் பார்த்தால் தோன்றுகிறது...''

''இந்தப் பெண்?''



டாக்டர் தேவகியைத் தொட்டு பார்த்து விட்டு நிமிர்ந்தார். ''இவளுக்கு வெறும் மயக்கம் போல்தான் இருக்கிறது. அதிர்ச்சி தாங்கவில்லை..''

விசுவஜித்திடமிருந்து ஒரு நீண்ட பெருமூச்சு விடுபட்டது.

டாக்டர் ஒரு இன்ஜெக்ஷன் போட்டார். சற்று நேரத்திற்கெல்லாம் தேவகி பட்டாம்பூச்சிகளைப் போல இமைகளைப் படபடத்துக் கண்களைத் திறந்தாள்.

உயரமான கோர்ட் கூரை தெரிந்தது.

ஆனால் இது வேறு ரூம். அவள் கண்கள் மிரட்சியுடன் விசுவஜித்தை நோக்கின.

''என்ன ஆயிற்று கேசவிற்கு?''

''இறந்து விட்டான்...'' விசுவஜித்தின் குரலில் தோல்வி.

''எப்படி?'' - பதறினாள்.

''விஷமாயிருக்கலாம் என்கிறார், டாக்டர்... பயப்படாதே, உனக்கு ஒன்றும் ஆகவில்லை. நீ எழுந்திரு. நீதிபதியிடம் உடனே சாட்சி சொல்லி விட்டு வரலாம்...''

''ஐயோ... நான் மாட்டேன்...''

''தேவகி...''

''வரமாட்டேன், வரமாட்டேன், வரமாட்டேன்... நான் யாரையும் பார்க்கவில்லை - யாரும் கொலை செய்யப்

படவில்லை. யாரும் யாரையும் கொல்லவில்லை...'' அவள் க்ரீச்சிட்டாள்.

விசுவஜித் அவளை கவலையுடன் பார்த்தான். மிரண்டிருக்கிறாள். இந்த நிலைமையில் நிச்சயம் இவள் நீதிபதியிடம் சாட்சி சொல்ல மாட்டாள். முன்னுக்குப் பின்னாக உளறி குழப்பி விடுவாள். இவளை சமாதானம் செய்ய வேண்டும். அப்புறம்தான் இவளை அவன் விருப்பப்படி வளைக்க முடியும்.

மறுநாளுக்கு விசாரணையை ஒத்தி வைக்கச் சொல்லி அரசாங்க வக்கீலை விட்டு அனுமதி கேட்கச் சொல்லி விட்டு, பழைய ரூமிற்குத் திரும்பினான்.

''நாம் புறப்படலாம்... டாக்டர், எனக்கு பி.எம்.ரிப்போர்ட் அர்ஜன்ட்டாக வேண்டும்...'' என்றான்.

அவனுடைய அடிநாக்கில் கசப்புணர்வு. தோல்வியின் கசப்புணர்வு என்பதை விட எதிர்ப்பின் கசப்புணர்வு என்று தான் அவனுக்கு எண்ணத் தோன்றியது.

தேவகியை அதிக கவலையுடனும், பொறுப்புடனும் பார்த்தான். பயத்தில் அழுது கொண்டிருந்த அவளை ஆதரவாக அணைத்தபடி, ஆயுதமேந்திய போலீஸ்காரர்கள் புடை சூழ ஜீப்பை நோக்கி கடந்தான்.போகும் வழியில் போலீஸ் செய்ய வேண்டிய காரியங்களைச் சட் சட் என்று உத்தரவுகளாக சொல்லிக் கொண்டே போனான்.

தேவகியை ஏற்றியதும், ஜீப் சீறிப் புறப்பட்டது.



## 11

''நேரம் போதவில்லை, ஐயா... அதனால்தான் விஷ ஊசியைப் பயன்படுத்த வேண்டியிருந்தது. இல்லை என்றால் சுலபமாக வேறு வழி தேடியிருப்பேன்...''

தாண்டவன் மரியாதையுடன் பேசினான்.

''பரவாயில்லை. அந்தப் பெண்?'' என்றார், சிவநேசன்.

''கேசவ் என்பவன், தேவகி என்ற அந்தப்பெண், துணைக்கு வந்த ஒரு கான்ஸ்டபிள் மூன்று பேரும் அவுட்...''

''சாட்சி சொல்வதற்கு முன்னாலேயே தீர்த்து விட்டாய்! தாண்டவன் கை விட மாட்டான் என்பது என் நம்பிக்கை... இந்தா, வேண்டியதை எடுத்துக் கொள்...'' சிவநேசன் மேஜை டிராயரைத் திறந்து காட்டினார்.

தாண்டவன் அதிலிருந்து சில நோட்டுக் கட்டுகளை எடுத்துக் கொண்டிருந்த போது, தொலைபேசி மணி அடித்தது.

சிவநேசன் எடுத்துப் பேசினார். அவர் முகத்தில் மெல்லிய மாற்றம். ரிசீவரை வைத்தார்.

''தாண்டவா, ஏமாந்து விட்டாய்...''

''என்ன ஐயா சொல்கிறீர்கள்?''

''ஏமாந்து விட்டாய் என்றேன். முக்கிய சாட்சி அந்தப் பெண். அது உயிரோடு இருக்கிறதாம்...''

''ஐயா! அவள் சுருண்டு விழுவதை என் கண்களால் பார்த்தேன்.''

''அவள் முழுசாய் உயிருடன் இருக்கிறாள்....''

தாண்டவன் எடுத்த பணத்தை டிராயரில் மீண்டும் போட்டான். அவன் முகம் இறுகியது. ''மன்னித்து விடுங்கள், ஐயா. அப்படி நேர்ந்திருக்கக் கூடாது. நேர்ந்திருந்தால் முழுப் பொறுப்பும் என்னுடையது. அவளை மறுபடி என் கையால் தீர்க்கும் வரை நான் உங்கள் முகத்தில் விழிக்க மாட்டேன்.''

''போலீஸ் கெடுபிடி அதிகமாகி விடும்... கவனமாக நடந்து கொள், தாண்டவா...''

சிவநேசன் குரலில் முதல் தடவையாக சற்று கவலை எட்டிப் பார்த்தது.

* * *

கமிஷனர் தன் மீசையை புறவிரலால் நீவிக் கொண்டார்.

''உண்மையாகவா?'' என்றார். ''பி.எம். ரிப்போர்ட் வந்து விட்டதா?''

''வந்து விடும், சார்...'' விசுவஜித் தழைத்த குரலில் சொன்னான். ''ஆனால் அந்தப் பெண் ரொம்ப மிரண்டு விட்டது சார். கோர்ட் படியேறி சாட்சி சொல்ல மாட்டேன் என்கிறது...''

''ச்சே... என்னப்பா இது?''

''என்னால் அந்தப் பெண்ணை கன்வின்ஸ் பண்ண முடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது சார்... ஆனால்...''



''ஆனால்?''

''நம் ஜீப் போய் எப்போது கோர்ட்டில் நிற்கும் என்பது வரை சிவநேசனின் ஆட்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும், சார்.. ஏனென்றால் செத்துப் போன கான்ஸ்டபிள் பத்து நிமிடத்திற்கு முன்னால்தான் எங்கள் ஜீப்பில் ஏறினார். அவரும், கேசவும் ஒரே மாதிரி இறந்திருப்பதால், கோர்ட்டுக்கு வந்த பிறகு தான் சிவநேசனின் ஆட்கள் செயல்பட்டிருக்க வேண்டும் என்று தோன்றுகிறது - எப்படி செயல்பட்டார்கள் என்று புரியாவிட்டால் கூட...''

''யூ ஆர் கரெக்ட் நம் அசைவுகளைப் பற்றி சிவநேசன் குரூப்பிற்கு தகவல் தர நம் டிபார்ட்மென்ட்டிலேயே சில சில்லரை ஆட்கள் இருக்கிறார்கள் என்பது எனக்கு அசிங்கமாகத்தான் இருக்கிறது.''

''முக்கியமாய் சப் - இன்ஸ்பெக்டர் சாம்பமூர்த்தி. அவரைத்தான் அனந்தராம் அலிபைக்கும் பயன்படுத்தியிருக்கிறார்கள்...''

''அவரை சஸ்பெண்ட் செய்து விடுகிறேன். ஓகே?''

''தேவகியை எங்கே பாதுகாப்பாக வைப்பது, சார்?''

''இதோ பார், சிவநேசனும், அவன் தம்பியும் கம்பிகளுக்குப் பின்னால் போயாக வேண்டும். அதற்காக நான் என்ன வேண்டுமானாலும் செய்யத் தயாராயிருக்கிறேன். தேவகி நமக்கு மிக மிக முக்கியம். அவளை முழுக்க முழுக்க உன் பொறுப்பில் விடுகிறேன். உதவிக்கு யார் யார் வேண்டும் என்று நீயே போலீஸிலிருந்து ஆட்களைப் பொறுக்கிக் கொள். எந்த இடம் பாதுகாப்பானது

என்று நீயே தீர்மானம் பண்ணு... அவளை கன்வின்ஸ் பண்ணு... அது முக்கியம்...''

அறைக்கதவு தட்டப்பட்டது. ''யெஸ்?'' என்றார், கமிஷனர் கர்ஜனையாக.

உள்ளே கான்ஸ்டபிள் நுழைந்து, ''டாக்டர் வந்திருக்கிறார், சார்...'' என்றார்.

''உள்ளே அனுப்பு...''

டாக்டர் இருவருக்கும் வணக்கம் சொன்னார். ''சற்று விசித்திரமான விஷயம். அதனால்தான் நான் நேரிலேயே போஸ்ட் மார்ட்டம் ரிப்போர்ட் கொடுக்க வந்தேன். இறந்து போன கேசவ், கான்ஸ்டபிள் இருவர் ரத்தத்திலும் ரொம்ப ஸ்ட்ராங்கான விஷம் கலந்திருக்கிறது. நேரே ரத்தக் குழாயில் விஷம் கலந்திருப்பதால், ஊசி மூலம்தான் செலுத்தப்பட்டிருக்க வேண்டும் என்று தோன்றியது. உடல் முழுவதும் ஊசி குத்திய அடையாளம் தேடினேன். இருவருக்கும் பின் கழுத்தில் தலைமுடியின் கடைசி விளிம்பருகே ஊசி செருகிய அடையாளம் இருக்கிறது. அந்த இடத்தில் மட்டும் சற்று கூடுதலாக நீல நிறமாகியிருக்கிறது என்பதால் தான் கண்டு பிடிக்க முடிந்தது. ஊசி நேராக செங்குத்தாக செருகியிருப்பதைப் பார்த்தால், தோட்டா போல அது ஒரு விசையுடன் வீசப்பட்டிருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. விஷ ஊசி!''

''மை காட். டெக்னிக்கலாக கொலைகாரர்களும் அட்வான்ஸாகி விட்டார்கள்...''

''தலைமுடியிருக்கும் இடத்தில் செலுத்தினால், ஊசி செருகிய இடம் சுலபத்தில் தெரியாது என்பதால் அந்த இடத்தை கொலைகாரன் தேர்ந்தெடுத்திருக்கிறான்...''



''விசுவஜித், அந்தப் பெண்... தேவகி... அவளை எப்படி கொலைகாரன் விட்டான்?''

''விட்டிருக்க மாட்டான் சார் - குறி தவறியிருக்கும்...''

''நீ உடனடியாகப் போ, விசுவஜித், அவள் இருக்கும் இடத்தில் ஜன்னல்கள் கூட திறந்திருக்க வேண்டாம். உடனடியாக உன் பர்ஸனல் பொறுப்பில் அவளை அழைத்துப் போய்விடு...''

''யெஸ் சார்...''

''டாக்டர், நீங்கள் உட்காருங்கள்... எனக்கு இன்னும் விளக்கமாக உங்கள் பி.எம். ரிப்போர்ட்டைச் சொல்லுங்கள்...''

அவர்களைப் பேசவிட்டு, விசுவஜித் அவசரமாக அங்கிருந்து வெளியேறினான்.

* * *

தேவகி மெல்ல தன் அழுகையிலிருந்து மீண்டாள்.

பயம் காரணமாக எழுந்த விசும்பல் அடங்க சற்று நேரம் பிடித்தது. அடங்கியதும், தன் புடவை கசங்கி விட்டதை கவனித்தாள். முகம் கழுவி, உடை மாற்றிக் கொள்ள விரும்பினாள்.

புடவையை மாற்றும்போது, ரவிக்கைக்குள் முதுகுப் புறம் ஒரு உறுத்தலை உணர்ந்தாள்.

ரவிக்கையைக் கழற்றிப் பார்த்தாள்.

ரவிக்கையின் துணியில் ஒரு இழையில் சிக்கியிருந்தது அந்த மெல்லிய ஊசி. குண்டூசி போன்ற அதன்

அமைப்பைப் பார்த்தாள். குண்டூசியை விட நீளமாக மெலிந்திருந்தது ஊசி. முனை மிகவும் கூர்ப்பாக இருந்தது. குத்தினால் அதன் தலைவரை உடனே வழுக்கி இறங்கி விடும்போல அதன் உடலமைப்பு கூராய் இருந்தது. ஊசியின் நுனியில் சின்ரிப் பெயிண்ட் தீற்றல் போல ஏதோ!

கதவு தட்டப்பட்டது.

தேவகி அவசரமாக உடையணிந்து கதவு திறந்தாள்.

இன்ஸ்பெக்டர் விசுவஜித்.

அவனைப் பார்த்தால் அவளுக்கு மிகவும் பிடித் திருந்தது. ஆனால், அவன் ஆபத்தானவன். பாதுகாப்பு தருகிறேன், காப்பாற்றுகிறேன் என்று உத்தரவாதம் தருவானே தவிர, அவனை விட கொலைகாரன் இன்னும் வலுவானவன், செல்வாக்கு மிக்கவன். இல்லையென் றால், கோர்ட்டில் இரண்டு பேர் திடீரென்று ஏன் செத்து விழுந்தார்கள்?

"தேவகி... அவர்கள் எப்படி இறந்தார்கள் என்று பி.எம். ரிப்போர்ட் வந்து விட்டது."

''எப்படி?'' - என்றாள், தேவகி குரலில் பயம் தொனிக்க.

"விஷ ஊசியை யாரோ அவர்களுடைய கழுத்தில் குறி பார்த்து எறிந்திருக்கிறார்கள் - நீ தப்பித்தது பெரும் அதிர்ஷ்டம்."

"விஷ ஊசி என்றா சொன்னீர்கள்?" - தேவகி அவசர மாக தன் ரவிக்கையில் கிடந்த ஊசியை எடுத்து அவ னிடம் நீட்டினாள்.



அதை வாங்கிக் கையில் புரட்டிப் பார்த்தான், விசுவஜித். அவன் முகத்தில் சிலீர் என்ற பயரேகை.

"எங்கே கிடைத்தது இது?"

''கோர்ட்டில் படியேறும்போது என் முதுகில் யாரோ குண்டூசி எரிந்தாற் போலிருந்தது. திரும்பிப் பார்த்தேன். யாரும் இல்லை. இப்போதுதான் பார்த்தேன்.''

''இதன் முனையை வருடிக் கூட காயப்படுத்திக் கொள்ளக் கூடாது. அவ்வளவு கடுமையான விஷம் இருக்கிறதாம்! மற்றவர் கழுத்தில் நுழைந்த ஊசி உன் கழுத்தில் நுழையவில்லை. ஏன்? திரும்பு. ஏதாவது காயப்படுத்தியிருக்கிறதா பார்க்கிறேன்...''

தேவகியின் உடல் அந்த ஊசியைப் பார்த்ததும் நடுங்கியது. விசுவஜித்தின் கட்டளைக்குக் கட்டுப்பட்டு திரும்பினாள்.

அவளுடைய அடர்த்தியான கூந்தலை அள்ளி முன் புறம் போட்டு விட்டு அவள் பின் கழுத்தையும், முது கையும் கண்களால் மேய்ந்தான், விசுவஜித்.

ரவிக்கை சற்று தாராளமாக வெட்டப்பட்டிருந்தது. பின் கழுத்தில் மிக மெலிதான பூனை முடிகள். வழுக்கி இறங் கும் மாசு மருவற்ற முதுகுப் பரப்பு. கழுத்தில் புரளும் கூந்தல் பிசிறுகளை ஒதுக்கியபோது அவனுடைய விரல் கள் அவள் கழுத்தை நீண்டின. தேவகியின் உடலில் ஒரு சிலிர்ப்பு ஓடியதை விசுவஜித் கவனித்தான். அந்தக் கழுத்தை அப்படியே வருட வேண்டும் போல் எழுந்த உள்ளுணர்வை அதட்டி அடக்கினான். கடமையில் இருக்கும்போது எப்படி உடம்பு கண்டதையும் உணரச் செய்கிறது?

அவன் பயந்தபடி கழுத்தில் எந்தக் காயமும் இல்லை. முதுகிலும் இல்லை. பின் எப்படி?

இன்னும் சற்று கூந்தலைத் தூக்கி பின்னந் தலையில் பார்க்க முனைந்த போதுதான் கவனித்தான். கூந்தலை இறுக்கிப் பிடித்து அவள் ஒரு பிளாஸ்டிக் க்ளிப் போட்டிருந்தாள்.

"தேவகி, இந்த க்ளிப்பைக் கழற்றிக் கொடு..."

கழற்றிக் கொடுத்தாள். பட்டாம் பூச்சி வடிவத்தில் இருந்தது கறுப்பு க்ளிப்.

அதைக் கையில் வைத்து ஆராய்ந்தான். அவன் கண்கள் பிரகாசமாயின.

"இங்கே பார்." அந்த ஹேர் க்ளிப்பில் குண்டூசியை வைத்து ஆணி அடித்தது போல் ஒரு ஆழமான பள்ளம்.

"இந்த க்ளிப்பை என்ன விலைக்கு வாங்கினாய்?"

"மூன்று ரூபாய்க்கு..."

"அந்த மூன்று ரூபாய்தான் உன் உயிரையே காப்பாற்றியிருக்கிறது. ஊசியை எறிந்தபோது அதை இந்த க்ளிப் தடுத்திருக்கிறது. இருந்தாலும் இவ்வளவு ஆழம் விழும் வகையில் அது இறங்கியிருக்கிறது என்றால் மிகுந்த விசையுடன் எறியப்பட்டு இருக்க வேண்டும். அது தடுக்கப்பட்டு பொத்தென்று உன் கழுத்தில் விழுந்திருக்கிறது. அதற்குத்தான் நீ திரும்பிப் பார்த்திருக்கிறாய். அந்த வேகத்தில் ரவிக்கைப் பிளவு இன்னும் கொஞ்சம் திறந்து, அது முதுகிலிருந்து உருண்டு ரவிக்கைக்குள் போய் நின்று விட்டிருக்கிறது - யூ ஆர் ஸோ லக்கி."



"இன்னொரு தடவை லக் இருக்காது இன்ஸ்பெக்டர்..."

"உண்மையை மட்டும் சொல்வதாக நீ தீர்மானித்தாய். அதனால்தான் தப்பித்தாய். இந்த இடத்திலிருந்து கூட உன்னை நகர்த்தச் சொல்லிவிட்டார், கமிஷனர்... நாம் வேற இடம் போகப் போகிறோம். ஏற்பாடுகள் எல்லாம் செய்துவிட்டுத்தான் வந்தேன்..."

"எங்கே?"

"வா... காட்டுகிறேன்... உன் பெட்டியெல்லாம் வேண்டாம்... இரண்டு மூன்று மாற்றுப் புடவை மட்டும் போதும்..."

"சிவநேசனிடம் என்னைக் காட்டிக் கொடுத்து விட மாட்டீர்களே?"

"அவனுக்கு எதிராய் இருக்கும் ஒரே துருப்புச் சீட்டு நீதான். உன்னை விட்டுக் கொடுப்போமா? நெவர்..."

தேவகி புது நம்பிக்கையுடன், உடைகளில் ஒன்றிரண்டைப் பொறுக்கிக் கொண்டாள். விசுவஜித்துடன் புறப்பட்டாள்.

## 12

அனந்தராம் சற்றே புரண்டு படுத்தான்.

இடது கன்னம் எக்கச்சக்கமாக வலித்தது. அண்ணன் சொன்னபடி போய் விபத்து செய்து கொண்டதற்கு உயிர்ப்

பிச்சை கிடைத்து விட்டதேயன்றி, வலி அவனுடலில் அலையலையாய் கலைத்துக் கொண்டிருந்தது.

இரண்டு மணி நேரம் போலீஸ் வந்திருந்து காவல் காத்ததும், பெயில் பெற்ற பின், வக்கீல் அதைக் காட்டி அவர்களை விலகச் சொன்னதும் அதையும் மீறி உடுப்புகளற்ற மப்டி போலீஸ் இரண்டு பேர் அவன் இருந்த மாடியில் காவல் இருப்பது அவனுக்குத் தெரிய வந்தது.

வக்கீல் சொன்ன இன்னொரு சேதி அவனுக்கு அதிர்ச்சியாய் இருந்தது. அவன் இருந்ததாக அலிபை தந்த சப் இன்ஸ்பெக்டர் சாம்பமூர்த்தியை போலீஸிலிருந்து சஸ்பெண்ட் செய்து விட்டார்களாம். ஏதோ மொட்டைக் காரணம் சொல்லி, போலீஸின் மேல் மட்டத்தில் இருப் பவர்கள் இந்தக் கேஸை சற்று சீரியஸாக எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று புரிந்தபோது கொஞ்சம் கவலை வந்தது.

தாண்டவன் ஒரு தவறு செய்து விட்டான். நேரடி சாட்சி சொல்லப் போகிறவள் அவன் குறியிலிருந்து தப்பித்து விட்டாள் என்றும் வக்கீல் சொன்னார்.

அனந்தராம் முதன் முறையாக தான் நேரடியாகப் போய் சிந்தாமணியைக் கொலை செய்தது முட்டாள்தனமோ என்று யோசிக்கலானான். அவனுடைய நண்பர்கள் எல்லோரும் எச்சரித்தபோது அசட்டையாக இருந்ததற் காக இப்போது கவலைப்பட்டான்.

அந்த இன்ஸ்பெக்டர் வந்தபோது வந்து ஹலோ சொன்ன நர்ஸின் பெயர் என்ன என்று கேட்க வேண்டும்.



அவளைப் பற்றி விவரங்கள் சேகரிக்க வேண்டும் என்று முடிவு செய்தான்.

* * *

அதே சமயம் அதே ஆஸ்பத்திரியில் அடுத்த மாடி சிந்தியா டூட்டி முடிந்து தன் உடைகளை மாற்றி ஸ்டாஃப் ரூமிலிருந்து வெளிப்பட்டாள்.

''சிந்தியா...''

குரல் கேட்டு நிமிர்ந்தாள்.

விசுவஜித்! போலீஸ் உடுப்பில் கம்பீரமாய் நின் றிருந்தான்.

''என்ன?'' என்றாள், விறைப்பாக.

''கோபமா?''

''உங்கள் மேல் கோபப்பட எனக்கு என்ன உரிமை இருக்கிறது?''

''சிந்தியா, சின்னக் குழந்தை போலப் பேசுகிறாய்... அப்போது எனக்கு இருந்த மூடு என்ன என்று உனக்குத் தெரியாது.''

''டூட்டியில் இருக்கும்போது டிஸ்டர்ப் பண்ணுகிற அளவு நான் என்ன நெருக்கமானவளா?''

''சண்டை போடத்தான் ஆசை என்றால் சண்டை போடு. இன்னும் சில நாட்களுக்கு நாம் சந்திக்க முடியாது என்பதைச் சொல்லிவிட்டுப் போகத்தான் நான் வந் தேன்...'' விசுவஜித் குரலில் கொஞ்சம் எரிச்சல் வந்தது.

அடங்கிப் போக அடங்கிப் போக இந்தப் பெண்கள் மேலே மேலே குதிரை ஏறுவார்கள்!

சிந்தியாவின் முகம் சட்டென்று மாறியது. "ஏன்? ஏன் இன்னும் சில நாட்கள் என்னை சந்திக்க மாட்டீர்கள்?"

"ஒரு கொலை கேஸ். அனந்தராம்தான் குற்றவாளி. அவனுக்கு எதிராக இருக்கும் சாட்சியம் ஒரு பெண். அவளை அழிக்க வேண்டும் என்று அவர்கள் முயற்சி செய்ய ஆரம்பித்து விட்டார்கள். அவளைப் பாதுகாக்க வேண்டிய வேலையை நான் ஏற்றிருக்கிறேன். யாருக்கும் தெரியாத இடத்தில் போய் சில நாட்கள் தங்கியிருப் பேன்... அதனால் தான்..."

"யாருக்குமே தெரியாத இடமா?"

"கமிஷனருக்கு மட்டும் சொன்னால் போதுமானது."

"எனக்குக் கூட சொல்லக் கூடாதா?"

"உனக்குத் தெரியாமல் இருப்பது உன் நல்லதிற்குத் தான் சிந்தியா."

"பேசக் கூட மாட்டீர்களா என்னுடன்?"

"பார்ப்போம். போன் வசதி இருந்து, ரிஸ்க் இல்லை என்று தோன்றினால் உன்னுடன் போன் பேசுவேன். உனக்கே இன்னொரு விஷயம் சொல்ல வேண்டும் என்று நினைத்தேன்."

"என்ன?"

"அனந்தராம் இருக்கும் அறைக்கு நீ அடிக்கடி போகாதே. டூட்டி வந்தால் கூட அவனிடம் கவனமாக இரு. உனக்கு நண்பர்கள், தோழிகள் இருந்தால் அவர்கள்



மூலம் அவன் அறைக்கு யார் யார் வருகிறார்கள் என் னென்ன நடக்கிறது என்பதை மட்டும் குறிப்பெடுத்துக் கொள்ளச் சொல்."

"உங்கள் தொழில் புத்தியைக் காட்டுகிறீர்களா?"

"எப்படி சிந்தியா உன்னால் சிரிக்காமலே பேச முடி கிறது?" என்று கேட்கும்போது, விசுவஜித்திற்கு சிரிப்பு வந்து விட்டது.

சிந்தியாவும் மனம் விட்டு புன்னகைத்து, "கடைசியாய் ஒரு காபி சாப்பிடுவீர்களா என்னுடன்" என்றாள்.

* * *

சப் இன்ஸ்பெக்டர் சாம்பமூர்த்தி அந்த ரெஸ்ட்டா ரண்ட்டின் இருட்டு மூலையில் காத்திருந்தான். அவ னுடைய க்ளோஸ் கட் கிராப்பைப் பார்த்தால் அவன் போலீஸ்காரன் என்று புரிந்து போகும் என்பதாலேயே, தலையை மூடுகிற மாதிரி ஒரு தொப்பி அணிந்திருந் தான்.

அவன் லஞ்சம் வாங்கியதாக யாரோ புகார் சொன்னதாக ஒரு குற்றம் செட்டப் செய்து அவனுக்கு சஸ்பென்ஷன் ஆர்டர் கொடுத்து விட்டிருந்தார்கள். உண்மையில் சிவநேசன் விவகாரத்தில் அவன் ஈடுபட்டிருக்கிறான் என்பதை அவர்கள் எப்படியோ மோப்பம் பிடித்து விட்டார்கள் என்பது அவனுக்குப் புரிந்திருந்தது. அதைப் பற்றி அவன் கவலைப்படவில்லை.

போலீஸில் கொடுக்கும் சம்பளத்திற்கு இந்த அளவு தான் நாணயமாக இருக்க முடியும். மாதா மாதம்

சிவநேசனிடமிருந்து வீடு தேடி வரும் பணம் அவன் சம்பளத்தைப் போல இரண்டு மடங்கு. அந்த மகானு பாவனுக்காக வேலையே போனால் கூட வருத்தமில்லை. ஆனால், வேலை போய் விட்டால் சிவநேசனுக்கு அவனால் உபயோகமில்லை என்பதுதான் கவலையாய் இருந்தது.

இங்கே வந்து காத்திருக்கத் துவங்கி இருபது நிமிஷங் களாகி விட்டது. ஒரு பீரை வாங்கி மெல்ல மெல்ல உறிஞ்சிக் கொண்டிருந்தான். அதோ!

தாண்டவன் ரெஸ்ட்டாரண்ட்டில் நுழைந்தான். நேரே இவனுடைய மேஜை பார்த்து நடந்து வந்தான். எதிரில் அமர்ந்தான்.

''ஹலோ...''

''ஹலோ...''

''எனக்கும் ஒரு பீர்...'' ஆர்டர் செய்தபின் தாண்டவன் நேரடியாய் விஷயத்திற்கு வந்தான், ''தேவகி எங்கே?''

''தெரியாது'' என்றான் சாம்பமூர்த்தி. ''போலீஸ் வழக்க மாக பாதுகாக்கும் இடங்களில் அவள் இல்லை. சொல்லப் போனால் போலீஸின் கண்களிலிருந்து அவளை மறைத்து ஒளித்து வைத்திருக்கிறான் அந்த இன்ஸ் பெக்டர்...''

''அவள் இருக்கும் இடம் எனக்குத் தெரிந்தாக வேண்டும்.''

''அந்த இன்ஸ்பெக்டருக்கு நெருக்கமான ஒரு சப்இன்ஸ்பெக்டரை அழைத்துப் போயிருக்கிறான் என்பது வரை தான் எனக்குத் தெரியும்...''



''யார் அந்த சப்-இன்ஸ்பெக்டர்?''

''குருநாதன். அவனுக்கு ஒரு இளம் மனைவி. இரண்டு வயதில் ஒரு மழலைப் பையன்.''

''குருநாதனின் அட்ரஸ் கொடு'' என்றான், தாண் டவன்.

* * *

அந்த டிபார்ட்மென்டல் ஸ்டோரின் அலமாரிகளி லிருந்து பொருள்களைப் பொருக்கிக் கொண்டிருந்தாள், குருநாதனின் மனைவி. இடுப்பில் செல்ல மகன்.

அதே வரிசையில் உயரமாய் ஒருத்தனின் நிழல் விழுந்தது. அவள் திரும்பிப் பார்த்தாள். குழந்தை அவனைப் பார்த்து கையசைத்துச் சிரித்தது. அவன் நெருங்கி வந்தான், ''வா பாப்பா...'' என்று கூப்பிட்ட வுடன் குழந்தை அவனிடம் தாவியது. அவன் தாடியைத் தொட்டுச் சிரித்தது.

குருநாதனின் மனைவி புன்னகைத்தாள். பதிலுக்கு தாண்டவனும் புன்னகைத்தான். ''உன் குழந்தையின் அடி வயிற்றில் என் கத்தி பதிந்திருக்கிறது. அது உயிருடன் இருக்க வேண்டுமென்றால் கத்தாதே. ரகளை செய்யாதே. பேசாமல் என்னுடன் சிரித்தபடி வெளியே வா...''

குருநாதனின் மனைவி உறைந்தாள். ''என் குழந்தை...''

''ஷ்ஷ்... கூட்டம் கூடினால் குழந்தையின் குடல் வெளியே வந்து விடும்... வேண்டாமென்றால் நீ என்னுடன் வெளியே வா... உன்னை வீட்டிலிருந்து

தொடர்ந்து கொண்டிருப்பது இந்த சந்தர்ப்பத்திற்காகத் தான்.''

அவள் அவன் பின்னே மெல்ல நடந்தாள்.

வெளியே வந்ததும் கேட்டான். "உன் புருஷன் எங்கே?"

''தெரியாது.''

''கத்தி கிழித்துவிடும்...''

''சத்தியமாய் தெரியாது... போன் நம்பர் மட்டும்தான் கொடுத்தார். அதுவும் எமர்ஜன்ஸி என்றால் தொடர்பு கொள்ள...''

''அந்த நம்பரைச் சொல்...''

சொன்னாள்.

''நான் அந்தக் காரில் ஏறிப்போவேன். நீ கத்தக்கூடாது. கத்தாமல் உன் வீட்டுக்குப் போ. அங்கே குழந்தையை விட்டு வைப்பேன். நடுவில் யாருக்காவது சொன்னால், குழந்தை க்ளோஸ்...''

''ஐயோ!''

''அழாதே...''

தாண்டவன் குழந்தையுடன் காரை நோக்கி வேகமாக நடந்தான்.

அவன் பின்னாலேயே ஓடினாள். ''குழந்தையைக் கொடுத்து விடு... நான் சத்தியமாக யாரிடமும் சொல்ல மாட்டேன்'' கெஞ்சினாள்.

''சொன்னால் மறுபடி வருவேன்'' அவன் கடைசி தருணத்தில் குழந்தையை அவளிடம் தூக்கிப் போட்டு விட்டு காரில் ஏறினான்.



கார் சீறிப் புறப்பட்டது.

* * *

தொலைபேசி நம்பர் கிடைத்த பிறகு அந்த இடத்தைக் கண்டு பிடிப்பது தாண்டவனுக்கு சுலபமாக இருந்தது. அவனுக்கு உதவுவதற்காக டெலிபோன் துறையில் ஆட்கள் இருந்தார்கள்.

தாம்பரத்தில் வெளிவட்டத்தில் புதிதாய் உருவாகிக் கொண்டிருந்த ஒரு பேட்டையில் சற்று ஒதுக்குப்புறமான வீடு.

அந்த வீட்டை எப்படித் தாக்க வேண்டும் என்று திட்டமிடுவதற்கு முன் அந்த வீடு எப்படி அமைக்கப் பட்டிருக்கிறது என்று புரிந்து கொள்ள வேண்டும் என்று தாண்டவன் தீர்மானித்தான்.

தாண்டவன் மிகுந்த நம்பிக்கையுடன் செயல்பட்டான்.

## 13

தேவகி தன் கையிலிருந்து ஏஸ் ஸ்பேடை இறக்கி னாள், ''இப்பொழுது?'' என்றாள்.

தன் கையிலிருந்து சீட்டுகளைக் கீழே போட்டான் விசுவஜித். ''மூன்று ஆட்டங்களாக நீயே ஜெயித்துக்

கொண்டிருக்கிறாய்... ச்சே... அவன் குரலில் செல்லமான எரிச்சல் இருந்தது.

தேவகி பலமாக சிரித்தாள். சந்தோஷமாக மீண்டும் சீட்டுகளைக் கலைத்துப் போடத் துவங்கினாள்.

இரண்டு நாட்களாகிறது - இந்த வீட்டிற்கு அவளை அழைத்து வந்து, அவர்களுக்கு நடுவில் இருக்கும் இறுக்கம் தளர்வதற்கு ஒரே வழி அவளை இயல்புக்குக் கொண்டு வருவதுதான் என்று தீர்மானித்தான், விசுவஜித். சீட்டுக்கட்டு வாங்கி வரச் சொல்லி வெவ்வேறு ஆட்டங்களை அவளுக்குக் கற்றுத் தந்தான்.

ஒரு பெண்ணைப் பாதுகாக்கச் சொன்னால், கடமையை விட்டு விட்டு ஜாலியாக அவளுடன் விளையாடிக் கொண்டிருக்கிறானே என்று வேறு யாராயிருந்தாலும் நினைப்பார்கள் என்று அவனுக்குத் தெரியும்.

ஆனால் அவன் எதிர்பார்த்தது நடந்தது. தேவகி தன் பயம் விட்டு மெல்ல மெல்ல அவனுடன் சிநேகமானாள். விளையாட்டினூடே இயல்பாகப் பேசுவது போல பேசும்போது சிவநேசன் பற்றியும், அனந்தராம் பற்றியும் அவர்கள் செய்யும் அட்டூழியங்கள் பற்றியும் மெல்ல மெல்ல விவரங்களை அவள் மனதில் ஏற்றினான். இன்ஸ்பெக்டர், இன்ஸ்பெக்டர் என்று கூப்பிடாதே, "விச்சு..." என்று கூப்பிடு என்று அவளுக்கு நெருக்கமானான்.

"விச்சு..." தேவகி முகத்தில் புன்னகை காட்டினாள். "என் வாழ்க்கையில் என்றைக்குமே நான் இவ்வளவு சந்தோஷமாக இருந்ததில்லை, விச்சு - சிறை வைத்திருக்கிறீர்கள். ஆனாலும் சந்தோஷமாயிருக்கிறேன், ஏன் விச்சு இப்படி?"



பேச்சுக்குப் பேச்சு, மூச்சுக்கு மூச்சு அவள் விச்சு என்று கூப்பிட்டு தன் உரிமையை ஊர்ஜிதம் செய்து கொள்ள முனைவது அவனுக்குப் பிடித்திருந்தது.

"ஏன்? நீயே யோசித்துப் பாரேன்..."

தேவகி கண்களை மூடி அந்த சந்தோஷத்தை அப்படியே தன் நெஞ்சிற்குள் இறக்கிக் கொண்டாள். "எனக்கு நினைவு தெரிந்தபோது நான் ஆசிரமத்தில் இருந்தேன், விச்சு. அப்பா யார், அம்மா யார் தெரியாது. ஆசிரமத்தில் தான் வளர்ந்தேன். அன்புக் காப்பகம் என்று அதற்குப் பெயர். ஒரு பெற்றோருக்குப் பிறந்திருந்தால் அத்தனை சகோதரர்கள், சகோதரிகள் கிடைத்திருக்க மாட்டார்கள் என்பது உண்மைதான். ஆனால், பதினாறு வயதுக்குப் பிறகு அன்புக் காப்பகத்திலிருந்து மகளிர் இல்லத்திற்கு மாற்றப்பட்டேன். அங்கே போனதற்குப் பிறகு எனக்கு ஏக்கம் வந்துவிட்டது. அப்பா வேண்டும், அம்மா வேண்டும், விதம் விதமாக டிரெஸ் போட வேண்டும் என்ற ஏக்கம். ஆசை பெருகப் பெருக, வசதியில்லாத காரணத்தால் புத்தி தடுமாறியது. சகவாசம் அப்படி. சிறுகச் சிறுக திருட ஆரம்பித்தேன். ஒரு முறை மாட்டியபோது இல்லத்திலிருந்து துரத்தி விட்டார்கள்.

"அன்புக்கு மிகவும் ஏங்க ஆரம்பிப்பவர்கள் மற்றவர் கவனத்தைக் கவர்வதற்காக ஏதாவது தப்பு செய்வார்கள் என்று எங்கோ படித்திருக்கிறேன். தற்கொலை முயற்சிகள், ரவுடித்தனம், திருட்டுத்தனம் எல்லாம் இந்த அடிப்படையில்தான் உருவாகின்றன. நானும் அப்படித்தான்.

ஏதோ ஒரு கம்பெனியில் பார்ட் டைம் வேலை கிடைத்தது. அறை எடுத்துத் தங்கினேன். டெம்பரரி வேலை. வேலை இல்லாத நாட்களில் திருடினேன். திருட்டுப் பணம் என் சம்பளத்தை விட சுலபமாக வந்தது. அதிகமாக வந்தது... கடைசியில் ஆசை நகைக் கடை வரை கொண்டு விட்டு விட்டது.

''இனிமேல் திருட மாட்டேன், விச்சு. போலீஸ்காரனிடம் செய்யும் சத்தியம் என்று நினைத்து ஒதுக்கி விடாதீர்கள். திருடுவது தப்பு என்பது எனக்குப் புரிந்து விட்டது. உழைத்து சம்பாதித்து சாப்பிடும்போது கிடைக்கும் நிறைவும், மரியாதையும் இதில் கிடைக்காது... ஆனால், எனக்கு யார் விச்சு வேலை தருவார்கள்?''

தேவகி ஏக்கத்துடன் கேட்டாள்.

அவள் முகத்தில் பொங்கிப் பிரவகித்த குழந்தைத்தனம் விசுவஜித்தை அசைத்தது. அப்படியே அவளை மடியில் தள்ளி, ஆதரவாக முதுகை வருடிக் கொடுத்து ''நான் இருக்கிறேன், கண்ணம்மா...'' என்று அன்பாகச் சொல்ல வேண்டும் போல் இருந்தது. அவனுடைய நெகிழ்ச்சியை அவள் எப்படிப் பிடித்தாள் என்பது தெரியவில்லை.

''விச்சு, நான் கேட்டால் தப்பாக நினைக்க மாட்டீர்களே?''

''என்ன?'' அவன் குரல் கனத்திருந்தது.

''ஒரு ஐந்து நிமிடம் உங்கள் மடியில் நான் படுத்துக் கொள்ளலாமா?'' - அவள் குரலில் இருந்த ஏக்கம் அவனை இம்சை பண்ணியது.



''ம்'' என்றான்.

தேவகி சீட்டுக் கட்டை கீழே எறிந்து ஒதுக்கினாள். இரண்டு கைகளையும் தலைக்குக் கீழ் கொடுத்து அவன் மடியில் ஒருக்களித்துத் தலை வைத்தாள். குறுகிப் படுத்து கண்களை மூடிக் கொண்டாள்.

விசுவஜித் நடுங்கும் விரல்களை மெல்ல அவள் புஜத்தில் வைத்து தடவிக் கொடுத்தான். முதுகை வருடிக் கொடுத்தான்.

தேவகியிடமிருந்து விசும்பல் சத்தம் வந்தது.

''தேவகி... என்ன இது?''

அவள் விசும்பல் பெரிதானது. ''இந்த மடி எனக்கு ஐந்து நிமிடத்திற்கு மட்டும்தான் கிடைக்குமா விச்சு?''

''ச்சீ... ஏன் அப்படிச் சொல்கிறாய்?'' - விசுவஜித் உணர்ச்சியினால் அலை மோதப்பட்டுக் கொண்டிருந்தான். பிற்பாடு புத்தி பூர்வமாக அந்தக் காட்சியை மறுபடி கற்பனை செய்து பார்த்தால் அதே போல் நடந்து கொண்டிருப்பானா என்று சந்தேகம். அன்பு அலைக்கழிக்கும் போது புத்தியின் இடக்கு இல்லை.

''நீங்கள் யாரைக் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறீர்கள் விச்சு?''

''சிந்தியா... அவள் ஒரு நர்ஸ்... உன்னிடம் நேற்றே சொன்னேனே...''

''உங்கள் கல்யாணத்திற்கப்புறம் என்னை மறந்து விடுவீர்கள் தானே?''

"எப்படி மறக்க முடியும்? உனக்கும் ஒரு நல்ல பைய னாகப் பார்த்து கல்யாணம் செய்து வைக்க வேண்டியது என் பொறுப்பு இல்லையா?"

"கல்யாணம் பண்ணிக் கொடுத்து என்னைத் துரத்தி விடுவீர்களா?"

"ஏன் உன் கேள்விகள் எல்லாவற்றிலும் சந்தேகம் தான் இருக்கிறது?"

"என் வாழ்க்கை அப்படி அமைந்து விட்டது, விச்சு..."

"நீ கல்யாணம் பண்ணிப் போன பிறகும் எந்த நிமிடம் வேண்டுமானாலும் இந்த விச்சுவைப் பார்க்க நீ வர லாம்..."

"வந்தால் மடி கிடைக்குமா?"

"மடி கேட்டால் மடி கிடைக்கும். தோள் கேட்டால் தோள் கிடைக்கும்."

"சிந்தியா ஒன்றும் சொல்ல மாட்டாளா?"

"சிந்தியா மெச்சூர்டு கேர்ள். ஒரு அழகான நட்பைப் புரிந்து கொள்ளும் பக்குவம் அவளுக்கு உண்டு."

"இதைப் போன்ற ஒரு ஆதரவான மடி கிடைக்க இருபது வருடங்களாக ஏங்கிக் கொண்டிருக்கிறேன், விச்சு..." - அவள் முதுகு மறுபடியும் குலுங்க ஆரம் பித்தது.

விசுவஜித் அந்த முதுகை மீண்டும் வருடிக் கொடுத் தான். "முன்பை விட இப்போது உனக்காக நான் அதிகம் கவலைப்பட ஆரம்பித்து விட்டேன், தேவகி... உன்னை பத்திரமாக பாதுகாக்க வேண்டும்..."



தேவகி அவன் மடியில் புரண்டு நிமிர்ந்தாள். "நாளைக்கே நான் சாட்சி சொல்ல ரெடி விச்சு..."

"வெரிகுட்... நான் கமிஷனரிடம் சொல்லி விடு கிறேன்..."

விசுவஜித்தின் குரலில் அன்பு கலந்திருந்தது.

* * *

தாண்டவன் கண்களில் சற்று திக்கான கூலிங் கண்ணாடி அணிந்திருந்தான். உண்மையில் அவை மூக்குக் கண்ணாடிகள் இல்லை. மினி பைனாக்குலர்கள். அந்த லென்ஸ்கள் வழியே பார்த்தபோது, அவனால் அந்த வீட்டிற்குள் பார்க்க முடிந்தது. சுலபமாகப் பார்க்க முடிந்தது.

இன்ஸ்பெக்டரின் மடியில் அந்தப் பெண் படுத்திருப் பதும், அவள் முதுகை அவன் வருடி வருடிக் கொடுப்பதும் இங்கிருந்து தெரிந்தது.

தாண்டவன் ஒரு டெலிபோன் கம்பத்தின் உச்சியில் காக்கி டிராயரும், சட்டையும் அணிந்து உட்கார்ந்திருந் தான். கையில் இருந்த கட்டிங் ப்ளையரால் அவ்வப்போது ஒயரை முடுக்கி வேலை செய்வதாக காண்பித்துக் கொண்டாலும், அவன் கவனம் அந்த வீட்டிலேயே இருந்தது.

வீட்டின் அமைப்பு அவனுக்குப் புரிந்தது.

கீழே ஒரு தளம். முதல் மாடியில் இரண்டு அறைகள்.

மாடியில்தான் இன்ஸ்பெக்டரும், சாட்சி சொல்லும் பெண்ணும் இருந்தார்கள். கீழ் தளத்தில் நான்கைந்து தலைகள் மப்டியில் தெரிந்தன. அவர்கள் அத்தனை பேரிடமும் ஆயுதங்கள் இருக்கும். யாரும் அந்த வீட்டிலிருந்து வெளியேறுவதாகத் தெரியவில்லை. அங்கேயே தங்கியிருக்கிறார்கள், போலும்...

சாப்பாடு வாங்கி வருவதற்கு கூட யாரும் வெளியே போகவில்லை, அவர்களே சமைத்து, அதை பரிசோதித்த பின் தான் அந்தப் பெண்ணுக்குக் கொடுப்பார்கள் என்று சாம்பமூர்த்தி சொன்னது நினைவுக்கு வந்தது.

அந்த வீட்டின் அருகே காலி மனை. அதற்குப் பக்கத்தில் ஒரு காய்கறித் தோட்டம். அதற்கும் அடுத்த மனையில் வீடு.

அந்த வீட்டை நெருங்குவது கஷ்டம்...

தாண்டவனின் பார்வை அந்த வீட்டின் ஒவ்வொரு சதுர அங்குலத்தையும் ஸ்கேன் செய்தது. திடீரென்று அவன் கண்கள் பிரகாசமாயின.

அட, இப்படி ஒரு வழி இருக்கிறதா?

அவன் உதடுகளில் நம்பிக்கைப் புன்னகை விரிந்தது.

இந்த முறை அவன் திட்டம் தவறப் போவதில்லை என்று மனதிற்குள் ஒருமுறை சொல்லிக் கொண்டான்.



# 14

அனந்தராம் கட்டிலில் நிமிர்ந்து உட்கார்ந்திருந்தான். டாக்டரை அருகே கூப்பிட்டான். வாயை மெல்ல அசைத்து நிறைய காற்றும், கொஞ்சம் குரலுமாகப் பேசினான்.

''டாக்டர், எனக்கு ஒரு ஹெல்ப் பண்ண முடியுமா?''

''பண்ண முடியுமாவா? உங்கள் அண்ணனுக்கு நான் எவ்வளவு கடமைப்பட்டிருக்கிறேன் என்று எனக்குத்தான் தெரியும். சொல்லுங்கள். செய்யக் காத்திருக்கிறேன்...''

''அன்றைக்கு இன்ஸ்பெக்டர் வந்திருந்தபோது அவரைப் பார்க்க ஒரு நர்ஸ் வந்தாளே...''

''சிந்தியா, இன்ஸ்பெக்டரும் அவளும் லவ் பண்ணுகிறார்கள் என்று கேள்வி...''

''அந்த நர்ஸை இந்த ரூமுக்கு டூட்டி போட முடியுமா?''

''இந்த ரூமிற்கா? போடலாமே...'' - டாக்டர் கொஞ்சம் தயங்கினார்.

''நான் அவளை சற்று நெருக்கமாகப் புரிந்துகொள்ள விரும்புகிறேன்...''

''நீங்கள் கேட்டு இல்லை என்று சொல்ல முடியுமா? இன்றைக்கே அவளுக்கு டூட்டி மாற்றி விடுகிறேன்...''

அனந்தராமின் உதடுகளில் குரூரமான புன்னகை உருவானது.

* * *

சிந்தியா முகத்தில் ஆட்சேபம் காண்பித்தாள்.

''ஏன் டாக்டர் திடீரென்று என்னை டூட்டி மாற்று கிறீர்கள்?''

''இதற்கெல்லாம் உனக்குக் காரணம் சொல்லிக் கொண்டிருக்க முடியுமா? ப்ளீஸ் ரிப்போர்ட் தேர்...''

சிந்தியா மனதிற்குள் சிரித்தாள். முட்டாள் டாக்டரே, நானே அந்த ரூமிற்கு டூட்டி மாற முடியுமா என்று கேட்க லாம் என்றிருந்தேன். விசுவஜித் அங்கே வந்து போகிற வர்களைப் பற்றிக் குறிப்புகள் எடுக்கச் சொல்லியிருந்தார். வேறு யாரையோ கேட்பதை விட நானே அங்கே இருந்தால் எவ்வளவு சவுகரியம். ஆனால், உடனே நான் சந்தோஷத்துடன் சரி என்று சொன்னால் உங்களுக்கு சந்தேகம் வந்து விடும். அதற்காகத்தான் இந்த அப் ஜெக்ஷன்.

''சரி டாக்டர்...'' என்றாள், முகத்தில் மாற்றம் காட் டாமல்.

* * *

அனந்தராம் புன்னகைக்க தன் இடது கன்னம் ஒத்துழைக்கவில்லையே என்று வருத்தப்பட்டான். இல்லாவிட்டால் சிந்தியாவைப் பார்த்து ஒரு வெற்றிப் புன்னகை வீசியிருக்கலாம்!



அவள் டூட்டிக்கு வந்த பிறகு வேண்டுமென்றே கட்டிலிலிருந்து இறங்கியவுடன் தலை சுற்றுபவன்போல தள்ளாடிக் கட்டிலில் உட்கார்ந்து விட்டான். அவள் அவனைத் தொட்டு படுக்கையில் சாய்த்தபோது, கள்ளத் தனமாக அந்தத் தொடுகையை ரசித்தான். ஏய் இன்ஸ் பெக்டரு, உங்காளு இப்ப என்கிட்டே. என் விரல் அசைப்புக்கு ஏத்த மாதிரி டான்ஸ் ஆடுவா, பார்க்கறியா?

கட்டிலில் உட்கார்ந்து பெட் பேன் எடுக்கச் சொல்லி அவன் சிறுநீரை அவளை விட்டு பாத்ரூமில் கொண்டு கொட்டச் சொல்லி அற்பத்தனமாக சந்தோஷப்பட்டான்.

சிந்தியா நர்ஸ். அவள் மனம் இதற்கெல்லாம் பக்குவப் பட்டிருந்தது. நோயாளிகளை அவள் அருவருப்புடன் பார்த்ததே இல்லை. அருவெறுப்புடன் ஒதுக்கியதே இல்லை. அதனால் அனந்தராமன் சேஷ்டைகளுக்குக் கவலைப்படாமல் அங்கே டூட்டி பார்க்கத் தொடங்கினாள்.

* * *

மாலை நேரம்.

''சிஸ்டர்...'' அனந்தராமன் கூப்பிட்டான். குரல் பிசி றடித்தது.

''யெஸ்?''

''எனக்கு போரடிக்கிறது. புத்தகம் படிக்க வேண்டும் போலிருக்கிறது. ஒற்றைக் கண் மூடியிருப்பதால் கொஞ்சம் படித்தாலும் எரிச்சலெடுக்கிறது. நீங்கள் கொஞ்சம் எனக்காக உரக்கப் படிக்க முடியுமா?'' பற்கள் வழியே பேசினான்.

அவன் நீட்டிய ஆங்கிலப் புத்தகத்தை சிந்தியா கையில் புன்னகையுடன் வாங்கினாள். அந்தப் புத்தகம் பற்றி அவள் கேள்விப்பட்டிருக்கிறாள். படுக்கையறைக் காட்சி கள் அதிகம் இருக்கும். அதை சிந்தியா படிக்கும்போது அவனுக்கு ஒரு வக்கிரமான திருப்தி கிடைக்கப் போகிறது. கிடைக்கட்டும்!

அவள் புத்தகம் எடுத்து அவன் அடையாளம் வைத்த பக்கத்தை பிரித்தாள். படிக்கத் துவங்கியபோது, போன் ஒலித்தது.

''யெஸ்?'' என்றாள், ரிசீவர் எடுத்து,

''சிந்தியா, உனக்கு டைரக்ட் லைனில் போன்...''

''இதோ வருகிறேன்...'' ரிசீவர் வைத்தாள். அனந்த ராமிடம் சொல்லிக் கொண்டு வெளியே வந்தாள். ஸ்டாஃப் ரூமில் இருந்த டெலிபோனில் ரிசீவர் எடுத்தாள்.

''ஹலோ...''

''ஹாய் சிந்தியா - நான் தான் உன் லவர் பாய்.''

''என்ன அதிசயமாய்?''

''காய் கனிந்து விட்டது...'' என்றான், விசுவஜித் மறுமுனையில். ''தேவகி சாட்சி சொல்ல ஒத்துக் கொண்டு விட்டாள். நாளைக்கு கோர்ட் போய்விட்டு வந்து விட்டால் அப்புறம் நான் கொஞ்சம் ஃப்ரீயாகி விடு வேன்.''

''நான் ஒரு நல்ல நியூஸ் சொல்லட்டுமா? என்னை உங்கள் வில்லன் ரூமிலேயே பூட்டி போட்டிருக் கிறார்கள்...''



''எக்ஸலன்ட். அந்தப் பக்கமே நீ போகக்கூடாது என்று நினைத்தவன் நான். ஆனால், நீ இருப்பதும் நல்லது தான். கண்களையும், காதுகளையும் திறந்து வைத்திரு. அலர்ட்டாக இரு... ரிசீவரை வைக்குமுன் ஒரு முத்தம் கிடைக்குமா?''

''போனில் கிடையாது... வேண்டுமானால் நேரில் வரலாம்'' என்றாள். ரிசீவரை புன்னகையுடன் வைத்து விட்டு, அனந்தராமின் ரூமுக்குள் நுழைந்தாள்.

* * *

காலைச் சூரியன் தன் இதமான கிரணங்களை ஜன்னல் வழியே உள்ளே எறிந்தது.

அந்த வீடு சுறுசுறுப்பாக இருந்தது.

விசுவஜித் தன் ஷூக்களுக்குப் பாலீஷ் ஏற்றிக் கொண்டே பேசினான்.

''கமிஷனரிடம் பேசி விட்டேன், தேவகி. இன்னும் சற்று நேரத்தில் புல்லட் ப்ரூஃப் வண்டி வந்து விடும். நேரே கோர்ட்டிற்குப் போகிறோம். கோர்ட்டில் ஜட்ஜின் தனியறையில் பார்வையாளர்கள் இல்லாத வசதியுடன் நீ சாட்சி சொல்கிறாய். அங்கிருந்து நீதிபதி, நீ, போலீஸ் மூவரும் நேரே ஆஸ்பத்திரி போகிறோம். நீதிபதியின் முன்னிலையில் நீ அனந்தராமைப் பார்க்கிறாய். அவனைத் தான் கொலை செய்யும் இடத்தில் பார்த்தாயா என்று உறுதிப் படுத்துகிறாய். அங்கிருந்து நாம் திரும்பு கிறோம். ப்ரோகிராம் பிடித்திருக்கிறதா, கைதியே?''

''பிடித்திருக்கிறது மெய்க்காப்பாளனே!'' என்றாள் தேவகி. ''நான் குளித்துவிட்டு வந்து விடுகிறேன்.''

''அஃஃப்கோர்ஸ். இல்லாவிட்டால் நீதிமன்றமே நாறும்...''

''ச்சீ'' தேவகி அவன் மீது சோப்பை எறிந்தாள். நச்சக் என்று அது அவன் மார்பில் மோதி கீழே உருண்டது. தேவகி வந்து சோப்பை பொறுக்கும்போது அவள் பின்னந் தலையில் செல்லமாகத் தட்டினான், விசுவஜித்.

தேவகி டவலையும் எடுத்துக் கொண்டு பாத்ரூமிற்குள் நுழைந்தாள்.

* * *

அந்த தருணத்திற்காகவே காத்திருந்தான் தாண் டவன்.

தாண்டவன் இப்போது டெலிபோன் கம்பத்தின் மீது இல்லை. இன்னும் அருகிலேயே இருந்தான்.

புறநகர்ப்பகுதி என்பதால் இங்கே இன்னும் மின்சாரக் கம்பிகள் பூமிக்கடியில் போடப்படவில்லை. அங்கங்கே தந்திக் கம்பங்கள் நட்டு, ஒயர்கள் இழுத்துக் கட்டப்பட்டு மின்சாரம் பயணம் செய்து கொண்டிருந்தது. விசுவஜித் தேவகியைத் தங்க வைக்க தேர்ந்தெடுத்த வீட்டின் மிக அருகிலும் அப்படி ஒரு மின்சாரக் கம்பம் இருந்தது. இணைக் கம்பிகளாக மின்சாரக் கம்பிகள் கட்டப்பட் டிருந்தன. வீட்டின் வெளி சுவர்களில் அங்கங்கே பிராக் ஜெக்ட்களால் அணைக்கப்பட்டு தண்ணீர் குழாய்கள் இறங்குவதை தாண்டவன் கவனித்திருந்தான். பாத் ரூமிற்குள் போகும் குழாய் எது என்பதை பாத்ரூம் ஜன்னலை வைத்து தீர்மானித்து விட்டான்.



மின்சாரக் கம்பத்திற்கும் அந்தக் குழாய்க்கும் ஆறடி இடைவெளி தான் இருந்தது.

தாண்டவன் தடிமனான ஒரு கேபிள் ஒயர் வாங்கி வந்திருந்தான். அதன் முனையில் பிளாஸ்டிக் ஸ்லீவ் களைக் கத்தரித்து, நிர்வாணமாக காப்பர் ஒயர்கள் தெரிந்தன. அவற்றுடன் வலுவான கம்பிகளையும் இணைத்துச் சுற்றி நண்டுக் கால்கள் போன்றதொரு அமைப்பை ஏற்படுத்தியிருந்தான்.

காக்கி உடுப்பில் கையில் ரப்பர் கிளவுஸ் அணிந்து ஒவ்வொரு மின்சாரக் கம்பமாக ஏறி நட்டுகளை முடுக்கிக் கொண்டே வந்ததால் அவன் மின்சாரத்துறை ஊழிய னாகவே கருதப்படுவான் என்று தைரியமாயிருந் தான்.

இப்போது இந்த வீட்டருகே இருந்த கம்பத்தில் ஏறி அதன் T வடிவ ஸ்டாண்டில் இருபுறமும் கால்களைப் போட்டுக் கொண்டு சௌகரியமாக உட்கார்ந்தான். வீட்டை நோட்டமிட்டான். தேவகி சோப்பையும் டவலை யும் எடுத்துக் கொண்டு பாத்ரூமில் நுழைந்ததும் செயல் பட்டான்.

கொண்டு வந்திருந்த கேபிளை சுழற்றி வீட்டை நோக்கி லாவகமாக எறிந்தான். நண்டுக் கால் அமைப்பு பாத்ரூம் பைப்லைன் கெட்டியாகக் கவ்விக் கொண்டது. கேபிளின் இன்னொரு முனை அவனிடம் இருந்தது. கேபிளின் மின்சாரம் பாயாத பகுதியைக் கையில் கெட்டியாகப் பிடித்து அதன் காப்பர் முனைகளை ஓடும்

மின்சாரக் கம்பிகளின் மீது வைத்தான். மின்சாரம் இப்போது பாத்ரூம் குழாயில் அபரிமிதமாகப் பாயத் துவங்கியது.

* * *

விசுவஜித் ஷூக்களை வைத்துவிட்டு எதேச்சையாக நிமிர்ந்தவன் ஜன்னல் வழியே மின்சாரக் கம்பத்தில் இருந்த ஆளை கவனித்தான். யாரோ மின்சார ஊழியன் என்று அலட்சியப்படுத்தியிருப்பான் - அவன் மட்டும் இந்த வீட்டையே நோட்டமிட்டுக் கொண்டிருக்கா விட்டால்,

போலீஸ் மூளை உடனடியாக சந்தேகப்பட்டு, ஜன்னல் அருகில் ஓடிப்போய் வெளியே பார்த்தான். அவன் கண்கள் விரிந்தன.

மின்சாரக் கம்பத்திலிருந்து ஒரு கேபிள் கிளம்பி வீட்டுச் சுவரில் தொற்றி - என்ன இது? உடனே க்ளிக் க்ளிக் என்று மூளையில் பல் சக்கரங்கள் பொருந்தின.

பாத்ரூம் குழாயில் மின்சாரம் பாய்ச்சப்படுகிறது.

விசுவஜித் ஜன்னலைத் திறந்தான். ''டேய்!'' என்று கத்தினான். தாண்டவன் திரும்பிப் பார்த்தான்.

''என்னடா பண்ணுகிறாய்?''

விசுவஜித்தின் குரல் கேட்டு கீழேயிருந்த காவலர்கள் வெளியே ஓட, விசுவஜித் பாத்ரூம் கதவிற்கு பாய்ந்தான்.

''தேவகி, குழாயைத் தொடாதே!'' என்று அவன் கத்துவதற்குள் பாத்ரூமிலிருந்து அமானுஷ்யமான அந்த அலறல் எழுந்தது.



விசுவஜித் தோளால் கதவை மோதினான். காண்டா மிருகம் போலப் பாய்ந்து இடித்தான். ஆஸ்பெஸ்டாஸ் கதவு பிளந்தது.

உள்ளே அவன் கண்ட காட்சி அவனை உறைய வைத்தது.

தேவகி குழாயின் மீது சரிந்திருந்தாள். அவள் உடலில் மின்சாரம் பாய்ந்து கொண்டிருந்ததற்கு அடையாளமாக உடலில் அதிர்வுகள் புலப்பட்டன. உடல் விறைத்து பலகை போல் நிமிர்ந்திருந்தது.

பாத்ரூமில் அடியெடுத்து வைத்தாலே மின்சாரம் அவனையும் பிடித்துக் கொள்ளும் என்று விசுவஜித் அந்த நெருக்கடியான நொடியிலும் புரிந்து கொண்டான். வெளியே துப்பாக்கி வெடிக்கும் சப்தம் கேட்டது. இரண்டாவது தோட்டா ஒலித்ததும், யாரோ பொத்தென்று கீழே விழும் சத்தம்.

தேவகியின் உடம்பில் அதிர்வுகள் நின்றன.

விசுவஜித் உடைந்த கதவு எடுத்து தேவகியைத் தள்ளினான். மின்சாரம் நின்று போயிருந்ததால் தேவகி கீழே சரிந்தாள்.

விசுவஜித் பாத்ரூமிற்குள் பாய்ந்தான். துணி எடுத்து தேவகியின் உடலை மூடினான். அவள் நெஞ்சில் காது வைத்துப் பார்த்தான். இதயம் நின்றிருந்தது. இதயத்தை மார்பில் குத்தினான். அவள் வாய் வழியே மூச்சை செலுத்திப் பார்த்தான்.

தேவகியின் உடலில் எந்த அசைவும் இல்லை. அவள் குழாயில் சாய்ந்த பகுதி உடல் கருகியிருந்தது. அவள்

வாய் பிளந்தபடி இருந்தது. கண்கள் விறைத்தபடி இருந்தன.

"தேவகி, தேவகி, தேவகி..." அவள் கன்னங்களில் தட்டினான். மறுபடி மறுபடி தட்டினான். டாக்டரிடம் சொல்ல போனுக்கு ஓடினான். பரபரப்பாக பேசிவிட்டு ஜன்னலுக்கு ஓடினான். குனிந்து பார்த்தான்.

காவலர்கள் சுட்டதில் முழங்கால்களுக்குக் கீழே தோட்டாக்கள் பாய்ந்து தாண்டவன் மின்சாரக் கம்பத்திலிருந்து கீழே விழுந்து கையையும் முறித்துக் கொண்டு கிடந்தான்.

உயிரற்ற கேபிள் அவிழ்ந்து தொங்கிக் கொண்டிருந்தது.

விசுவஜித்தின் உடம்புக்குள் சூறாவளி ஒன்று உருவானது. உணர்ச்சிகளின் வேகத்தில் கட்டுப்பாடுகள் காணாமல் போயின. ஆத்திரம் அவனை செலுத்தியது. ரிவால்வரை எடுத்தான்.

ஜன்னல் வழியே குனிந்து, "டேய் ராஸ்க்கல்" என்று கூவினான். அவன் பார்வையிலிருந்து மறைக்கக்கூடாது என்று காவலர்கள் இடம் விட்டு ஒதுங்க, இப்போது நேர்ப்பாதையில் தாண்டவன். இயலாத நிலையில் பரிதாபமாக அவன் விசுவஜித்தைப் பார்த்தான்.

அந்த முகம் விசுவஜித்தின் மூளைக்குள் மணி அடித்தது. இவன் தானே அன்றைக்கு வக்கீல் உடையில் கோர்ட்டில் கேசவையும், போலீஸ்காரனையும்... இவனே தான்...



விசுவஜித் யோசிக்காமல் விசையை இழுத்தான். துப்பாக்கியிலிருந்து விடுபட்ட தோட்டா தாண்டவனின் நடு நெற்றியில் ப்ளப் என்று ஒரு சிகப்புப் பொத்தல் போட்டது.

தாண்டவன் உறைந்தான்.

விசுவஜித் துப்பாக்கியை எறிந்துவிட்டு பாத்ருமிற்கு விரைந்தான்.

தேவகி எந்த அசைவுமின்றிக் கிடந்தாள்.

**ஒரு ஐந்து நிமிடம் உங்கள் மடியில் படுத்துக் கொள்ளலாமா விச்சு?**

விசுவஜித் தேவகியின் உடல் மீது விழுந்து அழலானான்.

## 15

சிவநேசன் பொங்கிச் சிரித்தார்.

"அந்தப் பெண் அவுட். அனந்தராமிற்கு எதிராக நிறுத்த போலீஸ் மலை போல நம்பிக் கொண்டிருந்த அந்த தேவகி க்ளோஸ். ஆனால், விசுவாசமான பையன் தாண்டவனும் செத்துப் போனதுதான் கஷ்டமாயிருக்கிறது. ஆனால், அதுவும் ஒருவிதத்தில் நல்லதுதான். என்னை அந்தக் கொலையுடன் தொடர்பு படுத்த எந்த ஆளும் இப்போது உயிருடன் இல்லை..."

''உங்கள் நல்ல மனதிற்கு எல்லாம் நல்லபடியாக நடக்கும் ஐயா...'' என்றார் செக்ரட்டரி, காவிப் பற்கள் தெரிய.

''போங்கள்... போய் என் தம்பியிடம் முதலில் விஷயத்தைச் சொல்லுங்கள்...'' சிவநேசனின் முகம் பூரித்திருந்தது.

* * *

''நோ விசுவஜித். நீ உணர்ச்சி வசப்பட்டிருக்கக் கூடாது. தாண்டவனை உயிரோடு பிடித்திருந்தால் நம் பக்கம் கொஞ்சம் ஸ்ட்ராங்காக இருந்திருக்கும். நீ அவசரப்பட்டு எல்லாவற்றையும் கெடுத்து விட்டாய்!''

கமிஷனரின் குரலில் கோபத்தை விட வருத்தம்தான் அதிகம் தொனித்தது.

''ஸாரி சார்...''

''தேவகி இறந்து போனது எனக்கும் ஷாக்கிங்காகத் தான் இருக்கிறது... ஆனால் சிவநேசனையும், அவன் தம்பியையும் மறுபடியும் விரலிடுக்கு வழியே நழுவ விட்டு விட்டோமே...''

''ஐ'ம் ரியல்லி ஸாரி சார்... என் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த முடியாமல் நடந்து கொண்டேன் சார்... நீங்கள் என்ன தண்டனை தந்தாலும் ஏற்றுக் கொள் கிறேன்...''

''ஒரு நாணயமான போலீஸ் ஆபீசருக்கு பரிசு தர முடியாமல் போனாலும் பரவாயில்லை. தண்டனை தருவது நியாயமேயில்லை. தாண்டவன் தப்பிக்கப் பார்த்



தான், வேறு வழியில்லாமல் சுட வேண்டி வந்தது என்று ரிப்போர்ட் எழுதி விடலாம். டோண்ட் ஒர்ரி...''

கமிஷனர் அவன் தோளில் தட்டிக் கொடுத்த போதிலும், விசுவஜித் மிக அவமானமாக உணர்ந்தான்.

அவன் உடம்பில் எப்போதும் இருக்கும் போலீஸ் மிடுக்கு இப்போது இல்லை. தளர்ந்த நடையில் வெளியேறினான்.

* * *

''உண்மையாகவா?''

''அனந்தராமிற்குக் கூவ வேண்டும் போலிருந்தது. ஆனால், கன்னத்தில் போடப்பட்டிருந்த கட்டு அவனைத் தடுத்தது.

''ஆமாம் தம்பி. இருந்த ஒரே நேரடி சாட்சி அந்தப் பெண்தான். அதற்கு பாத்ரூமில் ஷாக் அடித்து செத்துப் போய் விட்டது. எல்லாம் தாண்டவன் உபயம். தாண்டவனும் போலீஸ் கையில் மாட்டி செத்து விட்டான். அண்ணன் உடனே விஷயத்தை உன்னிடம் சொல்லி விட்டு வரச் சொன்னார்.''

முகத்தின் இறுக்கமான கட்டுப்பாடுகளையும் மீறி அனந்தராமின் உதடுகள் புன்னகையாகக் கோணிக் கொண்டன.

''இனிமேல் உங்கள் பேரில் கேஸ் எதுவும் இல்லை தம்பி...''

''வெரிகுட், வெரிகுட்... அந்த நர்ஸ் பெண்ணை உள்ளே அனுப்புங்கள்... அவளிடம் நான் பேச வேண்டும்...''

"அது ஏதோ போன் பேசிக் கொண்டிருந்தது நம்பி..."

* * *

சிந்தியா மெல்ல ரிசீவரை வைத்தாள்.

அவள் முகத்தில் உணர்ச்சிகள் எல்லாம் வற்றிப்போய் விட்டன.

விசுவஜித்துதான் பேசினான். வார்த்தைகள் முழுமை யாகாமல் உணர்ச்சிகளால் தாக்கப்பட்டு அவன் தொண்டை அடைத்துக் கொண்ட போது இந்த முனையில் சிந்தி யாவின் நெஞ்சில் வலித்தது. இந்தத் தோல்வியிலிருந்து மீள விசுவஜித்திற்கு பல காலம் ஆகும் என்று அவ ளுக்குப் புரிந்தது.

"யம்மா சிஸ்டரு."

குரல் கேட்டு நிமிர்ந்தாள்.

அனந்தராம் அறையிலிருந்து சிவநேசனின் செக் ரட்டரி வெளிப்பட்டார். "தம்பி உன்னைக் கூப்பிடு கிறதம்மா" என்றார்.

சிந்தியா விறைப்பாக அந்த ரூமிற்குள் நுழைந்தாள்.

"வாம்மா சிஸ்டரு..." என்றான் அனந்தராம். "உனக்கு விஷயம் தெரியுமா? என்னை எதிர்த்துக் கொண்டு ஒரு இன்ஸ்பெக்டர் இங்கே வந்தானே, அவன் கேஸ் தோற்றுவிட்டதாம். உனக்கு யாராவது சொன்னார்களா?" சற்று அதிகமான குரலில் பேசினான் அவன்.

சிந்தியா முகத்தில் எந்த உணர்ச்சியும் காட்டவில்லை.



"நீங்கள் மிகவும் ஸ்ட்ரெயின் பண்ணிக் கொள் கிறீர்கள்... உங்கள் உடம்புக்கு நல்லதல்ல..." என்றாள், அக்கறையான குரலில்.

"உண்மைதான். கன்னத்தை வலிக்கிறது. உன் பொன்னான கையால் வழக்கமாக வலி மறக்கப் போடு வாயா இன்ஜெக்ஷன், அதைப் போடு... எல்லாவற்றையும் மறந்து விட்டு தூங்குகிறேன், நிம்மதியாக."

"சிந்தியா சிரின்ஜ் எடுத்துவர வெளியேறினாள்.

* * *

தொலைபேசி ஒலிப்பதையே விசுவஜித் தாமதமாகத் தான் உணர்ந்தான். ரிசீவரை எடுத்து இயந்திரத்தனமாக "யெஸ்" என்றான்.

"விசு... நான் தான்.."

"சொல் சிந்தியா..."

"கொலை செய்தால் எத்தனை வருடம் தண்டனை கொடுப்பீர்கள் விசு?"

"சிந்தியா, என்ன கேட்கிறாய் நீ? கொலை செய்தவன் தப்பிவிட்டானே என்று கிண்டல் செய்கிறாயா?"

"இல்லை மிஸ்டர் விசுவஜித்.. போலீஸ் தவறவிட்ட ஒரு குற்றவாளிக்கு நான் தண்டனை கொடுத்து விட் டேன்..."

"வாட் டூ யூ மீன்?"

"வலி மறக்கச் செய்ய அனந்தராமிற்கு இன்ஜெக்ஷன் போட்ட போது மருந்தை மாற்றிவிட்டேன். அவன்

இப்போது நிம்மதியாக தூங்குகிறான். ஆனால், இந்தத் தூக்கத்திலிருந்து அவன் எழுந்திருக்கப் போவதே யில்லை என்று அவனுக்குத் தெரியாது. போலீஸ் மொழியில் இதற்குப் பெயர் திட்டமிட்ட கொலைதானே? எந்த செக்ஷனுக்குக் கீழ் என்னை அரெஸ்ட் பண்ணு வீர்கள், விசு?''

விசுவஜித் சரேலென்று நிமிர்ந்து உட்கார்ந்தான். அவன் முகம் பிரகாசமானது.

''சிந்தியா... அவசரப்படாதே... வேறு யாரிடமும் இதைப் பற்றி டிஸ்கஸ் பண்ணாதே.. போலீஸ் கமிஷ னரிடம் பர்ஸனலாகப் பேசி விட்டு நான் அங்கே வந்து சேரும் வரை எந்த முடிவும் எடுத்து விடாதே... தேங்க்யூ சிந்தியா... தேங்க்யூ.. தேங்க்யூ...''

''காத்திருப்பேன் விசு...'' சிந்தியாவின் புன்னகை முகத்தை அவனால் கற்பனை செய்ய முடிந்தது. விசுவஜித் பரபரப்பாக புதிய சுறுசுறுப்புடன் எழுந்தான். ஜீப்பிற்கு ஓடினான்.

ஜீப் துடித்துப் புறப்பட்ட வேகம் அவன் உணர்ச்சி களில் கொந்தளிப்பை அடையாளம் காட்டியது.

கிளை நூலகம் சங்கனூர் கோவை மாவட்ட ... கோவை மாவட்டம்